கவித்திறம் வல்ல காவலர்

வித்துவான் தண். கி. வேங்கடாசலம், எம். ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
தூய சூசையப்பர் கல்லூரி, பெங்களூர்

தண்டலை யகம்
3, கெம்ப்
~~91/1 புத்தவிகாரா~~ ரோடு, பெங்களூர்-5

ரூ. 2=25

முதற் பதிப்பு: 1960
இரண்டாம் பதிப்பு: 1963

காக்ஸ்டன் அச்சகம், சென்னை-1.

அணிந்துரை

அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்
பல்கலைக்குரிசில் திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் அவர்கள்
வழங்கியது

நண்பர் திரு. தண். கி. வேங்கடாசலம் கன்னடம் வழங்கும் நாட்டில் தமிழ்த்தொண்டு செய்யும் வாய்ப் பினைப் பெற்றுள்ளார். அங்கே தமிழ் கற்கும் கல்லூரி மாணவர்களுடைய உள்ளம் பழைய தமிழ்ப்பாக்களில் எவற்றை யெல்லாம் எண்ணி யெண்ணி இன்புறும் என்பதனை அவர் நேரே அறிந்தவர்.

பழைய தமிழகம் மூன்று பேரரசுகளாகப் பிரிந்து நின்று போராடிய கதை நம் உள்ளத்தைக் கவருவது இல்லை. ஆனுலும் அந்தப் பேரரசர்கள் தமிழில் ஈடு பட்டுத் தமிழ்ப் புலவர்களோடு கூடி மகிழ்ந்து குலாவி இன்புற்றுத் தமிழ்ப் பண்பாட்டை வளர்த்த வரலாறு உலகத்தின் உள்ளத்தையே கவருகிறது. அதிலும், ஒருசில பேரரசர்கள் பாவலராய்ப் புகழ் பெற்றதோடு, உலகம் இன்றும் போற்றும் சிறந்த குறிக்கோள்களைத் தம்முடைய பாக்களில் பாடி மகிழ்ந்து, இன்றும் உல கத்தை மகிழ்விக்கின்ருர்கள் என்ற செய்தியை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

இத்தகைய அரசர்குடியில் பிறந்த அந்தந்தப் பாவலர்களது பாடல்களை நண்பர் விளக்கி மாணவர் உள்ளத்தைக் கவர்ந்துள்ளார். அதனை — அந்த மகிழ்ச்சியைத் தமிழ் அறிந்தவர் அனைவரும் துய்ப்பதற்காகக் "கவித்திறம் வல்ல காவலர்" என்ற நூலாக்கித் தந்தார். அதன் இரண்டாம் பதிப்பு இப்போது வெளி வருகிறது. நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முன்னர் 1944 முதல் 1946 வரை தமிழ்த்துறைத் தலைவனாக இருந்தபோது இவரை மாணவராகப் பெறும்பேறு பெற்றேன். அதனால் இந்த நூலுக்கு அணிந்துரை வழங்குவது என் உரிமையும் கடனும் ஆகும்.

இந்த நூலைத் தமிழ் உலகம் இன்பத்துடன் ஓதி மகிழ்ந்து இறுமாப்பு எய்துமென்பதில் எனக்கு ஐய மில்லை. அவரும், அவர்தம் நூலும், தமிழும், உலகும், வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

அண்ணாமலை நகர்
10-4-1963

இங்ஙனம்
தெ. பொ. மீனாட்சி சுந்தரன்.

முன்னுரை

நமது பண்டைத் தமிழ் இலக்கியங்களில் புறநானூறு வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்வது. அதன் பீடுநடையிலும் பொருள் அழகிலும் உள்ளத்தைப் பறிகொடுத்தேன். இளமை முதலே அதன்கண் எனக்கு ஈடுபாடு மிகுதி. புலவர் பெருமக்கள் அதனைப் பல்வேறு கோணங்களில் வைத்துநோக்கிச் சுவைத்துள்ளனர். தமிழுலகும் பேரார்வத்துடன் அதனைப் போற்றி வருகின்றது.

புறநானூற்றிலே புலவர்களாய்க் காட்சியளிக்கும் மன்னர்கள் அறமும் திறமும் படைத்தவர்கள். அவர்களைப் பற்றி அடிக்கடி யான் எண்ணியும் பேசியும் எழுதியும் மகிழ்வதுண்டு. அவர்கள் அன்பு நெஞ்சமும் கவிதைத்திருவும் என்னைப் பெரிதும் ஈர்த்துவிட்டமையே இந்நூல் தோற்றத்துக்கு ஏதுவாயிற்று. ஆர்வம் பற்றி யான் எழுத முன் வந்தபோது டாக்டர் மு. வ. போன்ற பெரியோர்கள் மேன்மேலும் ஊக்கமூட்டி யுதவினர்.

இந்நூலைத் திறமுடன் அச்சிட்டுதவிய காக்ஸ்டன் அச்சகத்தினர்க்கும், இத்துறையில் என்னையூக்கிய என் ஆசிரியப் பெருமக்களுக்கும், அன்பர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியை அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

அணிந்துரை வழங்கி வாழ்த்திய என் ஆசிரியப் பெருந்தகையவர்கட்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலின் உயர்வு கருதி அன்பர்கள் கூறும் திருத்தங்களை ஆர்வத்துடன் வரவேற்கின்றேன். "கவித்திறம் வல்ல காவலர்" என்ற இச்சிறுநூல் புறநானூறு என்னும் புகழ்வாய்ந்த கோட்டைக்குப் புதியதோர் நுழைவாயிலாகத் தமிழுலகுக்குப் பயன்பட வேண்டும் என்பது எனது நோக்கமாகும்.

பெங்களூர்
15-4-63.

தண். கி. வேங்கடாசலன்.

உள்ளுறை

1. குழந்தைச் செல்வம்

திருமணம் ஒன்று நடைபெறுகின்றது. மணமக்கள் மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கின்றனர். மணக்கோலங்கண்டு பொங்கும் மகிழ்ச்சியில் அன்புள்ளங்கள் மணமக்களை வாயார வாழ்த்துகின்றன. அந்த வாழ்த்து எப்படியிருக்கும்? "மணமக்கள், பெற வேண்டிய செல்வமெல்லாம் பெற்றுப் பொலிக!" என்ற கருத்தைக்கொண் டிருக்கும். ஔவையார் வாழ்த்திய 'வரப்புயர' என்ற வாழ்த்திலும் நீரும், நெல்லும், குடியும், கோலும் ஆகிய செல்வம் யாவும் குறிப்பிடப்பட்டுள்ளனவே! செல்வம்பெறுக என்று பொது வாகக் கூறுதலும், இன்ன இன்ன செல்வம் இவ்விவ்வாறு பெறுக என்று விதந்து கூறுதலும் உண்டு. விதந்து கூறுங் கால், 'மக்கட்பேறு' என்னும் குழந்தைச் செல்வத்தை விடாது கூறுவர். "வடுவாழ் எக்கர் மணலினும்" பல மக்களை நன்கு பெற்று மகிழ்க என வாழ்த்துவர். ஏன்?

இன்றைய குழந்தைகளே நாளைய பெரியார்கள். நாட்டை ஆளும் நல்லவர்கள்; ஆற்றல் மிக்க வல்லவர் கள். அவர்களை நாம் பொன்னே போல் போற்ற வேண் டும். இவ்வாறு அனைவரும் கூறுகின்றனர். மார்ந்தருள்

மாணிக்கமெனப் போற்றப்படும் நேரு அவர்களும் தம் பிறந்த நாள் விழாவினைக் குழந்தையர் விழாவாகக் கொண்டு மகிழ்வதனை நாமறிவோம்.

குழந்தைகள் இல்லாதிருத்தல் கொடுமை! கொடுமையினும் கொடுமை! குழந்தைகள் பெறுத மக்கள் பெற வேண்டிய சிறந்த செல்வம் ஒன்றைப் பெறுதவரே யாவர். அவர்கள் வேறு செல்வம் அனைத்தும் பெற்றிருந்தாலும் பயனில்லை. குழந்தை பெறுதவர்களை நாம் பயன் இழந்தவர் என்றும், தவம் குறைந்தவர் என்றும், புண்ணியமில்லாப் பாவியர் என்றும் சொல்லுகின்றோம். "பிள்ளையில்லாப் பாவி" என்பது ஏட்டு வழக்கிலும் நாட்டு வழக்கிலும் பயின்றுவரும் தொடர் அன்ருே?

குழந்தைகளின் பெருமையை அவர்தம் கொஞ்சும் மழலையிலே காணலாம். பாலைப் 'பாச்சி' என்றும், சோற்றைச் 'சோச்சி' என்றும் கூறும் செவ்வாய்க் குதலையாகிய மெய்பெருமழலையின் மாண்பை உணராதார் உண்டோ? இச்சிறப்பினை நன்குணர்ந்துதான் போலும் பெரியார்களையும் கடவுளர்களையும் பாடும் போதும் புலவர் பெருமக்கள் அவர்களைப் பிள்ளையாக வைத்துப் போற்றியுள்ளனர்! பிள்ளைக்கவி என்னும் பிள்ளைத் தமிழ் நமது இன்பத் தமிழ் இலக்கியத்திலே இறவாது சிறந்து நிற்கும் பிரபந்தம் ஆகும். இம்மையிலும் மறுமையிலும் சிறப்பையும் இன்பத்தையும் தருவது குழந்தைச் செல்வம்.

இம்மை உலகத்(து) இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்(று) எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்

பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல்

என அகநானூற்றுப் பாடலில் (66) செல்லூர்க் கோசிகன் கண்ணனுர் கூறுகின்ருர்.

இவற்றையெல்லாம் நன்குணர்ந்தவர் பண்டைத் தமிழர். தமிழர் ஆட்சியில் குழந்தைச் செல்வம் கொழிக்க வேண்டும் என்ற எண்ணம் நின்று நிலவியது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டுவந்த பாண்டியன் ஒருவன் இதனை எண்ணி எண்ணி வியந்தான். உணர்ச்சியின் எல்லையை அடைந்தான். கவிதையாக முழக்கினுன். இத்தகு சீரிய மெய்த்திருவுடைமையால் அவனை அறிவுடை நம்பி என்றனர் அறிஞர். அறிவு பெற்ற அண்ணல் ஆற்றலும் கூடி நின்று ‘நம்பி’ யெனவும் போற்றப்பட்டான். அவன்தான் பாண்டியன் அறிவுடை நம்பி. அவனது ஆட்சியில்தான் நரையே பெருது வாழ்ந்துவந்தார் புலவர் பிசிர்ஆந்தையார். அவர் எவ்வளவு பெருமையாகக் கூறுகின்ருர் தம் அரசனை — அறிவுடை நம்பியைப் பற்றி! “வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்” என்றல்லவோ இசைக்கின்ருர்? அரசன் என்ருல் எப்படியிருக்க வேண்டும்? தனது குடிமக்கட்கு யாதொரு துன்பமும் நேராமல் பாதுகாக்க வேண்டும். அதனுல்தான் அரசனைத் தமிழகம் காவலன் என்றும், புரவலன் என்றும் போற்றியது. ஓரரசன் தன் ஆட்சியில் தன்னுலும், தன் சுற்றத்தாலும், பகைவராலும், கள்வராலும், கொடிய விலங்குகளாலும் குடிகட்கு ஏற்படுகின்ற ஐவகைத் துன்பங்களையும் நீக்கி அறங்காக்க வேண்டும் என்று தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான் “மாநிலங் காவலனுவான்” என்ற பாடலில் விளக்கிக்

கூறியுள்ளார். உலகப் பெரும் புலவர் வள்ளுவரும் அரசனைக் காவலனுக்கிக் காட்டுகின்ருர் :

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப் படும்

என்பது பொய்யில் புலவரின் பொருள் உரையாகும். "மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" என்று மோசிகிரனுர் பாடிய பாடலும் மன்னன் சிறப்பை எடுத்தியம்புகின்றது. துன்பம் நீக்கி ஒழுக்கத்தை நாட்டில் நிலை நிறுத்துதல் மன்னன் கடமையெனப் பொன்முடியார் "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்னும் மணிமொழிகளால் விளக்குகின்ருர். இவ்வாறு, மன்னன் (மன்னன் — நிலை நிறுத்துபவன்) தொழிலாகிய மாநிலங் காவலைத் திறம்படப் பாண்டியன் உஞற்றி வந்தான். அதனுல்தான் புலவர் பிசிராந்தையார் அவனைப் பற்றி வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்" என்று மகிழ்ந்து பெருமையுடன் கூறுகின்ருர்.

இத்தகு பெருமை வாய்ந்த வித்தகவேந்தன் பாண்டியன் அறிவுடை நம்பி தனது வாழ்க்கையின் அநுபவத்தையெல்லாம் திரட்டித் தருகின்ருன் தீந்தமிழ்ப் பாடல் ஒன்ருல். பாண்டியன் இறந்தாலும் அவன்புகழ் இறக்கவில்லை. அவன் இசைத்த அருமைப் பாடலிலே, எழுதவும் சொல்லவும் எண்ணவும் சுவைக்கும் இனிய கவிதையிலே அவன் இன்றும் நின்று நிலவுகின்ருன். என்றும் இப்படியே வாழ்வான். இறவாத திருவாழ்வை அவனுக்கு அளித்த அப்பாடலை இனிக் காண்போம்.

படைப்புப்பல படைத்துப் பலரோ(டு) உண்ணும்
உடைப்பெரும் செல்வர் ஆயினும் இடைப்படக்

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே.

உலகிலே வாழும் செல்வர்களை நன்குணர்ந்தவன் பாண்டியன். நெருங்கிப் பழகியவன். ஐம்பெருங் குழுவிலும், எண்பேராயத்திலும் அவர்களைக் கண்டவன். அவர்கள் வாழ்வை நன்கு ஆய்ந்து ஆய்ந்து அறிந்தவன். செல்வத்தின் ஒவ்வொரு வகையையும் பற்றி நன்கு சிந்தித்தவன். அதனால்தான் இவ்வாறு பாட முடிந்தது அவனால்.

ஓரிடத்தில் ஒரு பெரும் பொது நன்மைக்காக நிதி யொன்று திரட்ட விரும்புகின்றோம். அந்த நிதியின் அளவு இவ்வளவு என்று முடிவு கட்டி ஒரு எல்லையை (*Target*) வரையறை செய்துகொள்கிறோம். பலவாறு பலரிடம் பல முறை வேண்டி நிதி திரட்டுகின்றோம். குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட தொகை சேரவில்லை. எடுத்துக்காட்டாக, ஆயிரம் வெண்பொற்காசுகள் திரட்டினால்தான் அது குறையின்றி நிறைவுறும் என்று வைத்துக்கொள்வோம். ஆயிரம் திரட்ட எண்ணி அது முற்றுப் பெறாது குறையாக நின்றால் எவ்வளவு குறையென்று பார்க்க வேண்டும். ஒரு காசு குறையினும் குறைதானே ? யாரும் இனி வழங்கு தற்கு முன்வரக் காணோம். காலமும் நெருங்கிவிட்டது. என் செய்வோம் ? என் செய்வோம் ? என்று ஏங்கும் நிலை ஏற்படுகிறது. அப்போது ஒரு பெரியார் வருகின்றார். என்ன குறையென வினவுகின்றார். “ கவலை வேண்டாம். யானே அதனை நிரப்பிவிடுகிறேன் ” என்று முன்வந்து

வழங்குகின்ருர். நம் உள்ளம் மட்டிலா மகிழ்ச்சி கொள்ளுகின்றது. வாயார வாழ்த்துகின்ரேம். அவர் கொடுத்தமை ஒன்ருே பலவோ, கவலே யில்லே. ஆனுல் அதுதானே குறையை முடித்த தொகை? அத்தொகையின்றி நம் எண்ணம் நிறைவேறி இருக்காது. எதனைக்கொண்டு ஒன்றின் குறையை நிறையாக்குகின்ருேமோ அதனைப் பயக்குறை என்பர் அறிஞர். பாண்டியனும் அதனைத்தான் கூறுகின்ருன். எவ்வளவு செல்வம் பெற்றிருப்பினும் குழந்தைகளைப் பெருதவர்க்கு அவர்தம் வாழ்வைக் குறைவின்றி நிரப்பும் 'பயக்குறை' இல்லையாகும். குறை முடிக்கும் "பயக்குறை" குழந்தைச் செல்வமே ஆகும் என்று கூறுகின்ருன் கொற்றவன். "குழந்தை இல்லாதார் வாழ்வு குறை வாழ்வே. என்ன பெற்றும் பயனில்லை. பொன்னும் புகழும் பிறவும் இருந்தும் என்ன பயன்? அவர்களைச் செல்வர் என்பது யாங்ஙனம்? இயலாதே!" என்று புகழேந்திப் புலவரும் கூறியுள்ளார். வள்ளுவப் பெருந்தகையாரும், "பெறும் அவற்றுள் யாம் அறிவ தில்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற" என்று போற்றியுள்ளார். இவ்வளவு ஆழமாக அறிவுகொண்டு உணர்ந்ததனுல்தான் அறிவுடைநம்பி அசைக்க முடியாத ஆற்றலுடன் துணிந்து கூறுகின்ருன். "மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லை" என்பது நன்கு சிந்திக்கற்பாலது.

ஏன்? மக்களால் வரும் பெரும் பயன் யாது? எப்படிப்பட்டது அப்பயன்? எவ்வாறு இனிக்கும் மழலைச் செல்வம்? பாண்டியன் பாட்டாகவே காணலாம்.

..............................இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி

இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்கள்

என்கின்றான் கவிதை இசைத்த காவலன்.

முதியோர் இடையே, இளமைச் செல்வங்களாகிய குழந்தைகள் நடந்துவரும் காட்சி இன்பக் காட்சியாகும். எழில் மிக்கதாகும். 'குறுகுறு நடந்து' என்பதில் அவர்கள் சீறடியின் சிங்கார அசைவைத் தெளிவாகக் காண்கின்றோம். வீட்டில் உணவு நேரம். எல்லோரும் உண்கின்றனர். குழந்தையுள்ள குடும்பம் அது. பெற்றோர் உண்ணுகின்ற போது அக்குழந்தை இடையில் வருகின்றது. சிறுநடை போட்டுச் சிறுகை நீட்டி வருகின்றது. பத்துத் திங்கள் சுமந்து பெற்ற அன்னையும், புண்ணியப் பயன் எனப் போற்றும் தந்தையும் மகிழ்கின்றனர். குழந்தை சிரித்துச் சிரித்துக் களிப்பூட்டுகின்றது. பெற்றோர் இருவரும் தம்மை மறந்து வியந்து இன்பத்துள் ஆழ்கின்றனர். குழந்தை அவர்களைத் தொடுகின்றது. உணவை அள்ளிப் பிசைகின்றது. வாயில் வைத்துக் கவ்வுகின்றது. மீட்டும் குழப்புகின்றது. நெய் பெய்து அட்ட நெற்சோறு எங்கும் இறைபடுகின்றது. சிதறுகின்றது. உடம்பெல்லாம் ஒட்டிக்கொள்கின்றது. இவ்வாறு விதிர்த்து விந்தை செய்கின்றது குழந்தை. பெற்றோர் கண்டிக்க வில்லை. காய வில்லை. சினந்து சீற வில்லை. "ஐயோ! எவ்வளவு உயர்ந்த உணவு இது! புத்துருக்கு நெய்யில் முத்து முத்தாய்ச் சமைத்த வெண் சோறு வீணுவதா? இவ்வளவு சேதம் செய்யலாமா?" என்று அவர்கள் பகுத்தறிவுகொண்டு எண்ணிப் பார்த்தனரா? இல்லை. இல்லை. ஏன்? அவர்கள்தாம் அறிவு மறந்து மயங்கிக்கிடக்கின்றனரே! மயக்குறுத்தும்

குழந்தையின் இன்பப் போதையில் அவர்கள் எவ்வாறு இதனை எண்ண முடியும்? எனவே, மயங்கித் தேனுண்ட வண்டுபோல் செய்வதறியாது திகைத்துத் திளைத்துக்கிடக் கின்றனர். 'மயக்குறு மக்களை' என்று அறிவுடைநம்பி கூறியது எவ்வளவு பொருத்தமாகக் காணப்படுகின்றது!

இவ்வுலகில் மக்கள் அனைவரும் பிறந்ததன் பயனைப் பெற வேண்டும். இன்றேல் பிறந்தும் பயனில்லை என்பர். பிறவியின் பயன் நிரம்பப் பெற வேண்டும். அதற்கு அவர் கள் பெற வேண்டிய பயனுடைய செல்வங்கள் எத்துணை எத்துணையோ? அவையெல்லாவற்றினும் சாலச் சிறந்தது —இன்றியமையாதது—மக்கட் செல்வமேயாகும். மக்கள் வாழுகின்ற வாழ்க்கையில் இன்பம் பெறுதல் இம்மை இன்பம் என்போம்; பிறவியும் வாழ்வும் கடந்த நிலையிலும் தொடர்ந்துவருவது— இம்மை நிலை கடந்த மறுமையிலும் இன்பமும் புகழும் தருவது குழந்தைச் செல்வம் என்பதனை இவ்வேந்தன் வெளிப்படையாகக் கூறவில்லை.

செல்வத்தின் செழிப்பிலே வாழ்ந்த வேந்தன் ஒரு வேளை மறுமை நினைவைப் பற்றி ஒன்றும் வெளிப்படை யாகச் சொல்லாவிடினும், வள்ளுவர் அதனைக் குறித்து 'மக்கட்பேறு' என்ற தலைப்பில் தவறாது சொல்லிவிடு கின்றார். அவர் தம் குறளில் குழந்தையரால் இம்மை மறு மை இரண்டும் சிறப்புறுவதாகக் காட்டுகின்றார். தொட் டால் உடம்புக்கு இன்பம். சொல்லைக் கேட்டால் செவிக் கின்பம். ஊனையும் உருக்கும் இசை பொழியும் குழலையும் யாழையும்விட அதிக இன்பம் தருவது மழலை. இவ்வாறு இன்பமூட்டும் குழந்தையால் எழுபிறப்பும் இன்பம் பெற் றுத் துன்பம் நீங்கி வாழமுடியும் என்பது வள்ளுவர் கருத் தாகும். இதனையே சற்று விரிவாக எதிர்மறையில்

நோக்கினுல் என்ன தோன்றுகின்றது? குழந்தை இல்லாதவர் துன்பம் நீங்கப் பெருர். துன்பம் அவருக்குத் தொடர்ந்துவரும். மறுமையில் இன்பம் பெற அது தடையாகிவிடும். துன்பம் என்பதை நரகம் என்றும் சொல்லலாமே? குழந்தையர் (புத்திரர்) இல்லாமையால் வரும் துன்பத்தை (நரகத்தை) எண்ணிப் பார்த்த பெரியோர் அதற்குத் தனிப் பெயரும் கொடுக்கத் துணிந்துவிட்டனர் போலும். அதனுல்தான் "புத்" என்னும் நரகம் நீக்குபவர் குழந்தையர் என்று கூறியிருக்க வேண்டும். அதனுல்தான் பிற்காலப் புலவர்கள் பலரும் 'புத்' என்னும் நரகத்தைக் குறித்துச் சென்றனர் எனலாம்.

பாண்டியன் செல்வத்துறையில் வைத்துக் கூறியதை வள்ளுவர் எளிய நிலையில் வைத்துக் கூறியதும் இங்கே எண்ணி மகிழத்தக்கது. "உப்பில்லாத கூழும் ஒப்பில்லாத இனிமை பெறுகின்றது குழந்தை குழப்புவதால்" என்பது பின்வரும்

> அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
> சிறுகை அளாவிய கூழ்

என்ற குறளால் விளங்குகின்றது. இங்கே தம் மக்கள் என்று சொல்லியது கூர்ந்து நோக்கற்பாலது. பிறர் மக்களால் இன்பம் காண்பது இயல்வதன்று. பெற்ருேர் தம் குழந்தையர் செயலில்தான் தனி இன்பம் காணமுடியும் என்ற கருத்தும் இதனுல் புலனுகிறது.

குழந்தையர் இன்பத்தை நன்கு நுகர்ந்து ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த பாண்டியன் அறிவுடை நம்பி அதனைப் பாடலால் வெளிப்படுத்தியதை

எண்ணினுல் நெஞ்சு இனிக்கின்றது. பெருமை உயர்கின்றது. தமிழ் மன்னர் தமிழையும் தமிழ்ப் புலவரையும் எவ்வளவு மதித்துப் போற்றி இருந்தால் நாடாளும் வேந்தனும் நாவாற்றல் படைத்துப் பாவியற்றி மகிழ்ந்திருக்க வேண்டும்! இத்தகைய மன்னர்களைப் பற்றி எண்ணுவதும் பேசுவதும் நமது வாழ்வை உயர்த்தும் என்பதில் ஐயமில்லை.

2. கல்விச் செல்வம்

அறிவு இருவகைப்பட்டது. பொது அறிவு, நூல் அறிவு என்பர் அவ்விரண்டையும். பொது அறிவினை, இயற்கை அறிவு என்றும் சொல்வர். நூல் அறிவு என்பது உயர்ந்த நூல்களைப் படிப்பதால் உண்டாகும் அறிவு. இவ்விருவகை யறிவும் அனைவர்க்கும் வேண்டற்பாலதே யாகும். அறிவு இல்லாதவர்கள் பிற யாவையும் பெற்றிருப்பினும் பயன் உண்டோ ?

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்உடைய ரேனும் இலர்

என்ற திருக்குறள் இதனை நன்கு தெளிவுறுத்துகின்றது. இயற்கையறிவு சூழ்நிலையாலும் அநுபவத்தாலும் வருவதாகும். ஆனால் அதனைப் பயன் பெற வளர்த்துக் கொள்ளுதற்கு நூலறிவு மிகமிக வேண்டப்படுவதாகும். நூலறிவு என்பது நூலை நன்கு படித்துத் தானே பெறுகின்ற அறிவும் கற்றார் மாட்டுச் செவி வாயிலாகக் கேட்டுப் பெறுகின்ற அறிவும் சேர்ந்ததேயாகும். இந்த நூலறிவைப் பெறுவது எளிதாகுமா ? எவ்வாறு பெறுவது ? பெற்றால் என்ன பயன் ? ஆரியப்படையை வென்று புறங்கண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் இவற்றுக் கெல்லாம் நல்லதோர் விடை கூறுகின்றான். தென்னகத்தைச் சீரும் சிறப்பும் பெற்றுச் செழிப்புடன் விளங்குமாறு செங்கோல் ஓச்சியவன் அவன். நீதிக்காக உயிரையே

வழங்கிய நேர்மையாளன் அந்நெடுஞ்செழியன். படிக்க வேண்டும். நல்லாசிரியர் இடம் சென்று நன்ருகப் படிக்க வேண்டும். ஆசிரியர் இயல்பறிந்து அவர் வழி நின்று அருங்கல்வி பயில வேண்டும். தளரக் கூடாது. ஆசிரியர்க் குத் தளர்வு ஏற்படாதவாறு பேண வேண்டும். தளர்வு வரும்போதெல்லாம் தாங்கி நின்று உதவ வேண்டும். ஆசிரியர் பொருள் வேண்டிஞல் பொருளேக் கொடுக்க வேண்டும். எவ்வளவு கேட்டாலும் கொடுத்தல் வேண் டும். பின்வாங்கக் கூடாது. தயங்கக் கூடாது. அவரிடம் அவர் மனமறிந்து நடக்க வேண்டும். அவரைத் தலேவ ராகவும்—ஏன் ஆண்டவஞகவும்—கொண்டு வழிபட்டுக் கல்வி பெற வேண்டும். ஐயோ ! இவர் என்ன கடுமையாக இருக்கின்ருரே ? இவரிடம் யார் இருந்து விரும்பிக் கற்க முடியும் ? எடுத்ததற்கெல்லாம் ஏவுகின்ருர் ! ஆணேயிடு கின்ருர். அவரும் மனிதர், யானும் மனிதனே. ஏன் நான் அவருக்கு அடங்கி ஒடுங்கிப் போக வேண்டும் ? எத் துணேக்காலம் இப்படிக் கற்பது ? என்றெல்லாம் சலிப்பும் வெறுப்புமின்றிச் சாகும்வரையிலும் கற்க வேண்டும்.

அப்படிக் கற்ருல் வரும் பயன் சிறிதாகாது. பல குழந்தைகளேப் பெற்ற ஓர் அன்னேயும் அவ்வளவு மக் களுள்ளும் படித்தவனேயே சிறப்பாகப் போற்றுவாள். தடையில்லே. ஐயமில்லே. “இவன் படித்தவன். இவ னேப் பெற்ற என் வயிறு குளிர்கின்றது. உலகமெல் லாம் என் மகனே — என் பிள்ளேயை — என் செல் வத்தைச் சான்ருேன் எனப் போற்றுகின்றது. அது கேட்டு யான் பெறும் மகிழ்ச்சியை என்னென்று கூறு வேன் ? முந்தித் தவங் கிடந்து முந்நூறு நாள் சுமந்து அந்தி, பகல், இரவாய் அரும்பாடுபட்டு அவனே ஈன் றேனே ! ஈன்றபொழுது எவ்வளவு மகிழ்ச்சி கொண்டேன்!

அது போல் ஆயிரம் ஆயிரம் மடங்கு இப்போது மகிழ்ச்சி கொள்ளுகின்றேன் ; பெருமைப்படுகின்றேன். இத்துணைச் சிறப்பு வாய்ந்த இவனை எனது மற்றைக் குழந்தைகளைப் போலவே யான் ஒன்றாக மதிக்க முடியுமா? பெற்ற தாய் தன் குழந்தைகளிடம் அன்பு காட்டும்போது வேற்றுமை இருக்கலாமா? எல்லோரையும் ஒன்றாக எண்ணி அன்பு காட்டும் தாயின் நடுநிலை எங்கே பறந்தது? என் மனம் திரிந்துவிட்டது. திரிந்து பிரிந்து நின்று என் குழந்தையருள் ஒருவனை மட்டும் போற்றுகின்றேன். தவறோ சரியோ? அதுதான் யான் விழைவது. காரணம் கல்வி. கரையில்லாததும் கறையில்லாததும் கருத்தைப் பிணிப்பதும் ஆகிய கல்விதான்.'' இவ்வாறு எண்ணுகின்றாளாம் ஒரு தாய். ஒவ்வொரு தாயும் ஒவ்வொரு தந்தையையும் என்ன வேண்டிக் கொள்கின்றாள், தெரியுமோ? “நீ பெற்ற செல்வக் குழந்தையை நன்றாகப் படித்துப் பயன் பெறச் செய். சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன்” என்றெல்லாம் வற்புறுத்துகின்றாள். காரணம் கல்வியின் சிறப்பாகும்.

கல்வியில்லாவிட்டால் கண்ணிருந்தும் பயன் இல்லை. கண்களைப் பெற்றும் கல்வி பெறாதவர்கள் கண்ணுடையர் அல்லர். முகத்து இரண்டு புண்ணுடையர். ‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’ என்பதை யெல்லாம் உணர்ந்துதான் பாண்டியன் நெடுஞ்செழியன் கல்வியைப் பரப்ப விரும்புகின்றான். தன் ஆட்சியில் ஒவ்வொருவரும் கல்வியால் சிறக்க வேண்டும் என்று கவிதையால் உணர்ச்சி பொங்கக் கதறுகின்றான். “பிற்றை நிலை முனியாது கற்றல்” வேண்டுமென்று பெரிதும் விழைகின்றான்.

தாயின் தனியன்பு — சிறப்பு அன்பு மட்டும்தானா பெறுவான் கற்றவன்? உலகின் மதிப்பையெல்லாம்

ஒருங்கே பெற்றுச் சீரும் சிறப்பும் பெறுவான். இவ்வொரு பிறப்புத் தவிர இன்னும் வேறு பிறப்பு உண்டென்ருலும் அப்பிறப்பில் எல்லாம் அவன் கல்வியால் பெருமை பெறு வான். நாட்டையாளும் வேந்தன் அறிவுடைய ஒருவ னையே விரும்புகின்ருன். "அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்" என்பது அமுதவாக்கு. குடிப்பிறப்பின் உயர் வையும் வயதின் முதுமையையும் பிறவற்றையும் அரசன் தகுதியாகக் கொள்ளாமல் அறிவுடைமையினையே தகுதி யாகக்கொண்டு வரவேற்கின்ருன். "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்பதால் அறிவுடைய கல்வி யாளனையே அவன் துணையாகக்கொண்டு அவன்வழி நிற்கின்ருன் என்று அறிகின்ருேம்.

நமது நாட்டில் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை. மேற்குலம் கீழ்க்குலம் என்பது இல்லை. இது மிகப் பழங் கால முறை யெனலாம். ஆனல் மக்கள் வளரவளர ஒவ் வோர் இனமும் பிரிந்து பிரிந்து தொழிலாலும் பழக்கத் தாலும் உயர்வு தாழ்வு பெறத் தொடங்கிவிட்டது. "பிறப் பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்று வள்ளுவர் பறைசாற் றும் அளவுக்குச் சாதிப் பிரிவினை வளர்ந்துவிட்டது. அப் படி வளர்ந்த சமுதாயத்தில்தான் பாண்டியன் நெடுஞ் செழியன் வாழ்ந்தான். தராதரம் அறிந்து குலம் உயர்வு தாழ்வு என்று போற்றும் நிலை மறந்து பிறப்பால் உயர்வு தாழ்வு இருந்த காலத்திலும் கல்வியின் மதிப்பு மிகுதி யாகவே இருந்தது. கல்வியுடைய ஒருவன் பிறப்பால் தாழ்ந்தவனுய் நாற்பாற் குலத்துள் கீழ்ப்பாலனுய் இருப்பி னும் அவன் உயர் குலத்தவனுகி உயர் குலத்தவரால் உயர்வாய் மதிக்கப்படுகின்ருன். உயர்குலத்துப் பிறந் தவன் கல்லாது நிற்பான் ஆனல் கடையனுகிவிடுவான் என்பதும் இதனுல் விளங்குகின்றது. மேற்பால் குலத்தைச்

சார்ந்த ஒருவன், கீழ்ப்பால் குலத்தவன் கற்றவ னுயின் அவனைத் தனக்கு இணையாக மதிப்பது மட்டும் அன்று, தன்னினும் உயர்வாக அவனை மதித்து அவன் வழியில், அவன் சொல்லில் அடங்கியும் நடப்பான் என் பதனை "மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே" என் பதால் நயமாகக் காட்டுகின்றுன் பாண்டிய மன்னன். வில்லும் வாளும் தாங்கும் கையால் எழுதுகோல் தாங்கும் பெருமை யுடையவன் நெடுஞ்செழியன். தனது நாடு ஓங்க வேண்டுமாஞல் தான் கல்வியில் சிறக்க வேண்டும். தன்னைப்போலவே தனது நாட்டில் ஒவ்வொருவரும் கல்வியில் சிறந்து நிற்றல் வேண்டும் என்பது அவனது ஒரே குறிக்கோள் எனின், அது மிகையாகாது.

அக்காவலன் இசைத்தகவிதையின்கருத்தைஒருசிறிது பார்த்தோம். இனி அக்கவிதையைச் சுவைத்து அவன் சிறப்பைப் போற்றிப் பெருமைகொள்ள முயல்வோம்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே.

பிறப்(பு) ஓர் அன்ன உடன்வயிற்(று) உள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்.

ஒருகுடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
மூத்தோன் வருக! என்னுது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்.

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

இப்பாடலை நன்கு சூர்ந்துநோக்குவோமாஞல் ஒவ வொரு சொல்லிலும் அறிவு பொங்கக் காண்கின்றேம்.

அழகு மிளிரக் காண்கின்றோம். சொல்லும் முறை இனிமையும் எளிமையும் ஒருங்குபெற்று இலங்குகின்றது.

மக்கள் வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும். நிலையாக எதுவும் நிற்பதில்லை. ஆறிடும் மேடும் மடுவும் போலவும் சகடக்கால் போலவும் மாறி மாறி வரும் வாழ்வில் ஆசிரியனும் அடங்கியவன்தானே? அவனுக்கும் துன்பம் உண்டு. தொல்லை வரும். ஆனாலும் அவன் சோர்வு அடைந்து சுருண்டு மடிந்துவிடக் கூடாது. அவ்வாறு சோர்வு வருமுன்பே எள்ளுக்கு முன் எண்ணெய் என்பது போலவும், உடுக்கை இழந்தவன் கைபோலவும் முன்வந்து உதவ வேண்டும் மாணவன். அவ்வாறு முன்னின்று தயங்காமல் உதவுதல் வேண்டும். துன்பம் வந்து தொடர்ந்து வருத்தும் வரையில் காலம் தாழ்த்திவிடக் கூடாது. காலம் தாழ்த்திய பின் பயன் கிட்டாது போய்விடும். அதனால் உடனே உதவ வேண்டும் என்பது தெரிகின்றது. உயிர் பிரியும் நிலையில் உள்ள ஒருவனுக்கு நல்லதோர் மருந்து கொடுத்தால், உடன் கொடுத்தால் பிழைத்து விடுதலும் ஆகும். மருந்து கொண்டுவரக் காலம் தாழ்த்தின் எவ்வளவு நல்ல மருந்தாயினும் எவ்வளவு சிறந்த மருத்துவராயினும் பயன் விளையாது. இந்த நுணுக்கம் நெடுஞ்செழியனுக்கு — நாடாளும் காவலனுக்கு — எவ்வாறு வந்தது!

புத்தர் பெருமான் நெடுங்காலம் ஆராய்ந்து ஒருண்மையைக் கண்டுபிடித்தார். உலகில் மக்கள் ஆசையை விட்டுவிட வேண்டும். அதுதான் துன்பம் துடைத்து இன்பம் பெறும் ஒரே வழியென்று உணர்ந்து அதனை உலகிடைப் பரப்ப விரும்பினர். உயர்ந்த கொள்கைதான்.

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது ; பின்னது
அற்றோர் உறுவது அறிக !

என்று அவ்வுண்மையை "நால்வகை வாய்மை" யாகப் பகுத்துப் பகுத்துக் கூறினர். ஆனல் உலக இயற்கை எவ்வாறுளது? "வேண்டும் வேண்டும்" என்ற எண்ணம் உடையவரே பெரும்பாலோர். கற்றறிந்த புலவனும் கணக்காயனும்கூட இதற்கு விலக்கல்லன். ஆசிரியன் கற்றவனுயினும் முக்குண வயத்தவன் ஆதலால் அறிவு பிறழ்ந்து பொருள் வேண்டுமென விரும்பலாமே? சேற்றிலே உள்ளது, வேண்டாம் என்று செந்தாமரையைப் புறக்கணிப்பார்களோ? முள் மிகவுடையது, வேண்டாம் நிலத்தாமரை (ரோசா) என்பரோ மேலோர்? ஆகவேதான் பொருள் விரும்பினுலும் (விரும்பமாட்டார்கள்) கொடுத்துப் படிக்க வேண்டும். மிகுதியாகக் கேட்டாலும், கேட்காவிட்டாலும்கூட, வாரி வழங்கிப் படிக்க வேண்டும். கல்விக்குதவாத செல்வம் வேறு எதற்கு? நன்னூல் இயற்றிப் புகழ்கொண்ட பவணந்தியார் மாணவர் இலக்கணம் கூறும்போது "பொருள் நனி கொடுப்போன்" என்று கூறியுள்ளதும் இதனுல்தான். பொருள் மிகக் கொடுப்பவனுக்குத் தனியே பொறுப் புணர்ச்சியும் ஏற்படும் அன்றே? இவ்வளவு பெரும் பொருள் கொடுக்கின்றேனே! முயற்சி குன்றலாமா? முயன்று படிக்க வேண்டுமே என்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாகக் கூடும் அன்றே? அதனுல்தான் "உறுபொருள் கொடுத்தும்" என்கின்றுன் பாண்டியன்.

ஆசிரியர் ஆவார்க்கு அறிவு மிக இருக்குமல்லவா? அவ்வறிவினுல் தலைமையுணர்ச்சி (*Superiority Complex*) உண்டாகி மாணவரை அடிமையாகவும் தாழ்மையாகவும் நடத்தும் ஆசிரியரும் இருப்பர். அவரை அணுகிப் பக்குவமாக நின்று ஆவன யாவும் புரிந்து புகழ்ந்து போற்றிக் குற்றேவல் செய்யவும் தயங்கக் கூடாது என்பதும் உணர்த்த விரும்புகின்ருன் பாண்டியன். அவ்வாறு கூறுவதிலும் நயம் ஒன்று புகுத்திக் காட்டுகின்ருன். பிற்றை நிலை — வழிபடும் நிலை — ஓரளவு அடிமைநிலை — வரின் வெறுப்பது இயல்பு. ஆனுல் அவ்வெறுப்பை அடக்கி யாண்டு நற்பயன் பெற வேண்டுமாம். அதனுலன்ரே முனியாது என்ற சொல்லைத் தனது அழகுக் கவிதையிற் பெய்து வைத்தான் ஆரியப்படை கடந்த அண்ணல்! இவ்வாறு கற்பது தீதாகாது நன்றேயாகும் என்பதனையும் தேற்றேகாரம் போட்டுச் செப்புகின்ருன். "கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று கூறிய அதிவீரராம பாண்டியன், பிறந்த குடியால் மட்டுமன்றி அறிந்த அறிவாலும் நெடுஞ்செழியனின் வழித்தோன்றலாய் விளங்குகின்ருன் என்று எண்ணும் போது நமக்குச் செருக்கும் முறுக்கும் ஒருங்கு விளைகின்றனவே.

கற்றல் நன்றே என்று கூறியதை எண்ணும்போது அதனுல் வரும் இன்பம் ஈடு இணையற்ற இன்பம் என்பதும் புலனுகின்றது. "கல்வி இன்பமே இன்பம்" "கல்வி அழகே அழகு" "கல்வியே கற்புடைப் பெண்டிர்" என்றெல்லாம் அறிஞர் கூறும் அனைத்தும் கற்றல் நன்றே என்பதில் அடங்குகின்றது என்னலாம். மேலும், கற்றல் நன்றே என்பதால் எப்பொழுதும், இறக்கும் துணையும்

ஒருவன் படிக்க வேண்டுமென்ற வள்ளுவர் கருத்தும் உய்த்துணர்த்தப்படுகின்றது.

"நவில்தொறும் நூல் நயம்போலும்" "என் ஒருவன் சாந்துணையுங் கல்லாதவாறு?" என்ற குறட்பகுதிகள் பாண்டியன் கவிதையில் சிலம்புக்குள் பரல் போல் ஒலிக்கக் காணலாம்.

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம் காணோம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து

என்று நாலடியார் கல்வியின் பயனை விளக்குகின்றது.

குமரகுருபரர் இதனை இன்னும் சற்று விரிவாக்கிக் காட்டுகின்றார்.

அறம்பொருள் இன்பமும் விடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் — உறும்கவல்ஒன்(று)
உற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்(கு) உற்ற துணை

என்பது அவர்தம் திருப்பாடல். இவ்வளவு பயனும் கல்வியால் விளைகின்றது. அதுதான் அழியாத செல்வம். அதனையே தந்தை தன் எச்சமாகப் பிள்ளைகட்கு வழங்க வேண்டும்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

என்ற குறளை நன்குணர்ந்து பாடி இருக்க வேண்டும் நெடுஞ்செழியன் என்றும் கொள்ளலாம். 'சிறப்பின்

பாலால் தாயும் மனந்திரியும்' என்பதில் தாயும் என உம்மை கொடுத்துப் போற்றியதை வியவாதார் இருக்க மாட்டார். அடுத்துச் சொல்லுகின்ற அருங்கருத்தும் — "படித்தவன் மேலோன்" என்ற கருத்தும் — குறளில் வேரூன்றியிருக்கின்றது.

> மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
> கற்றார் அனைத்(து)இலர் பாடு

என்ற அதுவே பாண்டியன் நாவில்,

> வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
> கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
> மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே

என்று முகிழ்த்துச் சிறந்துள்ளது போலும்!

> எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
> ஆன்ற பெருமை தரும்

என்றதையும் பாண்டியன் சொல்லாமற் சொல்லுகின்றான். அரசு (அரசர்) எப்பொழுதும் அறிவுடையோன் வழியிலே அவன் சொற்கேட்டு நிற்க வேண்டும் என்பதனை "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்பதால் உணர்த்துகின்றான். குடிப்பிறப்பாலும் மூப்பாலும் கல்வியின்றேற் பயனில்லை என்பதையும் சொல்ல விரும்புகின்றான். "மூத்தோன் வருக என்னாது" என்பதால் அக் கருத்தைச் சுட்டி விடுகின்றான்.

"கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்பதனை நன்கு உணர்ந்து போற்றிய காவலனின் நாவன்மையை எவ்வாறு போற்றுவது? தனக்கு முன் வாழ்ந்த வள்ளுவர் போன்ற பெரியார் கூறிய கருத்துக்களை

யெல்லாம் ஒருங்கு வைத்துப் போற்றிய திறமையை வியப்பதா? தனக்குப் பின்வரும் அறிஞர் அனைவரும் அறிந்து சொல்லிச் சொல்லி விளக்குமாறு அருநிதிய மாகிய கவிதையொன்றை அளித்துச்சென்றதனை எண்ணி எண்ணி வியப்பதா?

இத்தகைய கல்வியை நமது வாழ்நாளின் எல்லை உணர்ந்து தொல்லையின்றிப் படிக்க இன்றைய ஆட்சியா ளர் எல்லோருக்கும் உதவ வேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் இளமையிற் கல்விபெற வழிவகுக்க வேண்டும். பருவத்துக் கேற்ற முறையில் பாடமும் பாடத்திட்ட அமைப்பும் வள மும் வாய்ப்பும் இருக்க வேண்டும். தொடக்கப் பள்ளி யிலும் உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் படிப்படி யாகக் கல்வியின் பயன் உயர்ந்து செல்ல வேண்டும். மொழி வழியே கல்வி கற்பிக்க வேண்டி இருப்பதால் படிப் போர் அனைவரும் கல்விமொழியில் முதற்கண் நற்பயிற்சி பெற வேண்டும். ஏட்டுக்கல்வி ஏட்டுச் சுரையாகிவிடக் கூடாது. வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்ல பயன் அளிக்க வேண்டும். இறவாத புலமையை என்றென்றும் வளர்க்க வேண்டும். அதனைப் பிறநாட்டாரும் உணர்ந்து போற்றி வணங்க வேண்டும். இவைதாம் பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் இசைத்த கவிதையின் நோக்கம் எனல் மிகையாகாது.

எழுக! படித்துப் பயன் பெறுக! எங்கும் இன்பம் நிரப்புக! குறைமதியை நிறைமதியாக்கிச் சிறப்பு எய்துக!

3. வாழ்விக்கும் பண்பு

பண்பு என்பது நல்ல இயல்பு. சொல்லிலும் செயலிலும் மட்டுமின்றிச் சிந்தையிலும் செம்மை நிறைந்திருத்தல் வேண்டும். உலகில் நல்லன எவையோ அவை யெல்லாம் மேற்கொள்ள வேண்டும். அல்லவையுள்ள வெல்லாம் களைந்து எறியப்பட வேண்டும். அன்பு காட்ட வேண்டும். அருள்பொழிய வேண்டும். கயமையும் வஞ்சமும் பொய்மையும் பொறாமையும் ஆசையும் ஆணவமும் அடியோடு ஒழித்திட வேண்டும். சினமும் சுடுசொல்லும் பயன் அற்றவை என்று விட்டு விட வேண்டும். தீமைகளைப் பற்றி எண்ணுதற்கும் நாண வேண்டும். இத்தகைய நலமெல்லாம் ஒருங்கு அமைந்திருப்பதே பண்பு உடைமையாகும். பண்பின் நிறைவே சால்பு, சான்றாண்மை என்று போற்றப்படும். ஒருவர் எவ்வளவுதான் அறிவாளியாய் விளங்கினும் கூட அவர்பால் பண்பு இல்லை என்றால் அவரை உலகம் மதிக்காது. இழித்துப் பேசும். 'மரம் போன்றவன்' என்று வசை இசைக்கும்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்(பு) இல்லா தவர்

என்பது தமிழ்மறை.

இரும்பு வன்மையானது. "உன் நெஞ்சு இரும்போ?" என்று கேட்கின்றோம். தாயுமான அடிகளும் தம்மை "இரும்பு நேர்நெஞ்சகக் கள்வன்" என்று கூறிக்கொள்ளுகின்றார். அத்தகைய வன்மை வாய்ந்த இரும்பையும்

தேய்த்துக் கொல்லும் ஆற்றல் வாய்ந்தது அரம். அந்த அரத்தைப் போல் அவ்வளவு கூர்மையான நுண்ணிய அறிவும் பண்பில்லாதவழிப் பயன் தருவதில்லையாம். அறிஞர் அறிஞர் என்று உலகம் போற்றிப் புகழும் அனைவரும் வெறும் அறிவால் மட்டுமின்றிப் பண்பாலும் சிறந்திருக்க வேண்டுமாம். அரம்போன்ற அறிவு இருந்தாலும் பண்பு பெருவிடில் உணர்ச்சியற்ற மரம் என்றே உலகம் அவரை இகழும். ஆகவே, ஒருவன் தான் வாழ்தற்கு — மனிதனுக மதிக்கப்படுவதற்குப் பண்பு இன்றியமையாதது என்பது போதரும்.

தனி ஒருவன் சிறப்புற வாழ்தற்கு மட்டுமின்றிச் சமுதாயமாக வாழும் மன்பதை முழுமையும் நலம் பெறவும் நன்கு வாழவும் பண்பு வேண்டும் என்பதை எல்லோரும் நன்குணர வேண்டும். பண்புடைய நல்லவர்கள் வாழ்வதுதான் ஏனைய மக்கட்கும் உயிர்கட்கும் வாழ்வளிக்கின்றது. நல்லவர்களுக்காகத்தான் மழையும் பொழிகின்றது. நல்ல கற்பும் பண்பும் வாய்ந்த நங்கைமார் “பெய் எனப் பெய்யும் மழை; பேசு எனப் பேசும் செங்கதிர்; எரி என ஏவ எரித்திடும் நெருப்பு” என்றெல்லாம் எண்ணுகின்ற பெருமை நமக்குண்டு. எனவே, நம் வாழ்வில், தனி வாழ்வாயினும் உலக வாழ்வாயினும் பண்புதான் உயிர்நாடி.

ஒரு நாட்டை ஆளுகின்ற அரசன் பண்புடையவனுக இருக்கவேண்டும். அவன் பண்பை நோக்கி நோக்கி அவன் ஆளும் உலகமெல்லாம் பண்பு நிறைந்து விளங்க வேண்டும். அவ்வாறு பண்பு நிறைந்து விளங்குமாறு அவ்வரசன் மாநிலம் ஆள வேண்டும். மாநிலம் ஆளும் மன்னவன் தனது கடமையாகப் பண்பைப் பேண வேண்டும்.

"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்று பாடினுர் பொன்முடியார். அதன் பொருள் யாது? அரசன் தான் நல்ல ஒழுக்கப் பண்புடையவனுய் நின்று அவ்வொழுக்கப் பண்பை உலகில் நிலைநிறுத்த வேண்டும் என்பதுதான். தன்னைப்பார்த்து மக்கள் திருந்துமாறு மன்னவன் மாட்சியுடன் நிற்க வேண்டும். குடிமக்கட்குப் பண்பினை இவன் அருள வேண்டும். வழங்க வேண்டும். அதனுல்தான் நல்கல் என்று சொல்லப்பட்டுள்ளது. சிலர் அழகாகப் பேசுவர். உயர்ந்த கருத்துக்களைக் கூறி ஒழுக வேண்டும் என்று முழங்குவர். ஆனுல் அவர் அவ்வாறு ஒழுகுவதில்லை. வழுவுவார். அது தகாது; சிறப்பும் இன்று. ஒழுக்கம் உடையவர் வாய்ச்சொல்லே உயர்ந்த பயன் தரும். எனவே, நாட்டிற்கு ஒழுக்கமுடைய ஓரரசன் இருத்தல் சிறப்பினும் சிறப்பாகும்.

நம் நாட்டுப் பண்டை வேந்தர் பலரும் ஒழுக்கமுடையவர்களாகவே விளங்கினர். ஒழுக்கத்தின் பெருமையை மிக நன்கு உணர்ந்து போற்றினர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தை ஆண்டுவந்தான் பாண்டியன் ஒருவன். அவன் இளமையிலேயே இறந்துவிட்டான். என்ருலும் அவன்புகழ் இன்றுவரை அழியாது குன்றென நிற்கின்றது. காரணம் என்னை? அவனது பண்பேயாகும். அவன் பண்பினுல் சாலப் பெரியவனுய் விளங்கினுன். அதனுல் அவனைப் பெருவழுதி என்றனர் சான்ருேர். "பெரியோர் எல்லாம் பெரியருமல்லர்; சிறியோர் எல்லாம் சிறியருமல்லர்" என்பது அதிவீரராம பாண்டியனுரின் அமுத மொழியன்ருே! அது கூறுவது யாது? வயதால் பெரியவர் எல்லாம் பண்பால் பெரியர் ஆகார். அதுபோன்றே சிறிய வயதினரும் பெரிய பண்பால் பெரியவராகப் போற்றப்படுவர். பெருவழுதியும்

இளையனாயினும் பண்புடையனாதலால் இளம்பெருவழுதி எனவே போற்றப்பட்டான். அவனுடைய முழுப்பெயர் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்பது. அவனைப் பற்றி இன்று நாம் அதிகமாக ஒன்றும் அறிந்துகொள்ள இயலவில்லை. அவன் அழகிய பண்பு பொங்கும் வாழ்க்கையை வரலாறாக யாரும் எழுதிவைத்திலர். அது நம் தவக் குறைவேயாகும். ஆனால் அவன் பாடியருளிய அருமைப்பாடல் ஒன்றே அவனை இன்றும் வாழ்விக்கின்றது. அவன் இளமையிலேயே மாய்ந்தான் எனினும் அவன் புகழ் மாயவில்லை. அவன் பூதவுடம்பு நீங்கினும் புகழுடம்பு ஓங்கி நிற்கின்றது. அவன் தன்னிலை யுணர்ந்து பண்பு போற்றி உலகிலும் பண்பு பரப்ப விரும்பினான். அப்பண்பைப் பரப்புதற்கு அவன்செய்த முழக்கம் ஒன்று அருந்தமிழ்ப்பாடலாக அரும்பியுள்ளது. அதனை நாம் அனைவரும் உணர்தல் நன்று.

உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ(து) ஆயினும் இனி(து)எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவ(து) அஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே !

இதுதான் அவன்பாடிய அருமைத் திருப்பாட்டு. அன்று முதல் இன்றுவரை அவனையும் நம்மையும் வாழ்விக்கும் அழகுப் பெரும்பாட்டு.

" உண்டால் அம்ம! இவ்வுலகம். " இந்த உலகம் உண்டு. அழியவில்லை. உண்மை. உண்மை அழியவே அழியாது. என்ன வியப்பு! அம்ம! ஆம். அழியவே அழியாது. சான்ளுேர் உள்ளவரை அழியாது. உரைநடைக்கும் பாட்டுக்கும் உள்ள வேறுபாடு இதுதான். உரைநடையில் அமைதியாக ஒழுங்குமுறை, எழுவாய், பயனிலை முதலிய வரிசை குன்ருவண்ணம் அமைக்கப்படும். ஆனல் செய்யுள் உணர்ச்சியின் பிழம்பு. ஆகவே முதலில் வரும் எழுவாய் இறுதியிற் போகுமாறு முறைமாறிப் பீறிட்டெழும். பொங்கித் ததும்பிப் பூரணமாய் வழிந்து வரும். அப்படித் தான் இப்பாடலும். " உண்டால் அம்ம!" என்று குமுறிக் கொண்டு வருகின்றது. இவ்வளவுக்கும் காரணம் பாடலை இயற்றியவன் உள்ளத்தே பொதிந்து கிடக்கும் உண்மை ஒழுக்கத்தின் உயர்வு. அவனிடம் ஒழுக்கமும் உயர்வும் மட்டுமன்றிப் பண்பைப் புகழும் ஆர்வமும் பரப்பும் வேகமும் மிளிரக் காண்கின்ளுேம். இரண்டே சொற்களால் "உண்டால் அம்ம!" எனக் கூறித் தன் இயல்பையும் எழுச்சியையும் எடுத்துக் காட்டி விடுகின்ளுன் பாண்டியன். இதுதான் உண்மைக் கவியின் வன்மை.

இனி இப்பாடலில் வேறு என்ன இருக்கின்றது? சான்ருண்மையே திருவுருவாய் விளங்கும் இப்பாடலில் சான்ருண்மைக்கு விளக்கம் காணப்படுகின்றது. சான்றவர் என்பவர் யாவர்? " சாந்துணையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை ஆம் துணையும் " காக்கும் அறிஞர். 'இன்ன செய்தார்க்கும் இனியவே' செய்யும் எழில் உடையோர். உற்றநோய் நோன்று உயிர்க்கு இன்ன செய்யாது நன்கு முயலும் நனி நாகரிகர். விடாது முயலும் ஆண்மையும் ஆற்றலும் உடைய மாவீரர். தமக்கெனமுய்லாமல் பிறர்க்கென முயலும்பெருந்தகையாளர்.

“தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர்” என்று இப்பாடல் சான்றோர்களைக் குறிக்கின்றது. நோன் தாள் என்பது அசைக்க முடியாத முயற்சி. தகர்க்க முடியாத தாளாண்மை. ஓய்வில்லாத உழைப்பின் அடிப் படை ஆற்றல். அவ்வாற்றல் உடையவர்தாம் உலகுக்கு உதவுவர். தமது முயற்சியை யெல்லாம் பிறர்க்கு உதவும் பெற்றியுடைய அவர்தம் பெருமையை என்னென்பது? இத்தகைய முயற்சிதான் உண்மைச் செல்வம். உல கெலாம் வாழ ஒருங்குதவும் உயர்தனிச் செல்வம் “உரன் ஒருவற்கு உள்ள வெறுக்கை” என்ற வள்ளுவர் சொல் லுக்கு இலக்கியமாய் விளங்கும் இத்தகு திருவுடையா ரின் பண்புக்கூறுகளை யெல்லாம் தனித்தனியே விதந்து விதந்து கூறுகின்றான். வியக்கின்றான். மெய்ம்மறந்து பாடுகின்றான் இளம்பெருவழுதி.

மக்கள் தமக்குக் கிடைப்பவற்றை மற்றவர்க்கும் பகிர்ந்து கொடுத்து வாழ வேண்டும். தாம் கொடுப்பதை மற்றவர் பெற்று நுகர்தலைக் கண்டு வான்பெரு மகிழ்ச்சி கொள்ள வேண்டும். இதுதான் ஈத்துவக்கும் இன்பம் என்று சிறப்பிக்கப்படுவது. பழுமரம்போலவும் மருந்து மரம்போலவும் நன்னீர் நிறைந்த ஊருணிபோலவும் மற் றையோர்க்கு வழங்கி வாழ வேண்டும். பெறுதற்கரிய பொருளாயினும் தயங்காது வழங்க வேண்டும். தேவர் களின் தெள்ளமுதே கிடைப்பினும் தாம் மட்டும் தனித் திருந்து உண்ணார். மற்றவர்க்கு வழங்கி உண்பர். மருந்தேயாயினும் விருந்து வந்தார்க்கு இருந்துவழங்கு வர். மருந்து என்றால் அமுதம். சாவாமைக்குக் காரண மாகிய பேரமுது. அவ் வான் அமுதையும் வழங்கத் தயங்காமையே இவர்தம் மாண்பு. ஔவையார்க்கு நெல் லிக்கனி அளித்த அதிகமான் நமக்கு எடுத்துக்காட்டாக

விளங்குகின்றான் அல்லனோ? "உண்டாயிற்பதங் கொடுத்து இல்லாயின் உடன் உண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவன்" என்று அவனை வாய் குளிரப் போற்றுகின்றார் ஔவையார். ஆலமர் செல்வன் போல் வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றார். நீலமணி மிடற்று ஒருவன்போல மன்னுமாறு வேண்டுகின்றார். இத்தகைய சால்பு வாய்ந்த அதிகமானைப் போன்று மக்கள் அனைவரும் பண்புடன் வாழ வேண்டும் என்பதுதான் இளம் பெருவழுதியின் எண்ணம். சான்றோர்நிலை அடைவதற்கு முதற்படியாக இருப்பது இவ்வியல்புதான். முதன்முதலில் சான்றாண்மையில் தலைப்படுதற்கு இதுதான் வழி. இருப்பதைத் தாம் துய்ப்பதன்றி மற்றோர்க்கும் வழங்குவது. இது சற்றுப் பெருகி வளர்ந்தால் தமக்கின்றி அனைத்தையும் அடுத்தார்க்கு வழங்குவதாய் நிறைவுறுகின்றது. இங்கே நற்றிணைப்பாடல்ஒன்றுநினைவுக்குவருகின்றது. தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். செல்லும்போது, "தவறாது வருவேன்; தாழ்த்தாது வருவேன்" என்றெல்லாம் கூறிச் செல்லுகின்றான். ஆனால் குறிப்பிட்ட காலத்தில் வந்திலன். மிகமிகக் காலம் கடந்து வருகின்றான். அப்போது தலைவியின் அருகிலிருந்த தோழி அவனை நோக்கிக் கூறுகின்றாள் :

நெடியமொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே.

இதுதான் அவள்கூற்று. ஆற்றலும் அறிவும் வாய்ந்த அருமைப் பேச்சு. இஃது,

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்புஇல் அவர்க்கு

என்ற திருக்குறளைத் தன்னகத் தடக்கி வைத்திருக்கின்ற தன்றோ? எனவே, அன்பும் அருளும் அடுத்தார்க்கு இரங்கும் பண்புமே உண்மையாக வேண்டப்படும் செல்வ மாகும். அச்செல்வம் இருந்தால் பாரி போல் வாழலாம். பேகனைப் போல் சிறப்படையலாம். உலக முழுதும் வாழ் வதற்கு, ஒன்றுபடுதற்கு, வேற்றுமையை நீக்குதற்கு இதனினும் வேறு வழியுண்டோ?

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

என்ற திருக்குறளும்,

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே

என்ற மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடலும் இதனையே வலியுறுத்துகின்றன.

அடுத்தது யாது? கொடுக்கக் கற்றுக் கொள்வது முதற்படியாயின் அடுத்ததாக இருக்க வேண்டியது யாது? மற்றவர் தமக்கு இன்னாதன செய்யும்போதும் சொல்லும் போதும், ஏன் எண்ணும்போதும் சினம் ஏற்படுகின்ற தல்லவா? அதனை மாற்ற வேண்டும். அடக்க வேண்டும். சினம் தீது. சேர்ந்தாரைக் கொல்லுவது. வெறுப்பு வளரக் கூடாது. செற்றமாய் முற்றக் கூடாது. வெறுப் பின்றி நடுவுநிலை பெற்று நிற்றல் வேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனப்பாங்கு தோன்றுதல்

வேண்டும். "யான் வாழ்வதும் தாழ்வதும் என்ருலே. எனது ஆற்றலும் போற்றலுமே என்னை ஆக்குவன" என்ற உணர்ச்சியின் யார்மீதும் வெறுப்பு ஏற்படாது. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" "பெருமையும் சிறுமையும் தான்தர வருமே" என்று அமைதி கொண்டு வெறுப்பை — முனிவை — அடக்கிக்கொள்ள வேண்டும். "முனிவு இலர்" என்ற சொற்கள் குறிப்பிடும் உண்மை இதுதான். முனிவின்மை — வெறுப்பின்மை — தோன்றுவது அடுத்துப் பொருத்தமாய்ச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வியல்பு வளரின் பொருமை ஒழியும். தீவினையெல்லாம் தேயும். அறம் பெருகும். ஆற்றல் வளரும்.

இனி மூன்ருவது படியாக இருப்பது துஞ்சாமை. அஃதாவது மடிந்து சோம்பிக்கிடவாமை. இரண்டாவது கருத்தாகக் கூறப்பட்டதில் மீட்டும் சற்றுச் சிந்தனையைச் செலுத்த வேண்டும். உலகில் யாவும் விதிவழியே நடைபெறுகின்றன. உயிர்கள் யாவும் விதிவழியே இயங்குகின்றன.

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

என்ற பூங்குன்றனர் கருத்து எந்த அளவுக்குப் பயன்தர வேண்டும்? பிறரை இகழாமை, புகழாமை, முனியாமை, முனிதல் இவற்றைக் களைந்து எறிதற்கு மட்டுமே உதவ வேண்டும். மடிந்து கிடக்கும் சோம்பர் வளருவதற்கு

இஃது இடமாகிவிடக் கூடாது. "யாவும் விதிவழி. எல்லாம் அவன் செயல். அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று வாய்வேதாந்தம் பேசிக்கொண்டு, "யான் உழைத்து என்ன பயன்? யார் வாழ்ந்தால் என்ன? யார் வீழ்ந்தால் என்ன?" என்று மடிந்து சோம்பரை வளர்க்கக் கூடாது. "சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்" அல்லரோ? அவரால் உலகை வாழ்விக்க முடியுமா? எனவே, சோம்பர் என்ற களையை நீக்கி எறிய வேண்டும். எப்போதும் விழிப்புடன் (சாக்கிரதையுடன்) இருக்க வேண்டும். துஞ்சாது இருக்க வேண்டும். துஞ்சுதல் பெருந்தீது. எனவேதான் மூன்ருவது படியாக இது கூறப்பட்டுள்ளது போலும். "துஞ்சலும் இலர்" என்றதன் சிறப்பு இதுவாகும்.

துஞ்சாமைக்கு அடுத்து அஞ்சாமை கூறப்படுதல் வேண்டுமா? இல்லை. அஞ்சாமைக்கு முன் அஞ்சுதலையும் கற்றுக்கொள்ள வேண்டும். அமர்க்களத்தில் அஞ்சாமை சிறப்பு என்ருல் அவ்வஞ்சாமைக்குச் சிறப்பு அஞ்சுதல் ஆகும். ஆம், அஞ்சுதல் வேண்டும். எப்படி? தன்னலம், தன்னுயிர் கெடுகின்றதே என்று அஞ்சும் அச்சத்தை இங்கே குறிப்பிடுவதாகாது. பிறர் — சான்ருேர் — பெரியோர் — அஞ்சுவதை நாமும் அஞ்ச வேண்டும். தீயன எண்ணவும் சொல்லவும் செய்யவும் அஞ்ச வேண்டும். அச்சம் என்றதொரு தடையைப் (*brake*) போட்டுவிட்டால் தீவினையும் தீமையும் தடைப்பட்டுவிடும். உலகம் செழிக்கும். இப்படி அஞ்சுகின்ற பொழுதே அஞ்சாமையும் தானே உடன் வளரும். தீயவற்றைக் கண்டு அஞ்ச வேண்டும். நாண வேண்டும். அதாவது நல்லன எண்ணவும், சொல்லவும், ஆற்றவும் அஞ்சக் கூடாது. தயங்கக் கூடாது. புகழ்தரும் செயலா, பழிதரும் செயலா

என்று எண்ணித் துணிதல் வேண்டும். இத் துணிவுடைமை என்றும் நிலவ வேண்டும். நல்ல செயலானுல், புகழ் வருவ தானுல் எதனையும் கொடுக்க முன்வர வேண்டும். உயி ரையே கூடக் கொடுத்துதவ வேண்டும். அதே போல் பழி எனின் அஞ்ச வேண்டும், தயங்க வேண்டும், தவிர்க்க வேண்டும். உலகமே வருவதாய் இருந்தாலும் பழி வழியே வருவதாயின் வேண்டாம். வேண்டவே வேண்டாம். இப்படித்தான் நமது சான்ருேர் எண்ணினர். பாண்டிய ளுகிய சான்ருேனும் பாடினுன். "பிறர் அஞ்சுவது அஞ்சிப் புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின் உல குடன் பெறினும் கொள்ளலர்" என்றதன் நயம் இது தான்.

இவ்வளவும் சொன்னுனே இளம்பெருவழுதி; இறுதி யில் வரும் முடிப்புரை போன்றதொன்றையும் நன்கு சொல்லிப் பெருமிதத்தோடு பாடுகின்ருன். "அயர்வு இலர்" என்கின்ருன். அயர்வு என்ருல் சோர்வு, மறதி, களைப்பு. மேலே முறையாகச் சொல்லப்பட்ட கொடை யுள்ளம், வெறுப்பின்மை, மடியின்மை, அஞ்சுவதஞ்சும் அச்சம் என்னும் இவற்றையெல்லாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. உள்ளத்தில் நினைவு கொள்வதோடு செய லிலும் முறை தவருது ஒழுங்காய் நிறைவேற்றி வருதல் வேண்டும். எனவே நல்லதொரு எச்சரிக்கையுடன் "அயர வேண்டாம்" என அறிவுறுத்தி முடிகின்றது இப்பாடல்.

இன்றைய உலகின் நிலையை எண்ணிப் பார்க்கும் நமக்கு இப்பாடல் எவ்வளவு பயன் தருவதாயுள்ளது! ஈராயிரம் ஆண்டுகட்கு முன் இதனைப் பாடிய பாண்டியன் பெருமையை எண்ணி எண்ணி வியக்கின்ருேம். சொல்லிலே துணிவு, தூய்மை, இனிமை, எளிமை,

பொருண்மை யாவும் மிளிர்கின்றன. இவனைப் போன்ருரை எண்ணித்தான் வள்ளுவர்,

நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது

என்று பாடியிருக்க வேண்டும். இவ்வளவு பெரிய சான்ருேன் இளமையிலேயே கடலுள் மாய்ந்துவிட்டானும். எப்புகழ்ச் செயலை நிறைவேற்றுவதற்காகத் தன் உயிரைக் கடலுள் கொடுத்து மறைந்தனனே ? தனது இலக்கணத்துக்குத் தானே இலக்கியமாகும் தனிவீரன் சிறப்பைச் சாற்றுவது யாங்ஙனம் ? இதுதான் வாழ்விக்கும் பண்பு !

4. புலியும் எலியும்

வாழ்க்கையில் நல்ல நட்பு ஒரு பெரும் பேறாகும். நண்பர்களை அமைத்துக்கொள்வது சூழ்நிலையைப் பொறுத்தது என்றாலும் ஆராய்ந்து அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். நட்பு விளைவதன் முன்புதான் ஆராய வேண்டும். நட்பு முற்றிய பின் பிரிதல் எளிதன்று. பொருந்தாத நட்பு — கூடாத நட்பு — உண்டாதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அதனால் ஒருவன் தானும் கெடுவான். மற்றவர் கேட்டுக்கு ஆளானாலும் ஆவான். எனவே, நட்பு என்பது மிகமிகச் சிந்தித்து முடிவுசெய்யக் கூடிய பொருளாகும். நட்பு வேண்டாம் என்று விலகி நிற்பதும் இயல்வதன்று. இயற்கையும் ஆகாது. மக்கள் இயல்பே கூடிவாழ்வது தான். இதனை எப்படித் தவிர்ப்பது? நட்பு வேண்டும், தவறியும் போய்விடக் கூடாது. நல்ல முறையில் நாடி நாடி முடிவு செய்ய வேண்டும். "கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை" என்பது பழமொழி. கூழ் வேண்டும். வயிறு பசிக்கின்றது. வாய் துடிக்கின்றது. கை எடுக்கின்றது. ஆனால் மீசை தடுக்கின்றது. உண்ணுகின்ற உணவுப் பொருள், பருகும் சாறு எதுவாயினும் மீசையுள்ளவர்களிடம் நன்றாகக் கையாளப்பட வேண்டும். மிகவும் நயமாகவும் அழகாகவும் கையாண்டால்தான் மீசை தடைப்படுத்திப் பாழ் செய்யாது. தானும் அவ் வுணவுப் பொருளால் அழகையும் தூய்மையையும் கெடுத்துக் கொள்ளாது. மீசை இல்லை எனில் சற்று எளிதாகவே

உண்ணலாம். பருகலாம். ஆனால் மீசை ஆடவர்கட்கு அழகு செய்து ஆண்மையின் சின்னமாக விளங்குவ தன்றோ? அதனை எளிதில் களைந்துவிடுதல் அழகாகாதே. மீசையையும் வைத்துக்கொண்டு ஆசையாகக் கூழையும் நன்கு பருகத் தொடங்க வேண்டும். பழக வேண்டும். ஒன்றைவிட்டு ஒன்றை மட்டும் கொண்டு விடுதல் சிறப் பாகாது.

அப்படியேதான் நட்பும். நண்பராக வேண்டியவருள் நல்லவரையும் வல்லவரையும் அறிந்து ஆய்ந்து நட்புக் கொள்ள வேண்டும். ஆய்வது எளிதன்று. புறத் தோற் றத்தைக்கொண்டு முடிவுகட்டுதல் யாங்ஙனம்? எனவே, ஆராய்ந்து பார்க்க முயன்றும் பல முறைகளில் தவறான முடிவே ஏற்படுதலும் உண்டு. அதற்காக “நட்பே வேண்டாம்; தனியே வாழலாம்” என்று எண்ணிவிடக் கூடுமா? நன்றாக ஆராய வேண்டும். எண்ணி எண்ணிப் பார்க்க வேண்டும். பின்னர் முடிவுசெய்ய வேண்டும். வள்ளுவர் அதனால்தான் ஆய்ந்து ஆய்ந்து நட்புக் கொள்ள வேண்டும் என்று அடுக்கி அடுக்கிக் கூறுகின்றார் போலும்.

> ஆய்ந்(து)ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
> தான்சாம் துயரம் தரும்,

என்பது அவர்தம் அறிவுரை.

தலைவன் ஒருவன் தலைவியைக் கண்டு அன்பு பூண்டு ஒழுகுகின்றான். பிரியேன் என்று சொன்னான். ஆனால் பிரிவு வந்துவிட்டது. அவனுக்கும் பிரிய மன மில்லை. பிரிந்து சென்றால் ஏற்படும் விளைவை யெல்லாம் அவன் அறிவான். “உயர்ந்த சிறப்பினையும் குறையாத

வளத்தினையும் உடைய பூம்புகார்ப்பட்டினமே பெறுவதாயினும் என் தலைவியை யான் பிரியேன். அவள் தண்ணிய தோளை மறவேன்" என்றெல்லாம் எண்ணியவன்தான் அத் தலைமகன். என் செய்வது ? பிரிகின்றான். பிரியாமற் பிரிந்து சென்று விடுகின்றான். காலம் தாழ்க்கின்றது. தலைவி வருந்துகிறாள். ஆருயிர்த் தோழி அன்புரை கூறித் தன் அன்புத் தலைவியை ஆற்ற முயல்கின்றாள். தலைவியின் துயர் தணியவில்லை. வருந்தி வருந்தி மாழ்குகின்றாள். உடனே தோழி வேறு வகையின்றிக் கடிந்து அறிவுரை சொல்கின்றாள். அறம் பேசுகின்றாள். தலைவன் நல்லவன். அன்புடையவன். ஆனால் இப்போது வரத் தவறிவிட்டான். அதற்கு அவன் பெரிதும் வருந்தும் இயல்புடையவன். அதனால் அவன் வரும்வரை ஆற்றியிருக்க வேண்டுமென்பது தோழியின் கருத்து. தலைவியோ சற்று வியப்படைகின்றாள். "என் தலைவன், இன்பப் பெருந்தலைவன் மிகவும் நல்லவனாவானே ? சொன்ன சொல்லைத் தவறாது பேணும் வல்லவனுமாவானே ? அவன் ஏன் வந்திலன் ? ஒருவேளை அவன் கொடியனோ ? உள்ளொன்று புறம் பொன்று கொள்பவனோ ?" என்று ஐயுறுவது போல் ஆற்றாமை மிக்கு வருந்துகின்றாள். "உண்மையில் என்மீது அன்பிருப்பின் வாராதும் இருப்பனோ ? இவன்மீது யான் நட்புக்கொண்டு இப்போது வாடுகின்றேன். என்செய்வேன் ?" என்று ஏங்குகின்றாள். கலங்குகின்றாள். தோழி தொடர்கின்றாள் : "தலைவி ! நீ இப்போது வருந்தாதே. வருந்திப் பயனில்லை. நீ அன்று நட்புக்கொண்ட காலத்து நன்றாக எண்ணி நாடிநாடி ஆய்ந்துஆய்ந்து உணர்ந்து அறிந்து நட்புக்கொண்டிருக்க வேண்டும். அன்று அன்பால் நேயம் நிறைந்து ஒழுகினாய். இன்று பண்பால் அதனைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். வருந்திப்

பயனில்லை. அவன் நல்லவன். தவருது அன்பு செய்வான் என்பதை யான் உணர்த்தியும் உணர்கிலை. நட்புக் கொண்டபின் வருந்துதல் அறிவன்றே? நட்பைப் பற்றிப் பெரியோர் கூறுவதை நீ அறியாயோ? ஒருவரை நாடி (ஆய்ந்து) நட்டல் வேண்டுமேயன்றி நட்டு (நண்பு பூண்டு) ஆய்தல் தகாது என்பது பெரியோர் கருத்து" என்று வற்புறுத்திக் கூறிக் குறை நயப்பிக்கின்ருள். இதன்கண் நாம் உணர வேண்டிய நற்பொருள் எவ்வளவு அழகாகக் கூறப்பட்டுள்ளது!

நியுங் கண்டு நுமரொடும் எண்ணி
அறி(வு)அறிந்(து) அளவுதல் வேண்டும் மறுதரற்(கு)
அரிய வாழி! தோழி! பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே

— நற்றிணை-32.

இதனுல் " நாடி ஆராய்கின்றபொழுது ஒருவன் தானும் எண்ண வேண்டும். தமரொடும் எண்ண வேண்டும். அறிவு அறிந்து கொண்டு அளவுதல் வேண்டும்" என்பது விளங்குகின்றது. அதற்குக் காரணமும் அடுத்து விளக்கும் இப்பாடல் கபிலர் பெருமான் இசைத்தருளியதாகும்.

தானும் தன்னவரும் யாவரும் ஒன்று சேர்ந்து கொண்டு நட்பை நாடி ஆராயும்போது எவ்வாறு ஆராய வேண்டும்? எவ்வெவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்? யாரை நண்பராய்ப் பெற விரும்புகின்ருேமோ அவரிடம் குணம் இருக்கின்றதா? குடிமையுள்ளதா? குற்றம் இல்லையா? அவரோடு பழகும் இனம் நல்லதுதானு? என்பதை எல்லாம் ஆய்தல் வேண்டும்.

ஒருவன் பிறப்பால் நல்ல குடியைச் சார்ந்தவன். அவனைப் பற்றி என்ன எண்ண வேண்டும் ? நல்ல குடியிற் பிறந்தவனாயினும் நல்ல பண்பு இருக்கின்றதா என்பதை யறிய வேண்டும். நன்மையைப் போற்றும் நற்பண்போடு கூடத் தீமை கண்டு அஞ்சும் தன்மையும் உளதா என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அவன் அவ்வாறு பழி அஞ்சும் பண்புடையன் என்பதை உணர்ந்தால் உடனே அவனை நட்பாக்கிக் கொள்ள முயல வேண்டும். கொடுத்தும் கொள்ள வேண்டிய சிறந்த நட்பு அதுவாகும்.

இச்சகம் பேசும் கொச்சை மாக்கள் நட்புக்குரியர் அல்லர். முன்னின்று புகழ்வர். மகிழ்வர். வளம் மிகுந்த நிலையில் அளவளாவி நிற்பர். வளம் குறையத் தொடங்கின் சொல்லாது வழுக்கிச்செல்வர். உண்டானபோது கூடி நின்று இல்லாதபோது சொல்லாது ஓடும் அவரை நண்பர் எனக்கொள்வது இயலாது. அத்தகையாரை ஒதுக்கிவிட வேண்டும். துன்பத்தில் கைவிடுவார் நட்பு எண்ண எண்ணத் துன்பம் தருவதாகும்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்பது நட்பின் இலக்கணமாகக் கொள்ளத்தக்கது. நண்பராவார் தீங்கியற்றத் துணியின் தடுத்து இடித்துரைத்துத் தாங்கும் நட்பே தலையாய நட்பு.

அதனால்தான்,

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

என்று அழகாகக் கூறப்பட்டுள்ளது நம் அருமைத் திருக்குறளில்.

எவ்வாறு நல்லவர் நட்பைக் கொடுத்துங் கொள்ள வேண்டுமோ, அவ்வாறே தீயவர் நட்பை ஒன்று கொடுத்தும் ஒழித்துவிட வேண்டும். "உடும்பு வேண்டாம்; கை விட்டாற்போதும்" என்ற நிலை வருமுன் ஒதுக்கித் தள்ளி விட வேண்டும். "ஒன்று ஈத்தும் ஒருவுக ஒப்பிலார் நட்பு" என்று ஈவிரக்கமின்றிக் கண்டிப்பாகக் கூறியுள்ளார் பொய்யில் புலவர்.

நட்புக் கொள்ளுதலில் நல்லவர் எப்படி இருப்பார்? தீயவர் எப்படி இருப்பார்? என்பதை நம் பழந்தமிழ் மக்கள் நன்கறிந்திருந்தனர். மன்னரும் நன்குணர்ந்து போற்றிவந்தனர். பொன்னி நாடாண்டதோர் சோழ மன்னன் இதனை நன்குணர்ந்து உலகுக்கு எடுத்துரைக்கின்றான். தன்னைப் பற்றிக் கூறிக்கொள்வது போல் உலகுக்கு நன்மை பயக்கும் நல்லுரை கூறுகின்றான். சோற்று வளம் மிக்க சோணாட்டு மன்னன் தன் வாழ்வில் எவ்வளவு மக்களோடு பழகியிருப்பான்? நன்மை கூறும் நல்லாயத்தை அறிந்திருப்பான் அவன். களைந்து எறியப் பட வேண்டிய கயவரையும் கண்டிருப்பான். கொலையிற் கொடியாரை ஒறுத்தும் நிலையிற் சிறந்தாரை உயர்த்தியும் வாழ்ந்திருப்பான் அல்லனோ? அவன் கூறுகின்றான் நட்புக் கோடலின் இயல்பை. இது பற்றி விரித்துக் கூறவில்லை. விளக்கவுரை பெறுதற்குரிய இரண்டே இரண்டு உவமைகளால் விளக்கி விடுகின்றான். தனது வாழ்வில் அவனுக்குப் புலிபோன்றவர் நட்பு வேண்டுமாம். எலி போன்றவர் நட்பு வேண்டவே வேண்டாவாம். இவ்வளவுதான் அவன் சொல்வது. புலியினிடம் உள்ள பண்பையுணர்த்திப் புலி போல் வாழ வேண்டும் மக்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றான். எலியின் இழிவையும்

கயமை நிலைமையையும் எடுத்துக்காட்டி எலி போல் வாழ்வாரை எள்ளி ஒதுக்க வேண்டும் என்கின்றான். புலி, எலி என்ற இரண்டையும் உணர்த்தித் தன் புகழை நிலைநிறுத்திக் கொண்டான் புலமைமிக்க மன்னவன். அன்று நாட்டில் புகழ் பெற்று வாழ்ந்த அப்பெரியோன் இன்று அவனியற்றிய அருமைப் பாட்டில் வாழ்கின்றான். அவன் பெயர் சோழன் நல்லுருத்திரன் என்பதாகும். இது நல்லுத்திரன் எனவும் வழங்குகின்றது. பண்டைச் சோழர்களுள் சற்றுக் காலத்தாற் பிற்பட்டவனாக இவன் கருதப் படுகின்றான். இவன் உயர்ந்த உள்ளம் உடையவன், பரந்த கல்வியுடையவன், நிறைந்த கேள்வி உடையவன். வினைத்திட்பம் நிறைந்தவன். முடியுடை மூவேந்தருள் தலைசிறந்து விளங்கியவன். குறுநில மன்னரும் செல்வரும் இவனைச் சூழ்ந்துகொண்டேயிருப்பர். இவர்களின் துணையால் செயற்கரிய செய்து பேரும் புகழும் பெற்றான். தன்னைச் சுற்றி நின்ற மாந்தரின் குணம், செயல்களை நன்கு பயின்று அறியும் வாய்ப்பினைப் பெற்றிருந்தான் போலும். அநுபவத்தால் தன் வாழ்வில் சிலர் கூட்டுறவால் ஆக்கமும் வேறு சிலர் கூட்டுறவால் தீங்கும் அவனுக்கு நேர்ந்திருக்க வேண்டும். கீழோரையும் மேலோரையும் கண்டு பழகிய அவன் தனக்குக் கீழோர் கேண்மை இல்லாது ஒழிய வேண்டும் என்பதும், மேலோர் நட்புக் கூட வேண்டும் என்பதும் தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டனன். தான் வாழ்வது போல் தன் நாடும் வாழ விரும்பும் ஒருவன் இவ்வாறுதான் எண்ண முடியும். இத்தகைய "நாடுகாவல்" உள்ளம் இருந்த இவனை யொத்த மன்னரைக் கொண்டுதான் "மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்" என்ற வாய்மை பிறந்திருக்க வேண்டும்.

நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்

என்று பாடிய புலவர் மோசிகீரனாரை நாம் இங்கே எண்ணி மகிழ வேண்டும்.

மேலோரைப் புலியென்றான் மன்னன். கீழோரை எலி என்றான். புலி சிறப்புடையது, உயர்ந்த கொள்கை யுடையது. மானம் உணர்ந்து போற்றுவது. மயிர் நீப்பின் வாழாமை கவரிமான் பண்பு என்று போற்றுகிறோம். அதுபோலவேதான் புலியினையும் போற்ற வேண்டும். புலி பசித்தால் புல்லைத் தின்னாது. நல்லோர் எவ்வளவு வறுமை யால் வாடினாலும் தீச்செயல் செய்து பிழைக்க எண்ணார். எவ்வாறேனும் வயிறு கழுவினால் போதுமென்ற எண்ணம் சான்றோர் மனத்தில் ஒருநாளும் இடம்பெறாது. இது சீரிய பண்பாகும். இதனைத்தான் புலியின் இடத்தும் காண்கின்றோம். புலியோடு பழகிய விறலுடை மன்னவன் புலியின் இயல்பை உணர்ந்துதான் போற்றியிருப்பான்.

புலி தனது உணவுக்கு வேட்டைமேற் செல்லுகின் றது. வழியில் காட்டுப் பன்றியொன்று வருகின்றது. கடுங்கண்ணும் வெருவரும் தோற்றமுமுடைய அப் பன்றியை வீழ்த்தத் தாவுகின்றது புலி. புலியின் ஆற்ற லால் பன்றி மடிந்து வீழ்கின்றது. ஆனால் வலப்பக்கம் வீழ வேண்டியது இடப்பக்கம் வீழ்ந்து விடுகின்றது. உண் ணும் பொருள் ஒன்றை நாம் பெறும்போது அது தவறிச் சாய்க்கடையில் வீழ்ந்துவிடின் அதனை நாம் தொட மாட்டோம். தொடுதற்கு எவ்வளவு கூசுவோம்! எவ் வளவு அருவருப்புக் கொள்வோம்! கிடைத்தற்கரிய அமுது எனினும், தாங்குதற்கரிய பசி எனினும் தயங்காது

நீக்கிவிடுகின்றோம். தள்ளிச் செல்லுகின்றோம். அந்த உணர்ச்சிதான் பன்றியை இடத்தில் வீழ்த்திய புலிக்குப் பொங்கியது. தனது நிலையின் பெருமையையும் தான் எண்ணிப் பார்க்கின்றது. பசி மிகுதியெனினும் அதனைப் பற்றாது செல்லுகின்றது. உண்ணாது பட்டினி கிடக்கின்றது. மறுநாள் விறுகொண் டெழுந்து யானை ஒன்றை வேண்டிச் சென்று வலம்பட வீழ்த்தி உண்டு மகிழ்கின்றது. இதுதான் மானம். இதுதான் ஆண்மை. இதுதான் ஊக்கம். இதுதான் செல்வம். இத்தகைய எழிற்பண்பு மக்களிடை நிலவ வேண்டும். அத்தகைய மக்களையே—உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும் மக்களையே — நட்பாகக் கொள்ள வேண்டும் என்று எண்ணினான் சோழன் நல்லுருத்திரன்.

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

என்ற திருக்குறளும் இதனைத்தான் வேறு வாய்பாட்டில் கூறுகின்றது.

கடமா தொலைச்சிய கான்உறை வேங்கை
இடம் வீழ்ந்த(து) உண்ணாது இறக்கும்—இடம் உடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்

என்ற நாலடியார் (300) இங்கு எண்ணி மகிழற்குரியது.

இவ்வாறு புலியைப் போற்றும் மன்னவன் எலியை எண்ணி எச்சரிக்கின்றான். எலி தன்னலமிக்கது. நல்லுணர்ச்சி அற்றது. பிறருழைப்பால் விளையும் நெல்லைத்

திருடித் திருடித் தின்பது மட்டுமன்றிச் சேர்த்துச் சேர்த்துத் திரட்டித் தன் வளையிலும் வைத்துக்கொள்கின்றது. என்ன கொடுமை! என்ன இழிவு! என்ன கயமை! தன் முயற்சியின்றிப் பிறரைக்கொண்டு வாழக் கருதும் பேதையோரை இவ் வெலிக்குத்தானே ஒப்பிட வேண்டும்? இவ் வெலிகளை — மனித எலிகளை — எவ்வாறுயினும் விட்டு நீங்க வேண்டும். அவர்கள் தொடர்பு எப்போதும் நேரக் கூடாது என்பதுதான் புலமைமிக்க பொன்னி மன்னனின் பொன்னுன எண்ணம்.

உவமை என்பது பொருளை விளக்கும் வாயில். இது பற்றித் தொல்காப்பியம் ஒரு இயல் முழுதும் எடுத்துரைக்கின்றது. தொல்காப்பியரின் நுண்மாண் நுழை புலம் இவ்வியலில் நன்கு காணப்படுகின்றது என்பர் அறிஞர். அத் தொல்காப்பியர், உவமையை ஏன் கொள்ள வேண்டும் என்பதனை மிகச் சுருக்கமாக அறிவித்துள்ளார். "உவமை என்பது பொருள் புலப்பாடே" என்று அவர் கூறிய விளக்கத்தை அடியொற்றி எழுந்த உவமைகள் தாம் இப் புலியும் எலியும். உலகுள்ளவரை இவ்வுவமையும் வாழும்; உவமையை உதவிய உருத்திரச் சோழனும் வாழ்வான்.

இதோ அந்த அழகுப் பாடல்!

விளைபதச் சிறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்(டு)அளை மல்க வைக்கும்
எலி முயன்(று) அனையராகி உள்ளதம்
வளன் வலியுறுக்கும் உளம் இலாளரொடு
இயைந்த கேண்மை இல்லாகியரோ!
கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென

அன்றவன் உன்னு(து)ஆகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்(து)
இருங்களிற்(று) ஒருத்தல் நல்வலம் படுக்கும்
புலி பசித்தன்ன மெலி(வு)இல் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையோ(டு)
இயைந்த வைகல் உளவாகியரோ!

—புறம் - 190.

இவ்வளவு நலம் வாய்ந்த அறிவு நுணுக்கமும் அழகுணர்ச்சியும் கவிதை நலமும் ஒருங்கு பெற்று விளங்கிய அச் சோழன், இது தவிரக் கலித் தொகையில் முல்லைப் பகுதியையும் பாடியவன் என்பர் அறிஞர். கவிதை எதற்கு? உரைநடையே போதும்! என்று கவிதை நலம் அறியாது கூறும் நல்லோர் இத்தகைய அருமைக் கனிகளை — கவிதைகளை — அறிந்து போற்றும் நன்னாளே நமது பொன்னாளாம். "எழுக! உயர்க! முயல்க! உஞற்றுக! வெல்க!" என்பதே நம் உயிர்க் கொள்கையாக நிலவ வேண்டும். புலிகளாய் வாழ்வோம்! எலிகளை வீழ்த்துவோம்!

5. நல்லது செய்வோம்

உயிருள்ள பொருள்கள் யாவும் இயங்கும் தன்மை யுடையன. அசைவற்று வளர்ச்சியின்றிக் கிடத்தல் அவற் றுக்கு இயல்பன்று. ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிர் கள் பெற்றிருக்கின்றன என்கின்றனர் அறிஞர். தொல் காப்பியனாரும் இதனை எடுத்துக் காட்டி விளக்கிச் செல் கின்றார்.

முதலாவதாக ஓரறிவுடைய உயிர்களைக் கூறுகின்றார். புல், மரம் முதலியவை உற்று அறியும் அறிவை மட்டும் உடைய உயிர்கள்.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே.

— தொல். மரபு - 27.

புல்லும் மரனும் ஓரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

— தொல். மரபு - 28.

புல், மரம் மட்டுமன்றி வேறு பிறவும் அவ் வினத்தில் உண்டு என்பதனை மிக அழகாகப் "பிறவும் உளவே அக் கிளைப் பிறப்பே" என்று தெளிவுறுத்துகின்றார்.

இரண்டறிவினைக் கொண்ட உயிர்களாவன நந்து (நத்தை) முரள் முதலியன. இவை பெற்றுள்ள அறிவு கள் உற்று அறிதலும் நாவால் சுவைத்தறிதலும் ஆகும்.

இரண்டறிவதுவே அதனொடு நாவே.

— தொல். மரபு - 27.

நந்தும் முரளும் ஈரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

— தொல். மரபு - 29.

தொட்டு அறிதல், சுவைத்து அறிதல் ஆகிய இரண்டுடன் உயிர்த்து (மோந்து) அறியும் அறிவையும் பெற்று மூன்று அறிவு உயிர்களாய் இருப்பவை சிதலும் எறும்பும் பிறவும் ஆகும்.

மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே.

— தொல். மரபு - 27.

சிதலும் எறும்பும் மூவறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

— தொல். மரபு - 30.

நான்கறிவுடையவை நண்டும் தும்பியும் பிறவும் ஆம். உற்று அறிதல், சுவைத்து அறிதல், மோந்து அறிதல், பார்த்து அறிதல் ஆகிய நான்கு அறிவுகளும் நண்டு, தும்பிகட்கு உண்டு.

நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே.

— தொல். மரபு - 27.

நண்டும் தும்பியும் நான்கறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

— தொல். மரபு - 31.

ஐந்தாவது அறிவு செவியாற் கேட்டறியும் அறிவு. மேற்கூறிய நான்கறிவுடன் இவ்வறிவையும் பெற்று வாழ்வன ஐந்தறிவுயிர்களாம். அவை விலங்குகளும் விலங்கு போல் வாழும் மக்களும் பிறவும் ஆம். மக்கள் வடிவம் பெற்றிருந்தும் "மன அறிவு" இல்லையெனில் ஐந்தறிவுயிர்களாகவே கருத வேண்டும் என்பது பெரியோர் கருத்து.

ஐந்தறிவதுவே அவற்ருெடு செவியே.

— தொல். மரபு-27.

மாவும் மாக்களும் ஐயறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

— தொல். மரபு-32.

உற்றறிதல் (ஊறு), சுவைத்தறிதல் (சுவை), உயிர்த்தறிதல் (நாற்றம்), பார்த்தறிதல் (ஒளி), கேட்டறிதல் (ஓசை) என்ற ஐந்தறிவும் நிறைந்து அதனேடு ஆருவதாக "மனன் அறிவு"ம் பெற்று விளங்குபவரே மக்கள் ஆவர்.

ஆறறி வதுவே அவற்ருெடு மனனே.

— தொல். மரபு-27.

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

— தொல். மரபு-33.

இங்கே மக்கள் ஆறறிவுயிர் எனல் பொருத்தமாகவே உளது. ஆனல் "பிறவும் உளவே" என்பதன் கருத்து யாதோ? எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாம் அனைவரும் இராமாயணக் கதையினை நன்கு அறிவோம். கம்பன் தமிழாக்கித் தந்துள்ள சிறப்பே தனிச் சிறப்பு என்பதும் நமக்குத் தெரியும். வாலிக்கும் இராமனுக்கும் சொற்போர் நடைபெறுகின்றது. விற்போர் செய்யும் வாய்ப்பு வாலிக்கு இல்லாது போய்விட்டதன்ருே! அச் சொற்போரில் வாலியின் ஒழுக்கக் குறைவைக் கண்டிக்கிருன் இராமன். வாலியோ தான் மனித இனத்தைச் சார்ந்தவனல்லன், விலங்கினம் என்று கூறி விலங்குக்குக் கற்பொழுக்கம் இராதே எனக் கேட்கின்ருன். அதற்கு விடையாக இராமன் கூறும் பகுதியைக் கம்பன் அமைத்திருக்கும் அழகை இங்குக் காண வேண்டும்.

நன்று, தீது, என்று இயல்தெரி நல்அறிவு
இன்றி வாழ்வது அன்றோ விலங்கின் இயல் ?
நின்ற நல்நெறி, நீ அறியா நெறி
ஒன்றும் இன்மை, உன்வாய்மை உணர்த்துமால்.

— வாலிவதைப்படலம் - 117.

தக்க இன்ன, தகாதன இன்ன, என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே. மனுவின் நெறி
புக்கவேல், அவ் விலங்கும் புத்தேளிரே.

— வாலிவதைப்படலம் - 118.

இதனால் நாம் அறிவது ஆறுவது அறிவாகிய பகுத்தறிவு இருப்பின் விலங்கும் மக்கள் இனமாம்; மக்கள் யாக்கை பெற்றிருந்தும் ஆறுவது அறிவு இன்றேல் மக்களும் விலங்கே என்பதாகும். இதனை யுணர்ந்தால்தான் தொல்காப்பியனார் கூறிய

மாவும் மாக்களும் ஐயறி வினவே
மக்கள் தாமே ஆறறி வுயிரே

என்ற நூற்பாக்களின் நுண்மை புலனாகும்.

எனவே, நம்மை நாம் மக்கள் என மதித்திட வேண்டுமாயின் ஆறறிவும் விளங்கப் பெற்றுத் திகழ வேண்டும் நாம். அந்த ஆறுவது அறிவாகிய "மன அறிவு" தான் 'நன்று தீது என்று இயல்தெரி நல் அறிவு' எனப்படுவது. அவ்வறிவுடைய நாம் அதனைப் பயன்படுத்த வேண்டும். எப்படி ?

ஆறுவது அறிவு பகுத்துணரும் பகுத்தறிவு. எண்ணி எண்ணி உணரும் அறிவு. உணர்ந்து உணர்ந்து பார்க்கும்

அவ்வறிவைக் கொண்டு நன்மையை ஆற்ற வேண்டும். தீமையை விட்டொழிக்க வேண்டும். அதுவே மனித வாழ்வு. ஈராயிரம் ஆண்டுகட்கு முன் நந்தம் அருமைத் தமிழகத்தின்கண் வாழ்ந்த சோழ மன்னன் ஒருவன் இதனை நன்குணர்ந்து போற்றி வந்துள்ளான். நாடாளும் மன்னன் ஏடாளும் புலவனாக எழுத்தெழுதிப் புகழ் பெற்றான். காவலன் கவிதை இயற்றிப் பாவலன் ஆனான்; அவன்தான் கோப்பெருஞ்சோழன். அவன் பெயரிலேயே அவன் சிறப்பெல்லாம் விளங்கக் காண்கின்றோம். கோ + பெருமை + சோழன் எனப் பிரித்துப் பார்த்துப் பொருள் உணர்ந்து மகிழ வேண்டும்.

இத்தகைய மன்னன் அறம் போற்றி மறம் நீக்கி வையமாண்டு வந்தான். அவன் பெற்ற மக்களே — அருமைப் புதல்வர்களே — அவனுக்கு மாறாகப் போர் தொடுத்து விட்டனர். மாற்றார் சூழ்ச்சியோ, சூழ்நிலையின் வினையோ தந்தையை எதிர்த்தனர் மக்கள். மன்னன் என் செய்வான்? வாளாவிருப்பின் 'கோழை' என்ற இகழ்ச்சி பிறந்துவிடும். எனவே, மான உணர்ச்சியோடு தானும் போர்தொடுக்கத் துணிந்தனன். அறிவும் திருவும் வாய்த்த சோழன் இப்படிப்பட்டதோர் சிக்கலில் இறங்கினான். புலவர் ஒருவர் — அஞ்சா நெஞ்சினர் — அறிவின் உறைவிடம் — பண்பின் திருவுரு — இடையில் வந்து கோப்பெருஞ் சோழனுக்கு அறிவுரை கூறினார். அப்புலவர் பெருமானின் சொல்லுக்குச் செவி சாய்த்துப் போர் நிறுத்திய சோழனின் பெருமையை என்னென்பது?

கோப்பெருஞ்சோழன் புலவரிடை வளர்ந்தவன். புலவருடன் வாழ்ந்தவன். கண்ணுற் காணாமலேயே பிசிர் ஆந்தையாரிடம் பெருநட்புக் கொண்டிருந்தவன்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்

என்ற குறளுக்கு இலக்கியமாய் விளங்கினுன்.

புலவர் கூறியாங்குப் போரை நிறுத்தினுன். தன்னரசை மக்களுக்கு வழங்கித் தான் வெளியேறினுன். உலகப் பற்றை விட்டொழித்துத் தவங் கிடத்தலை விரும்பினுன். வடக்கிருந்து உயிர் மாய்த்துக் கொள்ள விரும்பினுன். வாழ்ந்தது போதும் என அமைதி பெற்றுக் கிடக்கத் துணிந்தான். இவ்வாறு "வடக்கிருந்து உயிர்விடுதல்" அக் காலத்தில் இருந்ததோர் வழக்காகும். சோழ மன்னன் வடக்கிருக்கின்ருன் என்று கேட்டதும் அவனுடைய நட்புச் செல்வர்களாகிய புலவர் பெருமக்கள் பலரும் அவனுடன் வடக்கிருக்கத் துணிந்துவிட்டனர். வடக்கிருந்த அவர்கள் அனைவரும் தத்தமக்கெனச் சிறிடம் ஒன்றை அமைத்துக்கொண்டு ஊணும் உறக்கமும் விட்டு நல்லன எண்ணி நல்லன சொல்லி நாட்களைக் கழித்து வந்தனர். அவர்கள் அந் நிலையில் ஆராய்ந்து கூறிய அறிவுக் கதிர்கள் எத்துணை எத்துணையோ!

ஒருநாள் அருகருகே இருந்த அனைவரும் ஓர் அருமையான கேள்வியை எழுப்பினர். "நல்லது செய்ய வேண்டுமா?" என்பதே அக் கேள்வி. இஃதென்ன அறியாமை! அறிவுக் களஞ்சியங்களான புலவர்களிடை இப்படியும் எண்ணமுண்டாகுமோ? என்ன வியப்பு? இவ்வாறு நினைக்கிறீர்களல்லவா?

அவர்கள் எழுப்பிய கேள்வியில் அறிவும் உளது. இல்லை என மறுத்தல் இயலாது. வாழ்க்கையின் அநுபவத்தைக் கொண்டு பார்த்தால் இதனை உணரலாம்.

வாழ்வில் ஒருவன் நன்மையே செய்து வருகின்முன். தீமைக்கு இடம் தராது ஒதுக்குகின்முன். அப்படி வாழும் அவன் வாழ்வில் சொல்லொணுத் துன்பம் அடைகின்முன். துடியாய்த் துடித்துக் கதறுகின்முன். துன்பம்! துன்பம்!! எங்கும் துன்பம்!!! இவ்வாறு காண்கின்முன் அவன். ஆனுல் மற்ருெருவன் அறம் விட்டு மறமே செய்கின்முன்; பொய் பேசுகின்முன். கொலேயும் களவும் பிற தீமை களும் புரிகின்முன். இருட்டுச் சந்தையில் (*Black Market*) திருட்டுத்தனமாய்க் கொள்ளே அடிக்கின்முன். மாட மாளி கையும் கூட கோபுரமும் அமைத்து ஆடம்பரமாய் வாழ் கின்முன். நோயில்லே. நொடியில்லே. அல்லலில்லே. அழுத லில்லே. ஏன்? நல்லது செய்தவன் வாடுகின்முன். "மேலோர் கள் செக்கிழுத்து வெஞ்சிறையில் வாடுவது" ஏன்? கீழோர்கள் பார் புகழ இன்புற்று வாழ்வது ஏன்? தினே விதைத்தவன் தினேயறுக்காது வினேயறுப்பது ஏன்? விளக்க முடியுமா? ஒருவாறு சமாதானம் கூறலாம். அவர்கள் மறுபிறவியில் பயன் அடைவர்; தீமைக்கேற்ப வாடி வருந்துவர் எனலாம். ஆனுல் நமக்குள் அறிஞர் உலகில் இருபெருங் கருத்துக்கள் உளவே. ஒன்று, மறு பிறவி உண்டு என்பது. மற்ருென்று, மறுபிறவி இல்லே என்பது. இரு திறத்தாரும் தத்தம் கருத்துக்கு நற்சான்று காட்டுகின்றனரே. மறுபிறவி இல்லேயெனின் என் செய் வது? எப்போது நமது நல்வினேக்குப் பயனே நுகர்வது?

இப்படித்தான் அன்று கோப்பெருஞ் சோழனிடம் வடக்கிருந்த பெரியார்கள் திருப்பித் திருப்பிக் கேட்டனர் போலும்! சோழனும் ஆற்றல் மிக்க அறிஞன் அல்லனே? சோர்வின்றிச் சிந்தித்தான். பிறவி மீட்டும் உண்டு என்ப தையும் இல்லே என்பதையும் பற்றி முடிவாகக் கூற முடி யாது எனக் கருதினுன். எனவே, அறிவுரை கூற முன்

வந்தான். "பிறவி மீட்டும் உண்டெனினும் இன்றெனினும் எவ்வாறுயினும் சோர்ந்து விடாது நல்வினை (அறம்) செய்ய வேண்டும்; செய்தே தீர வேண்டும்" என்று முடிவுரை (*Judgment*) வழங்கினுன். அம் முடிவுரை என்றும் இறவாத புகழ் படைத்த கவிதையாய் நமது 'புறநானூறு' என்னும் கருவூலத்தில் மாணிக்கமாய்த் திகழ்கின்றது.

புலவர் தொடுத்த கேள்வியையே தொடக்கமாகக் கொண்டு கவி பொழிகின்ருன் காவலன். கேட்டவர் உள்ளத்தில் இருந்த ஐயம் எல்லாம் அகன்று நல்ல தெளிவு பிறக்குமாறு விளக்கி விளக்கித் தருகின்ருன். பிறவி மீட்டும் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? "நல்வினை செய்க" என்று நல்லறிவு கொளுத்துகின்ருன். பிறவி உண்டென்பார்க்கும் நல்வினைப் பயன் கூறுகின்ருன். இல்லை என்பார்க்கும் பயன் கூறுகின்ருன். மேலுலகம் உண்டெனினும் இல்லை எனினும் தயங்காது "அறம்—நன்மை—நல்வினை—செய்க" என்று வற்புறுத்துகின்ருன். அம் மன்னன் இசைத்த அப் பாடல் வருமாறு:—

செய்குவம் கொல்லோ நல்வினை? எனவே
ஐயம் அருஅர் கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே.
யானை வேட்டுவன் யானையும் பெறுமே.
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே.
அதனுல்,
உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கில் எய்தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்.
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்

மாறிப் பிறப்பின் இன்மையுங் கூடும்.
மாறிப் பிறவார் ஆயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே.

— புறம் - 214.

இப் பாடலின் உயிர்க்கருத்து நல்வினை செய்ய வேண்டும் என்பதாகும். நல்வினை செய்யுங்காலும் உயர்ந்த குறிக்கோளுடன் முனைய வேண்டும் என்பதனையும் இப் பாடலில் காண்கின்றோம். மேல் உலகு (சுவர்க்கம்) உண்டெனில் இன்பம் கிடைக்கும். இதனை நம்பாதவரும் உளர். மேல் உலகம் அவருக்கில்லை எனினும் அவருக்கு மறுபிறவியும் அடுத்து வரும் பிறவித் துன்பமும் நீங்கி விடுமே. ஆனால் மறு பிறவியையும் நம்பாது மறுக்கின்றவர் நிலை யாது? அவருக்கு நல்வினையால் என்ன பயன் எனில் இமயம் போன்ற புகழேனும் கிடைக்குமன்றோ? அதனால் அவ்வாறு புகழொடு இறத்தல் சாலச் சிறந்ததாகும். எனவே, தயங்காது செய்ய வேண்டும் நல்வினை. இவ்விளக்கமெல்லாம் இப் பாடலில் பொதிந்து கிடக்கக் காண்கின்றோம். சிறியதோர் ஆலம் விதையில் பெரியதோர் மரம் அடங்கி மறைந்துள்ளது போல் இச் சிறு பாடலில் அரும்பெருங் கருத்துக்கள் யாவும் அடங்கிக் கிடக்கின்றன.

உலகமெல்லாம் போற்றும் ஒப்பிலாப் புலவர் பெருமான் வள்ளுவர். அவர்தம் பொன்னுரை யெல்லாம் அறவுரையே. அப் பெரியார், 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தில் இறுதிச் சிகரமாய் வைத்து எழுதிச் சென்ற குறளைப் பார்த்தால் கோப்பெருஞ் சோழனின் ஆட்சிக் கொற்றத்துடன் அறிவுக் கொற்றமும்

நன்கு விளங்கும். என்னென்னவோ சொல்லி இனிக்க இனிக்க உள்ளத்துட் பாய்ச்சும் ஒளிக்கதிர் தந்த வள்ளுவர் முடிவாகக் கூறிவிடுகின்றார்.

செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி

என்பது அவர்தம் திருக்குறள். முடிவு இதுதான். ஒருவன் செய்ய வேண்டியது அறம்—நல்வினை. விட்டொழிக்க வேண்டியது தீவினை—பழி. அவ்வொருவன் எவ் வினத்தைச் சார்ந்தவனாயினும், எம் மரபைச் சேர்ந்தவனாயினும்—எக்கொள்கையை உடையவனாயினும், பிறவி உண்டெனினும் இன்றெனினும் மேல் உலகம் உண்டெனினும் இன்றெனினும், நம்பினும் நம்பாவிடினும், ஆத்திகனாயினும் நாத்திகனாயினும் அறம் செய்வானாக என்று கருதி வள்ளுவர் கூறியதற்கு விளக்கவுரையாகவன்றோ கோப் பெருஞ் சோழனின் பாடல் விளங்குகின்றது!

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ள வேண்டும்" என்பதும் வள்ளுவர் ஆணை. முயற்சி உயர்ந்து விளங்க வேண்டும். உயர்விலே சென்று தோல்வியுற்றாலும் (உறுவதில்லை) தயங்கக் கூடாது. இருவர் வேட்டைக்குச் செல்கின்றனர். ஒருவன் தன் ஒரே அம்பினால் முயல் ஒன்றை எய்து வீழ்த்தி வெற்றிப் பெருமிதத்தோடு வருகின்றான். மற்றொருவனோ முயலை விட்டுவிடுகின்றான். அதனைப் பற்றி அவன் சிந்திக்கவேயில்லை. தனது பெருமைக்கும் முயற்சிக்கும் ஏற்ப யானை வேட்டையினையே விரும்புகின்றான். யானையொன்றைத் தேடித் திரிந்து அருமுயற்சியால் கண்டு பிடித்து வேல் எறிகின்றான். வீராதி வீரன்! சூராதி சூரன்! ஆனால் யானையோ அவனினும் ஆற்றல் குறைந்ததாக இல்லை. அவன் ஆற்றலொடு பாய்ச்சிய வேலினையும்

பொருட்படுத்தாது வேலுடன் தப்பிச் சென்று விடுகின்றது. வேல் போயிற்றே ஒழிய யானை கிடைக்கவில்லை. இவ்விரு வேடரில் யானை பிழைத்த வேல் ஏந்தியவனையே வள்ளுவர் போற்றுகின்றார். அவனுக்குத்தான் பரிசு வழங்க வேண்டும் என்கின்றார்.

> கான முயலெய்த அம்பினில் யானை
> பிழைத்தவேல் ஏந்தல் இனிது

என்று கூறி அவனுக்கு ஆக்கங்காட்டி ஊக்கம் ஊட்டுகின்றார். அதனையேதான் கோப்பெருஞ்சோழனும் சற்று மாற்றிக்காட்டி உயர்வுள்ள வேண்டுமென்று நன்கு தூண்டுகின்றான். யானை வேடன் யானையைப் பெறலாம். காடை (குறும்பூழ்) வேடன் அதனைப் பெருது வெறுங் கையனாய்த் திரும்பவும் நேரும். பெருமுயற்சி வேண்டும். அதுவும் உயர்விடத்துச் செல்ல வேண்டும். எளிது என்று சிறு முயற்சியால் சிறிய குறிக்கோளைக் கொள்ளற்க! அதுவும் தவறும் வாய்ப்புண்டு. முயற்சி செய். தவறிப் போனாலும் முயற்சி செய். பெரிய இடத்துப் பெருமுயற்சியாய் அஃது இருக்கட்டும். இதுதான் கோப்பெருஞ் சோழனின் பாடற் பயனாகும்.

> நல்லாறு எனினும் கொளல்தீது மேல்உலகம்
> இல்லெனினும் ஈதலே நன்று

என்ற அருங்குறட் கருத்தின் சாயலும் காவலன் சோழன் பாடலில் உள்ளது.

எனவே மக்கள் ஐயம் நீங்க வேண்டும். அறிவுத் தெளிவு பெற வேண்டும் என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளான் மன்னவன். இம் மன்னவன் பண்பு

மிக்கவன். நட்புக்கினியவன். நம்பிக்கை தளராது முயற்சி யால் உயர்ந்தவன். தான் காணாது நட்ட புலவர் மணி யாகிய பிசிர் ஆந்தையார் நல்ல காலத்து வராவிடினும் அல்லற் காலத்து (இறக்கும் சமயமேனும்) உறுதியாய் வந்து உடன் இறப்பார் எனக் கூறி அவருக்கும் வடக் கிருக்க இடம் அமைத்தான் எனப் புறநானூறு கூறுகின் றது. அவ்வாறே வடக்கிருந்து அவன் உயிர்நீத்த பின்னர் அங்குப் போந்த பிசிர் ஆந்தையாரும் அவ்வாறே தம் முயிர் நீத்தார் என்பது வியப்பினும் வியப்பாகும். இத்தகு பெருமை வாய்ந்த இக் காவலன் ஒப்பிலாப் பாவலனாய் விளங்கியதற்கு அடிப்படையான எண்ணம் யாது? எல் லோரும் வாழ வேண்டும். நல்லோராய் வாழ வேண்டும் என்பதுதான். விலங்கியல் வாழ்வு போதும். போதும்! நிறுத்துங்கள்! மக்கள் மக்களாகவே — ஆறு அறிவுடை யோராகவே வாழ வேண்டும்.

"வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்" என்ற கம்பர் பெருமானின் கருத்தையும் நாம் எண்ணிப் பார்த் துப் போற்ற வேண்டும்.

நல்லது செய்வோம். நன்றாய் வாழ்வோம். அப் போதுதான் அனைத்துலகும் வாழும். முயல்வோம்! முன்னேறுவோம்!

6. காவற் சாகாடு

பழங்காலத்தில் மக்கள் தனித்தனியே வாழ்ந்து வந்தனர். நாளடைவில் நாகரிகம் வளர வளர அவர்கள் சேர்ந்து வாழத் தலைப்பட்டனர். குடும்பம் குடும்பமாக வாழ்ந்தனர். குடும்பங்கள் இனமாகவும், இனங்கள் சமுதாயமாகவும் பெருகின. அவ்வாறு பெருகப் பெருக ஒவ்வொரு குடும்பத்திலும், இனத்திலும், சமுதாயத்திலும் தலைமை ஏற்றுக் காப்பாற்றும் தலைவர்களை அமைத்துக் கொண்டனர். சிதறிக் கிடந்தவர்கள் ஒன்று சேர்ந்தனர். ஊர் அமைத்துக்கொண்டனர். நாடும் நகரமும் அமைத்துக்கொண்டனர். ஊரையும் நாட்டையும் நகரத்தையும் போற்றி ஆண்டு வருவதற்குப் பெருந் தலைவன் ஒருவனையும் ஏற்படுத்திக் கொண்டனர். தலைமைப் பொறுப்பேற்றவன் மக்களை நன்கு காப்பாற்ற வேண்டும் என எண்ணினான். நாடு காக்கும் நல்லவனை மக்கள் தங்கள் 'காவலன்' எனக் கருதி மதித்தனர். கடமையும் உரிமையும் இன்னின்ன என வகுத்துக் கொண்டான் காவலன். தானும் தன் ஆட்சியின் கீழ் உள்ள மக்களும் நிலைத்து நல்வாழ்வு வாழத் திட்டமிட்டான் அவன். அவனுக்கு மன்னன் (மன்னுதல் = நிலைத்தல்) என்ற பெயரும் வந்தது. இத் தொழில் புரியும் அவனுக்கு ஆற்றல் அதிகம் இருந்தது. கல்வியிலும், தொழிலிலும், போரிலும் வல்லவன் ஆயினன். சென்ற இடமெல்லாம் வெற்றி பெற்றான். வெற்றி பெற்ற காரணத்தால்தான் கொற்றவன் என்றும் அழைக்கப் பட்டான். கொற்றம் என்றால் வெற்றியன்றோ ?

இவ்வாறு தலைமை ஏற்ற ஒருவன் வழி வழியாகப் பரம்பரை பரம்பரையாக மன்னன் ஆகி மக்களை ஆளும் மரபை உண்டாக்கினன். இவையெல்லாம் பழங்கதை. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி வாளோடு மூத்த குடி" என்று மக்கள் இன்று கூறுவது அப் பழங்குடியினரைப் பற்றியே ஆகும். திருக்குறளுக்குச் சிறந்ததோர் உரை வகுத்து நிறைந்ததோர் புகழ்பெற்று விளங்கும் பரிமேலழகர் இது பற்றிக் குறிப்பிடுகின்றார். முன்தோன்றி மூத்த குடியான சேர, சோழ, பாண்டியர் களின் குடிபோல்வன என்று அவர் விளக்கினர். "குல விச்சை கல்லாமல் பாகம் படும்" என்பது பழமொழி. அதாவது, தந்தை தொழில் மைந்தனுக்கு ஓரளவு கல்லாமல் தானாகவே வந்துவிடும் என்பது. இம் முறை யில் இடைவிடாது வழிவழியாக ஆண்டுவந்த அரச பரம்பரையினர் தமிழகத்தில் மிகப் பலராவர்.

குடிமக்களும் அரசனின் சிறப்புணர்ந்து போற்றினர். நாடாளும் வேந்தனைக் கண்கண்ட தெய்வமாகவே கருதினர். இறை இறை என்று தலைமையேற்றிக் கொண்டாடினர். கோன் என்றும் வேந்தன் என்றும் கூறிக் கொண்டாடினர். அரசன் இல்லாத நாடு எவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றிருப்பினும் பயனற்றது என்பதை மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். தாம் அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரிப் பொருளை மனமுவந்து கொடுத் தனர். இவ்வாறு ஆட்சி இனிது நடைபெற்றுக்கொண் டிருந்தது.

காலம் மாறியது. ஆண்டுகள் பல கழிந்தன. மக்கள் அறிவும் மேலும் வளரத் தொடங்கியது. "ஏன் அவனே ஆள வேண்டும்? அவனுக்குப் பிறகு அவன்மகன் — பிறகு

அவன்மகன் என்ற இந்த முறை சற்றும் பொருந்தாது. நான் ஏன் ஆளக் கூடாது? என் மகன் ஏன் அரசனாகக் கூடாது?" என்று எண்ணினான் மக்களில் ஒருவன். அவனுக்கு ஆற்றல் இருந்தது. எதிர்த்தான். போர் தொடுத்தான். சூழ்ச்சிகளும் பல செய்தான். அன்றைய அரசனை ஒழித்துக்கட்டி அவன் தானே அரசனாகி விட்டான். அப் பரம்பரை ஒழிந்தது. புதுப் பரம்பரை தோன்றியது. சில காலம் கழிந்தபின் இப் பரம்பரையும் ஒழிய நேரிட்டது. மீட்டும் புதுப் பரம்பரை. ஆம் மறுபடியும் மறுபடியும் வேறு வேறு பரம்பரைகள் ஆயின. எனினும், முடிசூடிக் கொண்டு ஒருவன் தன் வன்மையால் ஆளும் முடியாட்சி மாறவில்லை.

முடியாட்சியில் ஒருவன்—ஆளுகின்ற ஒருவன்—வல்லவனாக இருந்தால் மட்டும் போதுமா? நல்லவனாகவும் இருக்க வேண்டுமே. அவன் நெறி தவறிச் சென்றால் அவனுக்கு இடித்துரைக்கும் ஆற்றல் பெற்றவர்கள் இருக்க வேண்டும் என எண்ணினர். அதற்கென வல்லவர்களைத் தெரிந்தெடுத்தனர். ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் உருவாயின. தனிப்பட்ட முறையிலும் பற்பல புலவர்களும் மற்றவர்களும் அரசனை அணுகி நல்வழிப் படுத்தி நன்மை பெற்று மகிழ்ந்தனர்.

கால வெள்ளம் பெருக்கெடுத் தோடியது. குறிப்பிட்ட பரம்பரையினர் ஆட்சிமேடையில் தனியுரிமை பெற்றுத் 'தன்னாட்சி' நடத்துவது தவறு என்று மக்கள் உணரத் தலைப்பட்டனர். ஆள்வோன் வேண்டும். ஆனால் அவன் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவனாக இருக்க வேண்டும். நாட்டு மக்கள் பெரும்பான்மையினரின் ஆதரவு பெற்று அவன் தலைவனாக வேண்டும். இறைவன்

என்ற பெயரும் மன்னன் என்ற பெயரும் அவனுக்கு வேண்டாம். மணிமுடி தரித்துத் தன்னை மற்றவரினும் உயர்வுபடுத்திக் கொள்வதும் வேண்டாம். இவ்வாறெல்லாம் எண்ணியதன் பயனாகவே குடியாட்சி — மக்களாட்சி — நமது தமிழகத்தும் தலைதூக்கியது. இன்று நாம் அதன் பெருமை சிறுமைகளையெல்லாம் நுகர்ந்து வருகின்றோம். இதுதான் அரசாட்சியின் வரலாற்றுச் சுருக்கம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் தமிழகத்தில் முடியாட்சியே நிலவியது. பரம்பரை உரிமையினராகவே மன்னர்கள் எல்லோரும் வாழ்ந்துவந்துள்ளனர். அவர்களுள் ஒருவன் தொண்டைமான் இளந்திரையன் என்பவன்.

காஞ்சி மாநகரினின்றும் அவன் தமிழகத்தின் பெரும் பகுதியைத் திறமையுடன் ஆண்டுவந்தான். இவன், தந்தை வழியாற் சோழன். தாய் வழியால் நாகநாட்டினன். தமிழகத்து முடியுடை மூவேந்தர்களைப் போலவே பெருமையுடையவன். நல்ல புலவன். 'இளந்திரையம்' என்பதோர் நூல் செய்வித்ததாகப் பழைய நூல்களாலும் உரைகளாலும் (இறையனார் அகப் பொருள் உரை, நன்னூல் மயிலைநாதர் உரை) அறிகின்றோம். கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவர் இவனைப் பற்றி இயற்றிய பாடல் பத்துப் பாட்டில் பெரும்பாணாற்றுப் படையென்ற பெயருடன் விளங்குகின்றது. ஆண்மையும் அறிவும் வண்மையும் மிக்கவன். பெரும்பாணாற்றுப் படையில் இவனைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. இவன் திருமால் மரபில் உதித்த சோழர்களின் வழி வந்தவன். இவனுடைய ஆட்சி செழித்திருந்தது. திருடர் தொல்லை இவனது ஆட்சியிலே இல்லை. காட்டு

விலங்குகளாலும் கூட மக்கள் துன்ப முருதபடி பாது காத்து வந்தான். நாடு வளம் மிக்கது. எங்கும் இனிய சுவைப் பொருள்கள் எளிதிற் கிடைக்கும். இவனுடைய பெருமையினையும் சிறப்பினையும் உணர்ந்தவர்கள் இவனது நட்பையும் துணையையும் விரும்பி இவனது அரண்மனை முன்றிலில் கையுறைகளை ஏந்திச் செவ்வி பார்த்திருப்பர்.

இத்தகு சிறப்புடன் வாழ்ந்த இவ்வேந்தன் தனது வாழ்க்கையில் அரசு குறித்தும் ஆட்சி குறித்தும் தன் நுகர்ச்சியால் (அநுபவத்தால்) உணர்ந்ததை எடுத்துக் கூறியுள்ளான். அதனை நாம் அறிதல் நலம். அரசாட்சியை அவன் எளிதாகக் கருதவில்லை. இனிதாகக் கருதவில்லை. அதனை ஓர் பொறுப்பு வாய்ந்த சகடமாக (வண்டியாக) மதித்தான். அவ்வண்டியைச் செலுத்துவோன் நல்லவனாகவும் வல்லவனாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் ஆட்சி நன்று நடக்கும். வழிப்பயணம் செல்ல விரும்புவோர் நல்லதோர் ஊர்தியை முதலில் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அது மட்டும் சாலாது. அதனை நன்முறையிற் செலுத்தக் கூடிய வலவன் (பாகன் — *driver*) ஒருவனையும் பெற்றிருக்க வேண்டும். அவன்தான் வண்டியினை நல்வழியிற் செலுத்துவான். ஊர்தியில் ஏதேனும் குறை இருப்பினும் சரி செய்து செப்பனிட்டு ஓட்டி மகிழ்விப்பான். பயணம் அப்போதுதான் இன்ப மிக்க செலவாக மகிழ்ச்சி தரும். இன்றேல், வெறும் இன்பச் செல(இன்பக்கேடு — துன்பம்)வாக முடிந்துவிடும். இன்பத்தினையுடைய செலவு (பயணம்) ஆகாது, இன்பத்தினுடைய செலவு (கேடு) ஆகிவிடும். இதனை நன்குணர்ந்த இளந்திரையன் என்ன கூறுகின்றான்?

கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறுஇன் றாகி ஆறுஇனிது படுமே.
உய்த்தல் தேற்றான் ஆயின் வைகலும்
பகைக்கூழ் அள்ளற் பட்டு
மிகப்பல் தீநோய் தலைத்தலைத் தருமே.

— புறம் - 185.

இதுவே அவனளித்த எழில் ஓவியம். அரசாட்சியைக் காவற் சகடம் — காவல் வண்டி — யென மதித்துத் தீட்டிய எண்ணத்தின் இணையற்ற வடிவம். உவமையை மட்டும் சொல்லிப் பொருளை உய்த்துணரவைக்கும் ஒப்பற்ற பாடல். 'நுவலா நுவற்சி' என்றும், 'ஒட்டு' என்றும் அணி இலக்கண விற்பன்னர் கூறி மகிழும் அழகிய கவிதை.

கால் என்பது உருளை (சக்கரம்). பார் என்பது வண்டியின் சட்டம் (*Frame*). உருளையையும் சட்டத்தையும் இணைத்துச் செய்யப்படும் வண்டி நல்ல பாதுகாவலையுடையதாய் இருக்கும். அதனை உலகத்தில் ஓட்டுவோன் உகைப்போன் எனப்படுவான். அவ்வண்டியோட்டியாகிய உகைப்போன் மாண்புடையவனாக இருக்க வேண்டும். மாண்பு என்பது சிறப்பு. நன்மையும் வன்மையும் பொருந்திய தன்மை. அவன் இச்சிறப்புப் பெற்றிருப்பின் (மாணின்) வண்டி ஒரு சிறிதும் ஊறு இல்லாமல் தங்கு தடையில்லாமற் செல்லும். வழியும் (ஆறு) இனிமையாய் மகிழ்ச்சி தரும். அதற்கு மாறாக, ஓட்டுவோன் திறன் இல்லாதவனாய், செலுத்தும் வகை அறியாதவனாய் இருப்பின் என்றும் தொல்லைதான். சேறும் சகதியும் மிக்க

சூழலில் சிக்கி மிக்க பல துன்பம் விளைத்துவிடும். துன்பம் மேலும் மேலும் பெருகும். 'தலைத் தலை' என்றதும் இது பற்றியே ஆகும். இதுதான் இப்பாடலின் நேர்ப் பொருள். இப்பொருள் உவமையாக நின்று, சொல்லாது விட்ட உவமேயப் பொருளைக் குறிப்பால் விளக்கும்.

இதுதவிர வேறு பொருளும் சொல்வர். உலகத்தில் உலகியற்கையை நிலை நிறுத்தி அவ்வியற்கையோடு உலகில் செலுத்தப்படும் காவலாகிய (அரசாட்சியாகிய) சகடம் செலுத்துவோன் மாட்சிமையுடையவன் ஆனால் ஆட்சி இடையூறின்றி நெறிமுறையுடன் நடைபெறும். அதனைச் செலுத்துதல் தெளியானாயின் அவ்வண்டி பகைமை யென்னும் செறிந்த சேற்றிலே சிக்கித் தனக்கும் தன்கீழ் வாழ்வார்க்கும் மிகப் பலவாகிய தீய துன்பங்களை மேலும் மேலும் தரும். இவ்வாறு பொருள் உரைக்கும்போது பார் என்பதற்கு உலக இயற்கை எனப் பொருள் கொள்ள வேண்டும். இப்படிப் பொருள்கொண்டால் இப்பாடல் உருவக அணியுடையதாகக் கருதப் படும்.

இங்ஙனம் பல்வேறு அணிகளும் நயமும் தோன்ற அமைந்துள்ள இப்பாடலின் உயிர்க்கருத்து ஆட்சி செலுத்துவோன் நல்ல திறமையாளனாக இருக்க வேண்டும் என்பதேயாகும்.

ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்துஅமைவு இல்லாத நாடு

என்பது வள்ளுவர் திருமறையன்றோ? ஒரு நாடு தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் நிறைந்திருக்கலாம். வளம்மிக்கு, வறுமைக் காலத்தும் செழித்து

விளையலாம். அரசனுக்கு ஆதரவு தரும் குடிமக்களை மிகக்கொண்டும் இருக்கலாம். பசியும் பிணியும் பகையும் குறும்பும் இன்றி இருக்கலாம். நீர்வளமும் மலைவளமும் வல்லரணும் வாய்த்திருக்கலாம். நாட்டுக்கு அணியெனப் படும் பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் யாவும் பெற்றிருக்கலாம். நாடாமலே வளமெல்லாம் தருவதாக இருக்கலாம். இவ்வளவும் இருப்பினும் கூட அந்நாட்டுக்கு நல்ல தலைவன் இலனாயின் அந்நாடு ஒரு பயனும் தராது. இவ்வாறு வள்ளுவப்பெருமான் ஆணித் தரமாகக் கூறுவாரே ஆயின் அக்காலத்து அரசனின் பொறுப்பையும் சிறப்பையும் எடுத்துக் கூறவும் வேண் டுமோ? வேந்து அமைவில்லாத நாடு ஒரு பயனும் தராது என்பது குறள். 'காவற் சாகாடு உகைப்போன் உய்த் தல் தேற்றானாயின் வைகலும் பகைக்கூழ் அள்ளற்பட்டு மிகப்பல் தீ நோய் தலைத்தலைத் தருமே" என்பது இளந் திரையன் எடுத்துக் கூறும் உண்மை.

இளந்திரையன் ஆட்சி செலுத்திவந்த பழந்தமிழ கத்தில் மன்னரும் மற்றையோரும் ஆட்சியைப் பற்றி என்னென்ன நினைத்தனர் என்பதை ஒரளவு அறிந்தால் தான் இவனது கருத்தின் உயர்வு, அறிவின் ஆழம், பண் பின் அகலம் யாவும் நமக்கு விளங்கும்.

சிலம்புத்தேன் என்னும் தித்திக்கும் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றியருளிய இளங்கோவடிகள் அரச பரம்பரையினர். அவர் தமது காப்பியத்தில் சேர மன்னன் செங்குட்டுவன் வாயிலாக ஆட்சியைப் பற்றிக் கூறியுள்ளது இங்கு நினைவுகூரத் தக்கதாகும். காட்சிக் காதையில் மலைவளங் காணச் சென்ற மன்னன் செங்குட்டுவனுக்குக் கண்ணகியின் வரலாறு விரித்துக்

கூறப்படுகின்றது தண்டமிழ்ப் புலவர் சித்தலைச் சாத்த னுர் வாயிலாக. அவ் வரலாற்றில் பாண்டியன் நெடுஞ் செழியன் மாண்ட செய்தியைக் கேட்டு வருந்திய செங்குட்டுவன் மனம் குமுறுகின்றது. உடனே துடிதுடித் துக் கூறுகின்ருன்: "மாநிலம் ஆள்வது இன்பந்தரும் செயலன்று. பொறுப்பும் அச்சமும் துன்பமும் உடையது தான் அரசாட்சி. போற்றி மதித்துத் தொழுது பெறக் கூடியது அன்று" என்று எடுத்துரைக்கின்ருன்.

மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழைஉயிர் எய்தில் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்.

— காட்சிக்காதை - 100 - 104.

இதுவே இளங்கோவடிகளின் எண்ணம். அரசன் பொறுப்பு உண்மையில் எளிதன்று. பல்வகையாலும் தொல்லை வாய்ந்தது. மழையில்லையேல் மக்கள் மன்ன னைத் தூற்றுவர். பிழை ஏதேனும் நேர்ந்து விடினும் பேராபத்து. உயிர்களைக் காக்கும் சுமையைப் பெற் றிருந்தும் எந்த நேரமும் அஞ்சி அஞ்சி வருந்தும் பொறுப் புடையது ஆட்சி. கொடுங்கோல் வந்துவிடக் கூடாதே என்ற அச்சத்துக்கு எல்லையே இல்லை. எனவே, அரசர் குடியிற் பிறத்தல் இன்பமாகாது. துன்பமேயாகும். இக் கருத்தையே பிற்காலப் புலவராகிய சேக்கிழார் பெருமா னும் மனுச்சோழன் கதை வாயிலாக, "அருமந்த அர சாட்சி அரிதோ மற்றெளிதோ?" என வினவி விளக்கு கின்ருர்.

இளந்திரையன் அரசாட்சியை வண்டியாக்கியும், அரசனை வலவன் ஆக்கியும் கூறியதன் நயம் இப்போது எளிதே புலனாகும். வண்டியில் செல்கின்றவர்கள் வழிப் பயணத்தில் இன்பம் விழைகின்றார்கள்; பெறுகின்றார்கள். ஆனால் வண்டியோட்டியோ அவ்வகை இன்பம் பெற வாய்ப்பில்லை. மகிழ்வுச் செலவு செல்லும் நாம் வண்டியில் ஆட்ட பாட்டத்துடன் குதித்துக் களிக்கின்றோம். ஓட்டும் வலவனோ (driver) இக் களிப்பில் ஈடுபடான். ஈடுபடக் கூடாது. ஈடுபடுவானாயின் வண்டி வழிமாறி நெறி நீங்கி விபத்துக் குள்ளாகி வேதனை தந்துவிடும். எனவே, அவன் இன்பம் அநுபவிக்க வழியில்லை. வண்டியின் ஓட்டத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றான். இதுதான் அரசன் நிலையும். எங்கே வழுக்கி விடுமோ? எங்கே நழுவி விடுமோ? என்ற அச்சம் வண்டியோட்டிக்கிருப்பது போன்றே மன்னனுக்கும் உண்டு என்பதை எவ்வளவு தெளிவாகக் காட்டி விடுகின்றான் இளந்திரையன்! மன்னன் ஆட்சியில் மக்கள் மகிழ வேண்டுமானால் மன்னன் பொறுப்புக்கும் அச்சத்துக்கும் ஆளாகித் தன் இன்பத்தைத் துறக்க (தியாகம் செய்ய) வேண்டும். இப்படித் துறவுள்ளம் பெறுதல் எளிதாகுமா? அதற்கு எத்தகு மாட்சி வேண்டும்? அதனால்தான் இளந்திரையன் அறிவு பெரியனாய் நின்று, "உகைப்போன் மாணின்" என்று கூறியுள்ளனன் போலும்! இங்கேதான் புலப்படுகின்றது அவனது கவிதையின் ஆழம்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறுங்கால் தன் குடிமக்களைப் பற்றியும் ஆட்சியைப் பற்றியும் குறிப்பிடுகின்றான். "என் ஆட்சி நிழலில் வாழ்கின்றவர்கள் வாடி வருந்தக் கூடாது. தம்மரசன் கொடுங்கோலன் என அவர்கள் கண்ணீர்

சிந்தக் கூடாது. குடிபழி தூற்றும் கோலன் ஆகிவிடக் கூடாது" என்ற கருத்துப்படப் பேசுகின்றான் (புறம்-72). மன்னர்கள் தம் ஆட்சியையும் குடிமக்களையும் எவ்வெவ் வாறு மதித்துப் போற்றி வந்தனர் என்பதை இதனால் அறிகின்றோம். இத் தன்மை உணர்ந்துதான் குடிமக்க ளும் மன்னனைத் தம் உயிரெனப் போற்றி மகிழ்ந்தனர்.

நெல்லும் உயிர்அன்றே நீரும் உயிர்அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே

— புறம் - 186.

என்று மோசிகீரனார் என்னும் புலவர் பாடியுள்ளார். குடி மக்களுக்கு உயிர் நிலைபெறுவது நெல்லாலும் அன்று; நீராலும் அன்று. மன்னன் காவலின் சிறப்பினால்தான் உயிர் நிலைபெறுகின்றது. ஆகவே மன்னனே மக்கட்கு உயிர். மக்களாகிய உடம்புக்கு மன்னனாகிய உயிர்தான் பாதுகாவல். இத்தகு பேருண்மையை—அதாவது தானே உயிர் என்னும் உண்மையை — ஒவ்வொரு மன்னனும் உணர்ந்து கடன் ஆற்ற வேண்டும். பாண்டியன் நெடுஞ் செழியனும் சேரன் செங்குட்டுவனும் இதனை நன்கு உணர்ந்தவர்கள். தொண்டைமான் இளந்திரையன் இவ் வாறு உணர்ந்து உயர்ந்து, கவிதை பொழிந்து தன் கருத்தை வெளியிட்டுக் கூறுதல் மாபெருஞ் சிறப்பேயாகு மன்றோ! இத்தகைய உயர்வுடைய இளந்திரையன் போன்ற மன்னர்களைக் குடிமக்கள் உயிர்போன்று கருதுவதோடு நில்லார். தெய்வமெனவும் போற்றுவர். " திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேம்"

என்று ஆழ்வார் அருளிச் செய்ததும் இளந்திரையனைப் போன்ற மன்னர் பெருமையை உளங்கொண்டு கூறியதே யாகும்.

இவ்வளவு புகழ் வாய்ந்த காவலன் எழில் வாய்ந்த பாவலனாகவும் விளங்கியதைப் பற்றி முன்னரே பார்த்தோம். புறநானூற்றில் இவன் பாடியதாக உள்ள ஒரே பாடல் இவன் கவிதையுள்ளத்துக்கும் கவித்திறனுக்கும் போதுமானதோர் சான்றாகும். எனினும் நற்றிணை என்னும் அகப்பொருள் நூலிலும் இவன் பாடல்களைக் (94, 99, 106) காண்கின்றோம். திருமணம் பெற வேண்டும் என்று வருந்துகின்ற தலைவி தனது நிலையைப் பற்றிக் கூறுங்கால் கழுவாத முத்தினைப் போல் பொலிவு மறைந்து கிடப்பதாகக் கூறியுள்ள உவமை நற்றிணை 94 ஆம் பாடலில் அமைந்துளது. 'திருமணம் (வரைவு) நிகழ வேண்டும். கணவனுடன் கற்பு வாழ்க்கை பெற வேண்டும்' என்பதைத் தலைவி மிக்க நயமாகவும் குறிப்பாகவும் இப்பாடலில் கூறுவதாக இளந்திரையன் அமைத்துள்ளமை எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

மாரிக்காலம் வந்துவிட்டது. மழையும் பெய்கின்றது. முல்லையும் கொன்றையும் பூத்துவிட்டன. தலைவன் வரவில்லை. கார்காலத்தில் வந்து விடுவேன் என்று சொல்லிப் போனவன் வரவில்லை. இதனால் மிகவும் வருந்துகிறாள் தலைவி. அப்போது தோழி தலைவியை ஆற்றுவிப்பதாகக் கூறும் பாடல் (நற்றிணை-99) மிக்க சுவை வாய்ந்தது. "மழை பெய்தது உண்மைதான். ஆனால் இது பருவ மழையன்று. பருவமறியாது மிகுதியாகக் கடல் நீரையுண்ட மேகம் சூல் முற்றி ஆற்றாது கொட்டிவிட்டது. முல்லையும் கொன்றையும் உண்மையறியாது பூத்து

விட்டன. இன்னும் கார்காலம் வரவில்லை. கார் வரின் தலைவன் வராது நிற்பனே?" என்று தோழி கூறுவதாக அமைந்த இப்பாடலையும் மன்னன் இளந்திரையனே இயற்றியுள்ளான்.

" தலைவி இளம் பருவத்தினள். தனியாயிருக்க ஆற்றாதவள். விரைந்து சென்று அவளை மகிழ்விக்க வேண்டும். தேரை விரைந்து ஓட்டுக" என்று தலைவன் கூறுவதாக மற்றொரு பாடலையும் (நற்றிணை-106) இவன் பாடியுள்ளான். இப்பாடலில் தலைவியின் மென்மையைக் குறிப்பிடுதற்கு இவன் அமைத்துள்ள சொற்கள் மிக்க இன்பம் பயப்பன. "விளையாட்டில் ஓடி ஓடி நண்டைப் பிடிக்க விரும்பினாள். நண்டுடன் ஓட முடியாது வருந்தி நின்றாள்" என்றும், " யான் பிரிந்து செல்லவேண்டும் என்று கூறியதும் ஞாழற்பூவினையும் தளிரையும் பிசைந்துகொண்டு செய்வது அறியாது திகைத்து நின்றாள்" என்றும் கூறி அவளது மென்மையைப் புலப்படுத்தும் அழகு என்றும் புலவர்களால் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

இப்படிக் கவிதையாலும் (புலமை) காவலாலும் (ஆட்சி) பெருஞ்சிறப்பினைப் பெற்றிருந்த இம்மன்னன் இளந்திரையனின் இயற்பெயரும் நமக்குத் தெரிந்திலது. திரைமீது வந்தமையால் திரையன் எனவும், தொண்டைக் கொடி சுற்றப்பெற்றதால் தொண்டைமான் எனவும், இளமையிலேயே அறிவும் திருவும் ஆற்றலும் நிறைந்து விளங்கியதால் இளையன் எனவும் கருதி, இவனைத் தொண்டைமான் இளந்திரையன் என்றழைத்துள்ளார் என்பது தோன்றுகின்றது. புலமைப் பெருக்கினால் சிறப்புற்ற இவனை இளந்திரையனார் எனச் சிறப்பு விகுதி கொடுத்தும் புலவர் அழைத்துள்ளனர். நாகப்பட்டினத்துச் சோழன்

ஒருவன் நாககன்னிகை ஒருத்தியை மணந்தான். அக்கன்னிகை தன் நாடு சென்று கருவுயிர்த்தாள். அம்மகவைத் தந்தை நாட்டுக்குக் கடல் மூலம் அனுப்பினுள். அடையாளத்துக்காகத் தொண்டைக் கொடி சுற்றி அனுப்பினுள். சோழமன்னனும் அக்குழந்தையைக் கண்டு பிடித்துக் களிப்புற்று அரியணை ஏற்றினுன் என்ற அளவில் தான் இம்முதுபெரும் புலவனுகிய இளந்திரையனின் வரலாறு நமக்குக் கிடைத்துள்ளது. தமிழ் ஏடுகளை இன்னும் நன்கு ஆராய்ந்தால் இவனைப் பற்றிய உண்மைகள் இன்னும் பல புலப்படக் கூடும். புலவர் புலமைத் தொழிலேயே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு புனைந்த கவிதைகளைப் போலவே அரசுத் தொழில் வல்ல இளந்திரையனின் கவிதைகளும் சிறப்புற்று விளங்குவதை அறிந்து மகிழ்வோமாக! இன்று ஆட்சிப் பீடத்திலுள்ளார் தம் பொறுப்புணர்ந்து ஆள்வதற்குப் புத்துணர்ச்சியூட்டும் இப்பாடல் என்றென்றும் மக்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம் என்பது மிகையாகாது.

7. வஞ்சினம்

வாழ்க்கை செயலால் வளம் பெறுவது. செயல் இன்றேல் வாழ்க்கை என்ன, ஒன்றுமே இல்லை எனலாம். செயலை ஒவ்வொருவரும் ஏற்றுச் செய்கின்ற பொழுது முழு நம்பிக்கையுடன் அப்பணியில் இறங்க வேண்டும். இறங்கிய பின் சற்றும் தளரக் கூடாது; சோரக் கூடாது. பின்வாங்கக் கூடாது. ஆனால் இறங்குமுன் நன்றாக நினைத்துப் பார்க்க வேண்டும். ஆராய வேண்டும். ஆராய்ந்த பின் துணிவுக்கு வர வேண்டும். துணிந்தபின் தயங்கக் கூடாது. அஞ்சவே கூடாது. "உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதினும் அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே" என்று ஆற்றலுடன் துணிந்து நிற்றல் வேண்டும்.

> எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
> எண்ணுவம் என்பது இழுக்கு
>
> — குறள் 467.

என்ற மறைமொழி கூறுவது யாது? எடுத்துக்கொண்ட தொழிலைப் பற்றி எண்ணி எண்ணித் துணிய வேண்டும். துணிந்து இறங்கித் தொழில் மேற்கொண்ட பிறகு இப்படியும் அப்படியும் எண்ணுவது மாபெருங் குற்றமாகும். இதனையே இக்குறள் சுட்டுகின்றது.

இஃது இயற்கையாக அமைதியான நிலைமையில் செயல் ஆற்ற வேண்டியவன் அறிந்து போற்ற வேண்டியது.

யாருனது மலையிற் பிறந்து சமவெளிக்கு வந்த பின்னரே ஒருவகை அமைதியான வேகத்தில் நிலையாகச் செல்ல முடியும். மலையிலிருந்து தரையை நோக்கி வருங் கால் எத்துணை வேகமாய் ஆற்றலோடு முழக்கத்தோடு பாய்ந்து வீழ்கின்றது? அது, அந்நிலையில் ஓடி வருங்கால் அதனைக் கட்டுப்படுத்த முடியாதே! அது போலவேதான் வாழ்விலும் நேரிடுகின்றது. அமைதியான காலத்தில் ஆராய்ந்து செய்வது போல் அவசரமான விரைவான சூழ் நிலையிலும் செய்ய முடியுமா?

மாணவன் ஒருவன் தேர்வு எழுதுகின்முன். இறுதித் தேர்வு அஃது. அது, அவனது வாழ்வின் வெற்றி தோல்வி யையே முடிவு செய்யும் தேர்வாகவும் உள்ளது. மாண வன் மிகவும் நல்லவன். தேர்வுக்கு வேண்டிய ஆயத்தங் களைத் திறம்படச் செய்து முடித்தவன். தேர்வு அறைக்கு உரிய காலத்தே செல்கின்முன். வினைத்தாளைப் பார்த்து மகிழ்ச்சியுடன் விடைகளை எழுதத் தொடங்குகின்முன். அவனது ஆர்வம் முதல் வினாவிற் சென்று பதிகின்றது. அதன் விடையை நன்முக எழுத வேண்டும். அழகாக அமைக்க வேண்டும். விளக்கமாக எழுத வேண்டும். இஃது அவன் விருப்பம். விரும்பியவாறே செய்கின்முன். முடித்து மகிழ்ந்து அடுத்த வினாவுக்கும் விடையினை இவ்வாறே எழுதுகின்முன். ஆனுல் காலம் பறக்கின்றது. மொத்தம் எழுத வேண்டிய விடைகள் ஐந்து என்று வைத்துக் கொள் வோம். இம்மாணவன் இரண்டு விடைகளை எழுதிவிட்டு மணியைப் பார்க்கின்முன். முக்காற் பங்குக் காலம் ஆகி விட்டது. இனிக் காற்பங்கு நேரத்தில் இன்னும் மூன்று விடைகளை எழுதி முடிக்க வேண்டுமே! முன்பு போலத் திட்டமிட்டு எழுத்தெழுத்தாய்எண்ணிஎண்ணி எழுதினுல்

முடிக்க முடியுமோ ? சமவெளியில் செல்லும் யாறு போல் இவன் இதுவரை அமைதியாயிருப்பினும் இனி நீர்வீழ்ச்சி போல் விரைய வேண்டுமல்லவா ? துடிக்க வேண்டுமல்லவா ? இங்கே எண்ணுவதற்கு இடமேது ? ஏதோ, விரைவாக முடிக்க முயல வேண்டும்.

தெருவில் நிதானமாக நடக்க வேண்டும். இடதுகைப் பக்க ஓரமாகவே சாலேயில் நடந்துசெல்ல வேண்டும். விரையக் கூடாது. சாலே விதிகளே உணர்ந்து சாலே உணர்ச்சியுடன் செல்ல வேண்டும். ஊர்திகளிற் சென்ருலும் இவ்விதியைப் பின்பற்றிச் செல்லுதல் நல்லது. ஆனுல் இன்றைய வாழ்வில் யாராவது அப்படிச் செய்ய முடிகின்றதா ? எல்லாம் விரைவு மயமாக இருக்கின்றதே ! அதனுல் இவ்விரைவுச் சூழ்நிலேயில் வள்ளுவரும் மற்றைய பெரியோரும் சொல்லிச் சென்ற அறிவுரைகள் நினேவுக்குத் தான் வருமோ ? வீடு பற்றி எரிகின்றபோதும் நாட்டின் எல்லேயில் போர் முழக்கம் கேட்கின்றபோதும் பொது நலன் ஒன்று திரண்டு வருங்கால் குள்ள நெஞ்சர்கள் கெடுக்க முன்வருகின்றபோதும் அமைதி இருக்க முடியாது. ஆத்திரம் இருக்கும். சீற்றம் இருக்கும். செற்றம் எழும். நிலேமை அறிவை மிஞ்சிவிடும். அறிவை யழித்து உணர்ச்சி பொங்கி நிற்கும். அப்போது கோபத்தின் உச்சியில் இருந்துகொண்டு எதிர்ப்பு முழக்கம் செய்வோம். செய்யத்தான் வேண்டும். அந்த முழக்கங்களே எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் பின்வருமாறு இருக்கக் காணலாம். "ஆ ! ஆ ! இப்படி ஆயிற்ரு ? வாளாவிருப்பேனு ? இதோ புறப்படுகிறேன். என்னே யாரென்று காட்டி வெல்கின்றேன் மாற்ருனே. வெல்லாவிடில் என்னே இழித்துக் கூறுங்கள். யான் பலவகையான பழிச்செயலுக்குட்பட்டவன் என்று என்னே இகழும் நிலே வரட்டும். வாழ்வாயினும்

சாவாயினும் அஞ்சேன்." இப்படிக் கூறுவதைத்தான் 'வஞ்சினம்' என்கின்றோம். இதனையே நெடுமொழி என்றும் சபதம் என்றும் கூறுவர். இவ்வாறு வஞ்சினம் கூறும் போது வஞ்சினம் கூறுவோனின் உள்ளக்கிடக்கை நன்கு வெளியாகும். அவனது வாழ்க்கை நோக்கங்கள் வெளிப் படும். அவன் உயர்ந்தன என்று போற்றும் கொள்கைகள் எல்லாம் அவன் கூறும் வஞ்சினத்தில் ஒளி வீசிக் காட்சி யளிக்கும். தாயைப் போற்றுகின்ற ஒருவன், தாயினும் சிறந்ததோர் தெய்வமில்லை என்கின்றவன் கூறும் வஞ்சி னம் இவ்வாறு இருக்கும். "இந்தப் பணியை யான் இனிது முடிக்காவிட்டால் யான் என் தாயை வஞ்சித்தவனாவேன்" என்று அவன் கூறியிருப்பான். இதனால் நாம் இரண்டு பெரிய உண்மைகளை உணரலாம். ஒன்று அவன் செய்து முடிக்க எடுத்துக்கொண்ட பணி மிகமிக இன்றியமையா தது; உடன்செய்து முடிக்க வேண்டியது; மிக உயர்ந்தது என்பது. இரண்டாவது அவன் செய்து முடிக்கும் அப் பணியை விடத் தன் தாயிடத்தில் பெருமதிப்பு வைத்துப் போற்றும் பண்புடையவன் என்பது.

எனவே, இவ்வாறு வஞ்சின மொழிகளை ஆராய்ந் தால் வஞ்சினம் கூறுவோரின் உயர்ந்த குறிக்கோள்களை யும் மாண்பையும் நாம் நன்கு உணர்ந்துகொள்ளலாம்.

நமது தமிழகத்தில் எத்தனையோ வீரர்கள் வஞ் சினம் மொழிந்துள்ளனர். தமிழ் வேந்தரைப் பழித்த கனகவிசயரைச் சிறிக் கூறிய சேரன் செங்குட்டுவனின் வஞ்சினத்தை இளங்கோவடிகள் வாயிலாக அறிகின் றோம்.

பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்

விருந்தின் மன்னர் தம்மொடும் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனக்
கூற்றங் கொண்டிச் சேனை செல்வது

என வெகுண்டு கூறுகின்றான் செங்குட்டுவன்.

தன் கணவன் அநியாயமாகப் படுகொலை யுண்ட செய்தியைக் கேட்டதும் கண்ணகி வெகுண்டெழுந்த காட்சியையும், அவள் கூறிய வஞ்சின மொழிகளையும் அடிகள் தம் காப்பியத்தில் "வஞ்சின மாலை" யில் தீட்டி யுள்ளார்.

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோ(டு) ஒழிப்பென் மதுரையும்என்
பட்டிமையும் காண்குறுவாய்

என்று கூறிய கண்ணகியின் சினத்தை அளவிடமுடியுமோ?

செங்குட்டுவன் சீற்றமும் கண்ணகியின் கடுஞ்சின மும் பற்றிப் புலவர் இளங்கோவடிகள் கூறியுள்ளாரே ஒழியச் செங்குட்டுவனோ கண்ணகியோ நேரடியாகச் சினந்தெழுந்து செப்பிய கவிதைகளை நாம் பெற்றிலேம். ஆனால் வேறு சில வேந்தர்கள் தாமே வெகுண்டெழுந்து வஞ்சினம் கூறிய மொழிகளை அவர்கள் வாயிலாகவே கேட்கக் கூடியவாறு பாடல்களை யாத்துள்ளனர். மூவேந் தரும் பார்வேந்தரேயன்றிப் பாவேந்தராயும் விளங்கி இருந்த காலம் அது. அவ்வாறு விளங்கிய மன்னர் மூவரின் வஞ்சினப் பாடல்களை மட்டும் இங்குக் காண்போம்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் போரில் வல்லவன். செய்யுள் இயற்றுவதிலும் திறமையுடையோன். இவன்மீது பகைவர் போர்தொடுத்தால் சீறி எழுவான். தனக்குரிய ஒல்லையூரைப் பகைவரிடமிருந்து வென்று கொண்ட சிறப்பால் இவன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் எனச் சிறப்பிக்கப்பட்டான். ஒருகால் இப்பாண்டியனுக்கும் ஏனைச் சேர சோழ வேந்தர்க்கும் பகைமை உண்டாயிற்று. அவ்விருவரும் ஒருங்குகூடி இவனை எதிர்த்துப் பொருதவந்தனர். இதனைக் கேள்வியுற்றுன் பூதப்பாண்டியன். சினங்கொண்டான், கொதித்தெழுந்தான். குமுறிக் கூறினுன். அவ்வஞ்சினமே கீழ்க்கண்ட பாடலாக முகிழ்த்தது.

மடங்கலிற் சினைஇ மடங்கா உள்ளத்து
அடங்காத் தானை வேந்தர்உடங்கு இயைந்து
என்னொடு பொருதும் என்ப; அவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறங் காணேன் ஆயின், சிறந்த
பேரம ருண்கண் இவளினும் பிரிக !
அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்
திறன்இல் ஒருவனை நாட்டிமுறை திரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக ! மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பில்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனும் மன்னெயில் ஆந்தையும் உரைசால்
அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்
வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பின் கேளிரொடு கலந்த

இன்களி மகிழ்நகை இழுக்கியான் ஒன்றோ
மன்பதை காக்கும் நின்குடிச் சிறந்த
தென்புலங் காவலின் ஒரீஇப் பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

— புறம்-71.

"சோழனும் சேரனும் சிங்கம்போற் சினந்துவருகின்றனர். மடங்காத உள்ளம் உடையோராய்ப் படையெடுத்து ஒன்று கூடி என்னொடு போர்செய்ய வருகின்றனர் என்று கேள்விப்படுகிறேன். இஃது உண்மையாயின் தயங்கேன். எதிர்த்துச் சென்று போரில் அவர்கள் அலறும்படியாகத் தாக்கி அவர்களைப் புறங் காண்பேன். இது உறுதி. தவறினால் யான் இதோ இங்குள்ள கற்புச் செல்வியாகிய என் காதல் மனைவியைப் பிரிந்தவன் ஆக! நீதி பிறழாத மன்றத்திலே திறமையற்ற ஒருவனை வைத்துக் கொடுங்கோல் புரிந்தவன் ஆவேன்! மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் முதலிய கண் போன்ற நண்பர்களோடு கலந்து மகிழும் பேற்றை இழப்பேன் ஆக! தென் பாண்டி நாட்டிலே பிறவாது வேறு எங்கோ வன்புலத்தில் மாறிப் பிறப்பேனாக!" இதுதான் அவன் மொழிந்த வஞ்சினம். வெகுண்டெழுந்த வேந்தரை அடக்கி வெல்லுதலைத் தன் கடமையாகக் கொண்டான். அதனினும் சிறப்பாக அவன் கருதியது அவனது மாசற்ற மனைவியுடன் கூடிய இல்லற வாழ்வு. அடுத்து அவனுக்குச் சிறப்பாகத் தோன்றியது கண் போன்ற நண்பர்களோடு கூடிக் கலந்து அளவளாவும் மகிழ்நகைச் செல்வம். மூன்றாவதாக அவன் கூறியது தமிழகத்தைப் பற்றி. எத்துணைப் பிறவி எடுப்பினும் பாண்டி நாட்டிலேயே பிறந்து வாழும் பேறு தனக்கு

வேண்டும் என்பது அவன் பேராவல். முதலில் விரும்பியது மனைவாழ்க்கை. அடுத்தது நட்பு வாழ்க்கை. மூன்றாவது நாட்டு வாழ்க்கை. குடும்பப் பற்றுக்கும் இனப் பற்றுக்கும் இடையே செங்கோலின் பெருமையை வைத்துக் கூறுகின்றான். செங்கோலின் மீது எவ்வளவு காதல் இவனுக்கு! வழுவியும் கொடுங்கோல் தன் ஆட்சியில் புகுந்து விடக் கூடாது என்பது இவன் கொள்கை. இத்தகைய வேந்தனுக்கு நாட்டுப் பற்று அளவு கடந்து விளங்கியதில் வியப்பேயில்லை.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இளமையிலேயே ஆற்றல் பெற்று விளங்கியவன். "மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது" என்ற பழமொழி இவனுக்கு நன்கு பொருந்துவதாகும். இவனும் கவி பாடும் ஆற்றல் பெற்றவன். இவன் மிகவும் இளையவனென்றும் வலியிலானென்றும் எண்ணிச் சிற்றரசரும் பேரரசருமாய் எழுவர் ஒன்று கூடி இவனை எதிர்த்தனர். சிறி யெழுந்து வஞ்சினங் கூறினான். இதோ அவன் கூறிய வஞ்சினம்!

நகுதக் கனரே நாடுமிக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய

என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலே னுகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னுக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே.

— புறம்-72.

“இவன் நாட்டை உயர்த்திக்கூறுவோர் எள்ளி நகையாடத்தக்கவர். இவன் மிகவும் இளையன். நாமோ நாற்படையும் மிகவுடையோம் என்று விண்கர்வங் கொண்டு என் ஆற்றல் அறியாது சிறு சொல் சொல்லிய வேந்தரைப் போரில் முறியடிப்பேன். முரசத்துடன் சிறைப்படுத்துவேன். அவ்வாறு வெல்லேனுயின் யான் ஆளும் நாட்டுக் குடிமக்களால் கொடியவன் எனத் தூற்றப்படுவேனுக! உயர்ந்த சிறப்புடைய மாங்குடி மருதனர் போன்ற புலவர் பெருமக்கள் என் நாட்டைப் பாடாது விடுவாராக! வருந்தி இரந்து நிற்போர்க்கு ஈயாத வறுமையில் வாடுவேனுக!” என இவ்வாறு அவன் கூறியதிலிருந்து அவனது மனக்கோளை நன்குணரலாம். அரசனுக இருக்கின்றவன் நாட்டை அன்புடன், அச்சம் நீக்கி ஆள வேண்டும். ஏந்திய வெண்குடை, மக்களின் துயரை மறைத்துக் காக்க வேண்டும். குடிகள் துன்பத்தால் கண்ணீர் சிந்தக் கூடாது. அரசன் கொடுங்கோலன் என்ற பழிபெறக் கூடாது என்பது அவன்கொண்ட உயர்ந்த

கொள்கைகளுள் தலையாயது ஆகும். அடுத்தபடியாக அவன் மதித்தது புலவர் பெருமக்களை. புலவர் பெருமக்கள் ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்கள். அவர்கள் இருப்பது நாட்டுக்குப் பெருமை. அவர்கள் பாடும் சிறப்பைப் பெறுவது நாட்டுக்கும் ஆட்சிக்கும் பெருஞ் சிறப்பு. எனவே, புலவர்களைப் பற்றி எண்ணுகின்றான். புலவர் மாங்குடி மருதனார் அக்காலத்து மிக்க புகழுடன் விளங்கினார். மதுரைக் காஞ்சி என்ற நூலைப்பாடி இப்பாண்டிய மன்னன் பெருமைகளை யெல்லாம் எடுத்தோதியுள்ளார். அத்தகைய புலவர் பெருமக்களை மதித்துப் போற்றி வாழ வேண்டும். அவர்களால் தானும் தன் நாடும் பாடப்பெற வேண்டும் என்று எண்ணினான் புலவனாயும் புரவலனாயும் விளங்கிய இச்செழியன். மூன்றாவதாக அவன் விரும்பி மதித்தது ஈகை. இல்லை யென்றுரைப்போர்க்கு இல்லை யென்றுரையாமல் ஈதலை விரும்பினான்.

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள

— குறள்-223.

என்ற மணிமொழிக்கு இலக்கியமாக விளங்க எண்ணினான். இவைகளே இவன் உயர்ந்தனவாகக் கொண்ட மூன்று குறிக்கோள்கள்.

இனிச் சோழ மன்னன் ஒருவன் நலங்கிள்ளி என்னும் பெயரினன் ஒருகால் கூறிய வஞ்சினத்தைப் பார்ப்போம். சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பகைத்துக் கொண்டனர். ஆனால் நலங்கிள்ளி வீணாகப் போர் தொடுத்து உயிர்களைச் சிதைக்க விரும்பவில்லை. வாளா இருந்தான். அமைதியையும் ஒழுக்கத்தையும் விரும்பும்

உள்ளம் உடைய இவனை நெடுங்கிள்ளி தவருக எண்ணிப் போருக்குத் தூண்டினுன். வீரத்தை இகழ்ந்து போருக்கு அழைத்தான். நலங்கிள்ளி மானங்கெடாத மாண்புடையவன். வெகுண்டெழுந்தான். வெம்பினுன். வஞ்சினம் கூறினுன். வஞ்சினப் பாடல் வருமாறு :—

மெல்ல வந்துஎன் நல்லடி பொருந்தி
ஈயென இரக்குவ ராயின் சிறுடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்
இன்னுயி ராயினும் கொடுக்குவென். இந்நிலத்து
ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்ருதுஎன்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதில்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே ; மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்திணி நீள்முளை போலச் சென்றுஅவன்
வருந்தப் பொரேஎ னாயின் பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே.

— புறம்-73.

இப்பாடலால் இவனுடைய சினமும் உயர்ந்த ஒழுக்கமும் புலப்படுவதோடு செய்யுள் யாக்கும் திறமையும் புலப்படுகின்றது. ஒழுக்கத்தை உயிரினும் மேலாக இவன் மதித்திருக்கின்ருன் என்பது விளங்குகின்றது. " அரசு மட்டுமா ? உயிரையும் தருவேன் யாராயினும் கெஞ்சிக்கேட்டால். ஆனுல் என் ஆற்றல் உணராது வந்திருக்கும் இவ்வறிவிலியை வாட்டிவதைப்பேன். விடேன். விடேன். கண்

கெட்ட குருடன் தூங்குகின்ற புலியை இடறினல் என்னுவான்? யான் புலி. இவன் குருடன். மூங்கிலைத்தின்னும் யானையின் காற்கீழ்ப்பட்ட மூங்கில் முளை எவ்வாறு அழியுமோ அவ்வாறு அழிவான் இவன். யான் யானை. இவன் அதன் காலடியிற்பட்ட முளை. இவ்வாறு இவனை அழியேனாயின் என்னை ஒழுக்கங்கெட்டவன் என்று உலகம் இகழட்டும். காதல் கொள்ளாத பொதுப் பெண்டிரைத் தழுவிய இழிந்தேன் ஆவேனாக. என் மார்புமாலை அத்தகைய இழிசெயலால் வாடுவதாக." இதுவே அவன் கூறிய வஞ்சினம். இவ்வஞ்சினக் கோபத்தில் நலங்கிள்ளி கூறியுள்ள இரண்டு உவமைகளும் தமிழ் உள்ளவரை வாழும். இத்தகு காவலர் இயற்றிய கவிதைகளின் சிறப்பை எப்படி எடுத்துக் கூறுவது?

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் சோழன் நலங்கிள்ளியும் கொண்டிருந்த உயர்ந்த குறிக்கோள்களை வரிசைப்படுத்திப் பார்ப்போம்.

பூதப்பாண்டியன் கொள்கைகளாவன:

(1) கற்பு மனைவியைப் பிரியாத வாழ்வு
(2) கொடுங்கோல் இல்லாத ஆட்சி
(3) நட்பு வாழ்க்கை
(4) தமிழகத்து வாழ்வு

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கொள்கைகளாவன:

(1) கொடுங்கோல் இல்லாத ஆட்சி
(2) புலவர்பாடும் பெருமை
(3) இல்லையென்னுது ஈதல்

சோழன் நலங்கிள்ளியின் கொள்கை :

(1) கற்பு ஒழுக்கம்.

இம்மூவர் கொள்கைகளும் மிகவும் போற்றத்தக்கன எனினும், ஒவ்வொருவரும் தத்தம் சூழ்நிலைக்கேற்பத் தாம் பெரிதாக மதித்த கொள்கைகளை விதந்து கூறினர் எனக் கொள்ள வேண்டும். பூதப்பாண்டியன் மனைவி யோடு வாழ்ந்தவன். அவன் மனைவி பெருங்கோப்பெண்டு தன் கணவனுடன் சேர்ந்து வாழ்ந்து அவன் இறந்ததும் பலர் தடுத்தும் நில்லாது தீப்பாய்ந்த செய்தி புறநானூற் றில் அவள் வாய்மொழியாகவே (புறம்-246) கிடைத்துள் ளது. இவ்வாறு வாழ்ந்த மனைவாழ்க்கையை மாண்புடன் மதித்த காரணத்தால்தான் பூதப்பாண்டியன் முதலில் தன் மனைவியின் பிரிவைப் பற்றிக் கூறினன். கற்பு ஒழுக் கத்தை எடுத்துக் காட்டினன்.

சோழன் நலங்கிள்ளியும் மனைவாழ்க்கை பெற்று இல் லறம் நன்கு நடத்தியவன். அதனால்தான் பொருட் பெண் டிர் பொய்ம்மை முயக்கத்தை அவ்வளவு வெறுத்துள் ளான். ஆனால் பாண்டியன் நெடுஞ்செழியன் இதனைப் பற்றிக் கூறவில்லை. காரணம் அவன் மிகவும் இளையன். பால்மணம் மாறாத குழந்தைப் பருவத்திலேயே போர் மேற்கொண்டான். அந்நிலையில் வீரத்தையும் ஈரத்தை யும் (வண்மை) பெரிதாக மதித்து வஞ்சினம் கூற முடிந் ததே ஒழியக் கற்பு வாழ்க்கையைப் பற்றிக் கூற வாய்ப் பில்லாது போயிற்று. இதுவே மற்றை இருவர் வஞ்சி னத்தில் உள்ள கற்பு ஒழுக்கச் செய்தி இவனிடம் எழாத தன் காரணம். பொதுவாக ஆராய்ந்து முடிவு கூறுவோ மானால் மூவரும் நல்லாட்சியே விரும்பியவர் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். நல்லாட்சியில் புலவர்களை

மதித்தலும் நீதி செலுத்துதலும் ஈகை செய்தலும் என்றும் உண்டு. மூவரிடமும் நாட்டுப் பற்று இருந்ததெனினும் பூதப்பாண்டியனிடம் அது சற்று வெளிப்படையாகத் தோன்றிச் சிறந்திருந்தது போலும்.

பண்டைத் தமிழ் வேந்தரின் பாடல்களைப் படிக்க வேண்டும். படித்துப் பயன் உற வேண்டும். வேந்தனுக்கும் கவிதைக்கும் இருந்த தொடர்பை உணர்ந்து அனைவரும் கற்றவர்களாக வாழ முற்பட வேண்டும். கற்று விட்டுவிடாமல் நடத்தையிலும் செம்மையுடையராய் வாழ வேண்டும். நல்ல குறிக்கோள் அழியாத செல்வம் என்பதையும் உணர்வோமாக!

8. மானம் பெரிது

மனிதனின் உயிரைவிடப் பெரியது மானம். மானங் கெட்ட வாழ்வும் ஒரு வாழ்வா? மானம் இழந்தபின் வாழாமை இனிது. இவ்வாறெல்லாம் மானத்தைப் பற்றிப் பேசுகின்றேமே! அந்த மானம் என்பது யாது?

மானம் என்றால் மனித நிலை என்பது சொற்பொருள். மனித நிலையினின்றும் தாழாமையும் தாழும் நிலை ஏற்படின் உயிர் வாழாமையும்தான் மானம் எனப்படும். திருக்குறளுக்கு உரை வகுத்த தெள்ளு பரிமேலழகர் இதற்கு இவ்வாறுதான் பொருள் விளக்குகின்றார். "அஃதாவது எஞ்ஞான்றும் தம் நிலையிற்றாழாமையும் தெய்வத்தாற் றாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆம்" என்பது அவர்தம் விளக்கமாகும்.

மானம் நிலையானது. மனித உடல் நிலையற்றது. அழிந்து போகும் தன்மையினையுடைய உடல் அழிந்து உயிர் போகும் நிலை ஏற்படினும் மானத்தைக் காக்க வேண்டும் என்பது தமிழர் கொள்கை. வேற்று நூலார் இறப்பு நேருங் காலத்து அதனைத் தவிர்ப்பதற்காக விதி விலக்காக இழி செயல் செய்தேனும் வாழ்வு பெறலாம் என்பது வள்ளுவர் போன்ற பெரியார் கருத்துக்கும் பண்புக்கும் மாறானதாகும். எவ்விடத்தும் எக்காலத்தும்

இவ்வாறு விழிப்புடன் நின்று மானம் வழுவாது பேணு தல் எளிதன்று. சாலச் சிறப்புடையதாகும். இவ்வாறு பேணுதற்குப் பேராண்மை வேண்டும். உண்மையில் மானம் காப்பதுதான் ஆண்மையினும் ஆண்மையாகிய பேராண்மையாகும். மானம் இழந்துவிட்டால் மனிதன் இழிந்தவன் ஆகிவிடுகின்ருன். நம் தலையின் கண்ணுள்ள மயிர் உதிர்ந்து விட்டால் அதற்கு மதிப்பேது? தலையில் இருக்கும்போது அதனை எவ்வெவ்வாறெல்லாம் பேணு கின்ருேம். அதற்கு எவ்வளவு பெருமையும் மதிப்பும் தருகின்ருேம். எண்ணெய் வகைகளும், மண வகைகளும் ஊட்டி மாசு நீக்கி மாண்புடன் போற்றுகின்ருேம். வித விதமாக அணி செய்கின்ருேம். வளைவு நெளிவு உண் டாக்கி மகிழ்கின்ருேம். பணி பல புனைந்து காக்கின்ருேம். ஆனுல் அது தலையிலிருந்து நீங்கிவிட்டால் மதிக்கின் ருேமா? மாருக வெறுக்கின்ருேம். அருவருப்படைகின் ருேம். பெயர் சொல்லவும் கூசுகின்ருேமே! உணவுப் பொருளிலோ உடுக்கும் உடையிலோ எங்கேனும் ஒன்று ஒட்டிக் கிடக்குமாயின் படாத பாடு படுகின்ருேமே! அவ்வளவு வாழ்வு பெற்ற மயிர் தாழ்வு பெறுவது எதனுல்? தனது நிலையாகிய தலையினின்றும் இழிந்து விட்டதனுலன்ருே? அதேபோலத்தான் மனிதனும் மான மாகிய தனது நிலையினின்றும் தாழ்ந்துவிடின் மதிப் பிழந்து இழிவுக்கு ஆளாகிவிடுகின்ருன்.

தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை

என்று திருவள்ளுவர் இதனை மிக அழகாகச் சுருக்கமாக ஆணித்தரமாகக் கூறியிருப்பதையும் நாம் இங்குக் கவ னித்தல் வேண்டும். மலை போன்ற மாண்புடையாருங்

கூட மானம் இழந்தால் மதிப்பிழந்து குன்றிப் போவர். மானம் இழப்பதால் ஒரு பயனும் இல்லே. புகழும் இல்லே. புத்தேள் உலகமும் இல்லே. பின்னர் ஏன் மானம் இழக்கும் இழி செயலில் இறங்க வேண்டும்? இம்மையிற் புகழேனும் மறுமையில் தேவருலக வாழ்வேனும் கிடைப்பதாயிருந்தாலும் போனுற் போகட்டுமென்று மானம் தவறலாம். அதுவுமில்லேயே! அப்படியென்ருல் மானம் பேண வேண்டாமா? மானம் பேணுதல் எவ்வளவு இன்றியமையாதது என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். மானம் இழந்து கைகட்டிச் சிறைப்பட்டு மாற்ருன் தாள் பணிந்து ஈன வாழ்வு வாழ்தலேவிட மானத்துடன் இறந்துபடுதல் எவ்வளவோ சிறப்புடையதாகும். பெருந்தகைமையாகிய மானத்துக்கு ஊறு வரும் போது அழியும் இழிவுடைய புன்புலால் யாக்கையா பெரிது? உடன் உயிர் விட்டு மானத்தை நிலேநிறுத்திப் புகழுடம்பு பெற்று என்றென்றும் வாழ வேண்டாமா? கவரிமானே எல்லோரும் பார்த்திருக்கின்ருேம். இது எவ்வளவு மானமுடையது தெரியுமா? தன் உடம்பினே அழகுபடுத்தும் வாலின்கண் உள்ள மயிர்த் திரளினின்றும் ஒரு மயிர் நீங்கினும் தன் நிலே யழிந்து விட்டது என்றும் இனி வாழக் கூடாது என்றும் எண்ணி அப்போதே உயிர் விட்டு விடுமே! அதுவன்ருே மானம்? அப்படியல்லவோ பெரியோர் அனேவரும் மானத்தை உயிர் விட்டேனும் பாதுகாப்பர்? அவ்வாறு மானம் உடையவர்களேத்தானே மக்கள் மதிப்பர்; புலவர் போற்றுவர்? "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவன் ஏவா வானவூர்தி எய்துவர்"* என்று நமது இலக்கியம் கூறும் உண்மையினே நாம் அறிய வேண்டும்.

*புறநானூறு-27.

முடியுடை மூவேந்தர்களுள்ளும் சேரரே மிகப் பழமை வாய்ந்தவர் என்பதைச் சான்று பல காட்டி நிறுவியுள்ளார் பேராசிரியர் மு. இராகவையங்கார் தாம் எழுதிய 'சேரன் செங்குட்டுவன்' என்ற ஆராய்ச்சி நூலில். அதனை அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். அத்தகு பழமை வாய்ந்த மரபிலே தோன்றிய மன்னர்கள் பலர் பெரும் புகழ் விளைத்து மறைந்தனர். அவருள் தனிப் பெருமை பெற்று விளங்குகின்றவன் சேரமான் கணைக் கால் இரும்பொறை என்பவன் ஆவன். அவன் மானத் துக்காக உயிர்விட்ட மாண்புடையவன் ஆதலின் மக்கள் அவனைக் கவரிமான் மன்னன் என்றனர். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அனைய" பெருமையினை யுடைமையின் அவன் அவ்வாறு அழைக்கப் பட்டான்.

இச் சேரமான் கணைக்கா லிரும்பொறை அக் காலத் துச் சான்றோர்களால் பெரிதும் மதிக்கப் பட்டான். புல வரை மதித்துப் புகழ் படைத்துக் கொண்டதோடு தானும் கவி பாடும் காவலனாய்ச் சிறந்து விளங்கினான். பொய்கையார் என்ற புலவர் இவனிடம் உயிர் நட்புப் பூண்டிருந்தார். சேரர்களுள் கோச்சேரமான் என்றும், சேரமான் என்றும் சிறப்புப் பெயர் பெற்றுச் சிருடன் வாழ்ந்த இவன் பேராற்றல் மிக்கவன். மேனாட்டு ஆசி ரியர் பிளினி (*Pliny*) என்பவரால் "டிண்டிஸ்" என்று அழைக்கப்பட்ட தொண்டிமாநகரே இவனது அரசிருக் கையாய் விளங்கியது. இது சேரநாட்டின் பழம் பெரும் பட்டினமாகும். இந் நகரில் சிறப்பு வாய்ந்த பழங் கோட்டை ஒன்றிருந்தது. அதனையே தனது கோட்டை யாகப் பயன்படுத்திக் கொண்டான் சேரமான். அக் காலத் தில் இவனுடன் பகைத்துப் போர் உடற்றினான் மூவன் என்னும் மாவீரன் ஒருவன். அந்த மூவன் என்பவனைப்

போரில் வீழ்த்தி அவன் வாயிற் பல்லைப் பிடுங்கிக் கொணர்ந்து கோட்டை வாயிற் கதவில் வைத்துப் பதித்து இழைத்துச் சிறப்புப் பெற்றான் இச் சேரமான் கணைக்கா லிரும்பொறை. இவனது அருமை நண்பர் புலவர் பொய்கையார் தம் பாடலில் இது குறித்து இவனைச் சிறப்பித்துள்ளார்.

இவ்வளவு ஆற்றலும் அறிவும் வாய்ந்த இம்மன்னனுக்கும் அக்காலத்தே சோழநாட்டை யாண்டுவந்த சிவபக்தச் செம்மல் சோழன் கோச்செங்கண்ணனுக்கும் யாது காரணத்தாலோ பெரும்பகை யுண்டாயிற்று. இருவருக்கும் கடுமையான போர் நிகழ்ந்தது. கழுமலம் என்னும் இடத்தில் நிகழ்ந்த இப்போரின் சிறப்பையெல்லாம் புலவர் பொய்கையார் பாடிய "களவழி நாற்பது" என்ற நூலிற் காணலாம். இப்பெரும்போர் நிகழ்ந்தது ஒப்புக்கொள்ளப்பட்ட வரலாற்றுண்மையேயாயினும் இது நடந்த இடத்தைப் பற்றிக் கருத்து வேற்றுமை நிலவி வருகின்றது. இப்போர் நிகழ்ந்தவிடம் கழுமலம் அன்று குணவாயிற் கோட்டமாகும் என்றும், அஃதன்று வெண்ணிப் பறந்தலை என்றும் முறையே தமிழ் நாவலர் சரிதையும் நற்றிணை முன்னுரையும் கூறுகின்றன. வரலாற்றுக் கருவூலமான புறநானூறு என்னும் நூலோ இப்போர் நிகழ்ந்தவிடம் திருப்போர்ப்புறம் எனச் செப்புகின்றது. இப் பெரும் போரில் இரு திறத்தாரும் நன்கு பொருதனர். முகிலொடு முகில் மோதுவது போல் யானைகளும் மலையொடு மலை பொருவது போல் தேர்களும் அலையொடு அலை தாக்குவது போல் குதிரைகளும் புலியொடு புலி பொருவது போல் காலாட் படைகளும் இரு திறத்தினின்றும் வன்மையாகப் போர் செய்தன. போர் என்றால் என்ன? இருதிறத்தாரும் வெல்லமுடியுமோ?

"இருவர் வேறல் இயற்கையும் அன்றே" (புறம்-45). போர் முடிவுற்றது. மதயானையை யடக்கி மன்னுயிரைக்காத்த மாபெரும் வீரன் சேரமானது படைகள் சிதறிவிட்டன. போரிற்புறங்கொடா வீரனாய்ச் சேரமான் சோழனிடம் சிறைப்பட்டுவிட்டான். காலில் விலங்கிடப் பெற்றான்.

இவ்வாறு தோல்வியுற்றுச் சிறைப்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் இருந்தான். சேரமான் சிறையிலிருந்தபோது ஒரு சமயம் நீர் வேட்கையுற்றான். சிறைக் காவலர்களை நீர் கொணருமாறு ஏவினான். அந்தோ! மன்னவின் பெருமையுணராத அக்காவலர் அவன் ஏவலை மதித்துப் போற்றவில்லை. வாளாவிருந்தனர். வீரன் சேரமான் அதனையுணர்ந்தான். காவலர் மதியாது சில நாழிகை கழித்துப் பணிவின்றித் தருக்குடன் நீர் கொணர்ந்து கொடுத்தனர். மானவீரனாகிய சேரன் இக்கொடுமையைப் பொறுதவன் ஆயினன். தனக்குள் எண்ணிப் பார்த்துக் கொண்டனன். "எனது நாட்டில் யான் மன்னனாய் இருந்த நிலை என்ன? இன்று யான் இங்கே பணிகேட்பாரும் பணியாத நிலையில் சோர்ந்து கிடப்பதென்ன? அடிமை விலங்காகிய நாயைப் போன்றன்றோ சங்கிலியாற் பிணித்து அடக்கி அவமதித்து விட்டனர். இந்நிலையில் உயிர்பெரிதா? எனது உடலைத் தானே சிறை செய்ய முடியும்? உயிரைச் சிறைப்படுத்த இவர்களால் ஆகுமோ? என் மானத்தை இவர்களிடம் இழப்பதா?" என்று எண்ணினான். எண்ணித் துணிந்து முடிவுக்கு வந்தான். "இவர்கள் மதியாது கொடுத்த இந்நீரை யான் பருகேன். மானம் பெரிது! மறவர் வழிவந்த எனக்கு மானத்தினும் சிறந்ததொன்றுண்டோ? இனி வாழேன். உடல் அழியட்டும்! மானம் நிலைக்கட்டும்" என்று உயிர்விடத் துணிந்தான். உயிர் விடுமுன் ஓலைத் துண்டொன்றில் தனது உள்ளக்

கிடக்கையை உயர்ந்த கவிதையாக வடித்தான். அக் கவிதையை எழுதி வைத்துவிட்டுத் தன்மானங் காத்துப் பொன்னுயிர் நீத்தான். அந்நிலையில் அவன் எழுதிய பாடல் தமிழ் இலக்கியக் கடலில் விலைமதிக்க முடியாத நன்முத்தாய் இன்றும் இலங்குகின்றது. என்றும் இலங்கும்.

குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன்று என்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளான் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம்இருந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே.

— புறம்-74.

என்பதுதான் கவரிமான் மன்னன் இசைத்த கவிதைச் செல்வம்.

அரசர் வீரர் மரபினர். அரசர் குடியிற் பிறந்தவர் அனைவரும் வீரராய் வாழ வேண்டும். வாழ்வது மட்டும் போதாது. சாதல் நேரினும் வீரச்சாவுதான் பெற வேண்டும். பிறக்கும்போதே வீரம் வாய்த்திருக்க வேண்டும். நோயால் இறப்பது கூடாது. ஆண்மையால் இறத்தல் வேண்டும். ஒருவேளை நோய் வந்து இறக்க நேர்ந்தாலும் இறந்த உடலை வாளாற் பிளந்து துண்டமாக்கியே அடக்கம் செய்ய வேண்டும். இது வீரர்க்கு வகுத்த இலக்கணம். ஔவையார் அதிகமானின் விழுப்புண்ணைச் சிறப்பித்துப் பாடிய பாடலில் (புறம்-93) இதனை விளக்குகின்றார்.

........................பிடில் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்துஅவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோ.

என்பது அப்பாட்டின் பகுதியாகும்.

இத்தகைய மரபின் வழி வந்த சேரமான் சிறைப் பட்டுக் கிடந்த போழ்து இதனையெல்லாம் எண்ணிப் பார்த்தான். அரசர் மரபில் குழந்தை இறந்தாலும் வாளால் வெட்டி வீழ்த்துவரே! உருவமின்றித் தசைப் பிண்டம் பிறந்தாலும் அதனையும் அவ்வாறே வாளாற் போழ்வரே! ஒரு நாளும் தவறமாட்டார்களே! இப்படி யிருக்கத் தான் மட்டும் மானமும் வீரமும் சிறிது மின் றிச் சுற்றமல்லாத சுற்றத்தார் கையில் இரந்துண்டு வாழ ஒருப்பாடுவானா? அவனுக்கு ஆண்மை (மதுகை) இல் லையா? பசிதான் அல்லது நீர்வேட்கைதான் பெரிதா? வயிற்றுத் தீத்தணிப்பதற்கு இதுவே வழியாயின் வாழாது மாள்வது அன்றோ அரசர் இலக்கணம்? அரச மரபின் கன் யாரும் வீரமற்ற குழந்தையைப் பெறுவார்களோ? ஒரு நாளும் பெற்றிருக்க மாட்டார்களே! இவ்வாறெல் லாம் எண்ணினான்.

அடிமைத் தன்மையை அறவே வெறுத்தான். பாரதி யார் பாடியது போல் "சீசீ நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு!" என்று எண்ணி வெகுண்டான். "வானம்

பொழியுது பூமி விளையுது. ஏன் உமக்குத் திறை செலுத்த வேண்டும்?'' என்று வீரபாண்டியக் கட்டபொம்மன் முழக்கம் செய்யவில்லையா? காரணம் என்ன? அடிமைத் தளையை அறுத்தெறிய வேண்டும் என்ற ஆர்வம்தானே! வேறு என்ன? வீரத்திரு வ. உ. சிதம்பரனுர் செக்கிழுத்தார். திருப்பூர்க்குமரன் தடியடி பட்டு இறந்தனன். இன்னும் எத்துணை எத்துணைப் பேர் எவ்வளவு எவ்வளவு அல்லலுற்றனர்? எல்லாம் அடிமை நிலையை ஒழித்துத் தன்மானங் காத்துத் தனியுரிமை பெற்று வாழ்வதற்காகத்தானே! இவையெல்லாம் இந்த நூற்ருண்டில் பெரும்பாலும் நம் கண்முன் நிகழ்ந்தவை. ஆனுல் சேரமானின் வீரத் துடிப்பை நாம் அன்றிருந்து காணவில்லை. அதனுல் என்ன? அவன் அளித்த அருந்தமிழ்க் கவிதையின் மூலம் இன்றும் அத்துடிப்பை உணருகின்ருேம் அல்லேமோ?

அடிமை என்றவுடன் நாய்தான் நினைவுக்கு வரும். நாயைச் சங்கிலியாற் பிணித்து அடிமை கொள்வர். அம்மம்ம! கொடுமை! கொடுமை! அது போல் மக்களையும் பிணிக்கும் நிலை வந்ததே. அற்ப உணவுண்டு, அழியும் உடலை அப்படி எத்துணை நாள்தான் காக்க முடியும்? அருமைக்கவி பாரதியார் இதனை மிகமிக அழகாக எடுத்துக் காட்டுகின்ருர். அவரது உரைநடைச் சிறப்பினை உணர்ந்தவர் இதனை நன்கறிவர். "ஒநாயும் வீட்டுநாயும்" என்ற தலைப்பில் அவர் எழுதிய கதையை ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். அக்கதையில் பாரதியார் ஒநாயின் வாயிலாக வீட்டுநாயை எவ்வாறு இகழ்கின்ருர்? அந்நாயின் கழுத்திலிருந்த பட்டைத்தழும்பினைப் பார்த்து எள்ளி நகையாடுகின்றது ஒநாய்.

" தூ ! பிரஷ்டப் பயலே ! என்னை நீ ஏமாற்றப் பார்த்தாய். உன் பிழைப்பும் ஒரு பிழைப்பா ? நீ ஒரு அடிமையாய் இருந்தும் மெத்த ஜம்பமாய்ப் பேசினுய். நான் சுதந்திரப் பிரியன். எனக்கு எஜமானனும் இல்லே, சங்கிலியும் இல்லே. கஷ்ட வாழ்வாய் இருப்பினும் நான் சர்வ சுதந்திரன். யதேச்சையாய் எங்கும் செல்வேன். எதையும் தின்பேன். எதையும் சொல்வேன். எவரோடும் சேர்வேன். பராதீனம் பிராண சங்கடம் ; ஒருவருடைய ஆக்கினைப்படி வரவோ, போகவோ, உண்ணவோ, உறங்கவோ, மலம் ஜலம் கழிக்கவோ சம்மதித்து இருப்பவன் மகா நீசனுய் இருக்க வேண்டும்" என்று அந்த ஒநாய், பகதூர் என்ற அந்த வீட்டு நாயை இகழ்வதாகக் கற்பனை செய்தார் கவி பாரதியார். அவரது உரைநடை ஒரளவு உரிமையோடு வடசொற்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டிருப்பினும் அதன் சுதந்திரத் துடிப்பைப் படித்தவர் — பாமரர் — அனைவரும் புரிந்துகொள்ள முடியும். எனவே, "நாய் போன்ற அடிமை வாழ்வு ஒழிவதாக !" என்று உயிர்நீத்தான் சேரமன்னன்.

இதற்கிடையே சேரமன்னனின் உயிர்த் தோழர் புலவர் பொய்கையார் தம்மரசன் சிறைப்பட்டதையுணர்ந்து விடுதலே செய்ய முனைந்துவந்தார். அவரும் வீரப்பழக்கம் உடையர் ஆதலின் சோழனிடம் இரந்து கேட்க விரும்பவில்லே. கழுமலப்போரைக் 'களவழி நாற்பது' என்னும் பெயரால் பாட்டில் வடித்து எடுத்துக் கொண்டார். சோழன் செங்கணுனிடம் சென்ருர். கவிதை நூலேக் காட்டினுர். செவிமடுத்தான் செங்கணுன். புலவரின் புலமையை வியந்து வியந்து பாராட்டிப் பரிசில் வழங்குதல் நலமென அவரைக் கேட்டான். அவர் தம் அரும் நண்பன் வீரக்குரிசில் சேரமானின் விடுதலேயை

விரும்பினர். அரசனும் வழங்கினன். விடுதலைப் பரிசில் பெற்றுச் சிறைச்சாலை அடைந்தார் புலவர். என்ன பயன்? அதற்கு முன்பே சேரன் உயிர் மானங்காக்க விடுதலைபெற்றுச் சென்றுவிட்டதே!

மானத்தின் வழிநின்ற கொற்றவன் வரலாறு இது. தமிழர் நாகரிகம் — தமிழர் பண்பாடு — தலைசிறந்தது என்பதை எடுத்துக் காட்டும் இந் நிகழ்ச்சியை எவர்தாம் மறப்பர்? அதோடு கூட இவ்வரசனின் எழில் மிக்க கவிதையும் படித்து இன்புற்றுப் பயன்பெறத் தக்கதாகும். காவல் தொழில் பூண்டு வில்லையும் வேலையும் ஈட்டியையும் ஏந்தும் கைகள் எழுத்தாணிகொண்டு இவ்வாறு இன்பக்கவி இசைத்தல் வியப்பினும் வியப்பு. உலகில் வேறெங்கணும் எளிதிற் காணமுடியாத பெருமை.

ஆம். மானம் வேண்டும். மானந்தான் வேண்டும். மானமே தமிழ்க் குலத்தின் விலை மதிக்க முடியாத மாபெருஞ் செல்வம். உலக முழுதும் இச்செல்வம் பெற்றுய்வதாக!

9. வரிகேட்கும் சிறுமை

பண்டைத் தமிழ் மன்னர்கள் குடிமக்கள் நலனி லேயே கண்ணுங் கருத்துமா யிருந்தனர். வீணே குடி மக்களைப் பல்வகைத் துன்பத்துக்கும் ஆளாக்கித் தாம் மட்டும் எழிலும் இன்பமும் ஏற்றமுமான வாழ்வைப் பெற நினைக்கவில்லை. நாட்டைக் காக்கும் பொறுப்பு முழுதும் தம்முடையதாகவே எண்ணிவந்தனர். நாட்டு நலனுக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் காடு கெடுத்து நாடாக்கிச் சிறப்பித்தனர். குளந்தொட்டு வளம் பல பெருக்கி மகிழ்ந்தனர். காவிரிக்குக் கரையெடுத்துத் தமிழகத்தை வளம் படுத்தினன் கரிகால் வளவன். இவ்வா றெல்லாம் நாட்டு நன்மை கருதிப் பொதுச் செலவு செய் தற்குப் பொருள் வேண்டுமே! இப் பொருளை அவர்கள் எவ்வாறு பெற்றனர்?

> உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
> தெறுபொருளும் வேந்தன் பொருள்

என்று கூறுகின்றது திருக்குறள். இதற்குப் பரிமேலழகர் கூறும் பொருள், "உடையார் இன்மையில் தானே வந் துற்ற பொருளும், சுங்கமாகிய பொருளும், தன் பகை வரைத் திறையாகக் கொள்ளும் பொருளும் அரசனுக்கு உரிய பொருள்கள். 'உறுபொருள்' வைத்தார் இறந்து போக நெடுங்காலம் நிலத்தின்கண் கிடந்து பின் கண் டெடுத்த தூஉம் (புதையல்), தாயத்தார் பெறுததூஉம்

ஆம். 'சுங்கம்' கலத்தினும் (கப்பல்) காலினும் (வண்டி) வரும் பண்டங்கட்கு இறையாயது. 'தெறுபொருள்' தெறுதலான் வரும் பொருள் என விரியும். ஆறில் ஒன்று ஒழியவும் உரியன கூறியவாறு" என்பதாகும். எனவே, நிலத்து வருமானத்தில் ஆறில் ஒரு பங்கும், வணிகத் துறையில் திரட்டப்படும் சுங்கவரியும் போரில் பகைமன்னரை யடக்கிப் பெறும் திறையும் (கப்பமும்) அரசனுக்கு (அரசாங்கத்துக்கு) உரிய பொருள்கள் என்பது புலனாகும்.

இல்வாழ்வான் ஒருவன் தனது வருமானத்தில் ஆறில் ஒரு பகுதியை அரசனுக்கு வழங்குவது மரபாக்கப் பெற்று என்றும் நிலவிவரும் வழக்காகிவிட்டது. திருவள்ளுவர் பெருமான் இதனைத் தலையாய 'கடன்' என்றே கருதி யிருக்கின்றார்.

> தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றுஆங்கு
> ஐம்புலத்தாறு ஓம்பல் தலை

என இல்லறவியலில் 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரத்தில் வைத்துக் கூறியுள்ளார். இக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர் தம் உரையின் இறுதியில் குறிப்பு ஒன்று கொடுக்கின்றார். "அரசனுக்கு இறைப்பொருள் ஆறில் ஒன்றாயிற்று, இவ்வைம் புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலான் என்பதறிக" என்பதே அவர் சுட்டும் குறிப்பாகும்.

இங்கு இல்வாழ்வான் எனப் பொதுவாகச் சுட்டப் பெற்றிருப்பினும் நிலத்தை உழுதும் உழுவித்தும் வாழும் உழவனையே இது குறிக்கும் என்பதை எளிதில் உய்த்துணரலாம். நிலத்து வருமானம் இவ்வாறு அரசனுக்குச் செல்லுவது இயல்பாகிவிட்டது. கொடுக்கும் உழவர்

அவ்வாறிலொன்றைத் தத்தம் ஆறில் ஒரு கடமையாகவே கருதிவந்தனர் எனவும் தவறாது வழங்கி மகிழ்ந்தனர் எனவும் அறிகின்றோம். இதனைச் செய்க்கடன் (செய் = நிலம்) என்று கூறுவர். இச்செய்க்கடன் உழவர் கடனாக, வணிகர் கொடுத்து வந்தது சுங்கம் என்றாயிற்று. இவ்விரண்டுமே அரசாங்கத்தின் நிலையான வருவாய். கேட்பாரற்றுக் கிடக்கும் "உறு பொருளும்," போர் ஆண்மை காட்டி மாற்றரசரை மடக்கிப் பெறும் பொருளாகிய "ஒன்னார்த்தெறு பொருளும்" அவ்வப்போது அரசாங்கத்துக்குக் கிடைத்து வந்த வருவாய் ஆகும். இவை தவிர, தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் வகையால் வரும் பொருளும் (அபராதத் தொகையும்) அரசாங்கத்தைச் சாரும் எனவும் யூகிக்கலாம்.

சோழன் கரிகால்வளவன், திருமாவளவன் என்ற பெயரும் பெற்று விளங்கினான். சிலப்பதிகாரத்தில் இந்திர விழவூரெடுத்த காதையில் இளங்கோவடிகள் சுவை மிகுந்த செய்தி யொன்றைக் கூறுகின்றார். "அரும்பெறல் மரபின் மண்டபம்" ஒன்று அக்காலத்தே புகார் நகரின் கண் கரிகாலனால் அமைக்கப் பெற்றதாம். எவ்வாறு கரிகாலன் அதனை எழுப்பினான்? வட நாட்டு மன்னர் சிலர் திறையாகவும், பகை வேண்டாம் என அஞ்சியும், நட்பு வேண்டும் என விரும்பியும் வழங்கிய பொன்னினும் மணியினும் அமைத்தனன்.

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப் புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்

அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபில் தோரண வாயிலும்
பொன்னினும் மணியினும் புனைந்தனவாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின.

— சிலப். 5 ஆவது காதை, 99-106.

இச்செய்தியால் நாம் அறிவது வல்லமைமிக்க மன்னர் இவ்வாறு திறையாகவும் பிறவகையாகவும் பிற மன்னரிட மிருந்து தம் நாட்டிற்கு வருவாய் பெற்றனர் என்பதே யாகும்.

திறன் இல்லாத வேந்தர்கள் பிறவருவாய் பெற முடியாது. செய்க்கடனையே நம்பி வாழ வேண்டும். பரம் பரை பரம்பரையாகத் தந்தையிடமிருந்து மைந்தனுக்கு அரசு கிடைக்கின்றது. கிடைத்த அரசினைச் சரிவரக் கட்டிக் காக்க வேண்டும். அதற்குப் போதிய திறமை இல்லாவிட்டால் மக்களைத் துன்புறுத்த வேண்டியுளது. வரிகொடுங்கள், வரிகொடுங்கள் என்று கேட்கும் நிலைமை ஏற்படுகிறது. தானாகக் கேட்பதுமன்றி வரிதண்டும் அலுவலர் மூலம் வற்புறுத்த வேண்டிய நிலையும் ஏற்படு கிறது. அரசனின் இந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அலுவலர்கள் வேறு, கொடுமை செய்யத் தொடங்கி விடுவர். மக்கள் படாத பாடு படுவர். "கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டின் கடும்புலி வாழும் காடு நன்றே" எனக் கூறி மாழ்குவர். செய்வதறியாது வருந்துவர். நாட் டில் குழப்பம் மிகும். நோயும் தொல்லையும் அதிகரித்து விடும். பிறகு ஆட்சியேது, அமைதி ஏது?

நம் நாட்டில்தான் அரசனுக்கு வரிசெலுத்துவது கடமை என்ற உணர்ச்சி மக்களுக்கு எப்பொழுதுமே உள்ள

தாயிற்றே! அந்நிலையில் குடிமக்கள் தாமே மகிழ்ந்து வரிகொடுத்துக் கடமையாற்றும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளுகின்ற மன்னவன்தான் சிறந்தவனுக மதிக்கப் படுவான். அவனையே மாநிலம் போற்றி வாழும். நம்நாடு உழவர் நாடன்ருே? உழவர் வாழ்ந்தால்தான் உலகே வாழும் என்பது நம்மைப் பொறுத்தவரையில் முற்றிலும் உண்மையாகும்.

பலகுடை நிழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நிழ லவர்

என்ற மறைமொழியை மன்னவர்கள் மறவாது போற்ற வேண்டும். உழவர் கை ஓங்க வேண்டும். நாடு செழிக்க வேண்டும். நல்ல விளையுள் கொழிக்க வேண்டும். அரசன் கேட்காமலேயே வரிப்பொருள் வந்து குவியும். அரசனின் பொருட்பண்டமாகிய நிதிச்சாலை எளிதில் நிறையும். இவ்வாறு மேம்பட்டு விளங்கும் அரசனுக்கு வேற்று மன்னர் பலரிடமிருந்தும் திறைப் பொருளும் நட்புப் பொருளும் மிகுதியாய்க் கிடைக்கும்.

உழவர்கள் வாழ்க்கையில் ஒருண்மை சொல்வார்கள். வேலி இல்லாத நிலம் உயர்ந்தது; வேலி இல்லாத அளவில் நிலம் வளம்தர வேண்டும் என்று சொல்வர். இதன் பொருள் வேலிவைத்துப் பயிர்பச்சை மிகுந்த நிலங்களைக் காக்கக் கூடாது என்பதன்று. ஓரக்கால்களில் பாதை ஓரங்களில் உள்ள நிலங்களுக்குத்தானே வேலிபோட வேண்டும்? அவற்றுக்குத்தான் காவல் அதிகம். நடுவில் இருக்கும் நிலமானுல் வேலி தேவையில்லை. வேலியைப் பற்றிக் கவலையே இல்லை. நிலத்துக்குப் பாதுகாவல் வேலி யில்லாமல் தானுகவே கிடைத்துவிடுகின்றது. இவ்வாறு நடுநிலத்துக்குரியனுதல் பெருஞ் சிறப்பாகும். விளையும்

பொருள்கள் யாவும் சேதமின்றி வீடுவந்து சேரும். இந் நிலத்தவர் வேலியென ஒன்றின்றியே நிலத்தைப் பாது காத்துக் கொள்கின்றனர். அது போன்றே வேந்தன் ஒருவன் வரிகொடுங்கள் என்று மக்களைக் கேட்கும் நிலை வராமலேயே எளிதாக வரிபெறும் சூழ்நிலையை உண் டாக்கிக்கொள்ள வேண்டும். அவன் வரியைப் பற்றிக் கவலைப்படாமலேயே அவன் நிதிச்சாலைக்குள் செய்க்கடன் வந்து திரள வேண்டும். இப்படியுள்ள மன்னவனுக்கு எவ் வகைத் துன்பமும் வராது. இழிவும் ஏற்படாது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தமிழகத்தைச் சீரும் சிறப்பும் பெருக ஆண்டுவந்தான். அவனுடைய ஆட்சியில் மக்கள் அமைதியாகவே வாழ்ந்து வந்தனர். இயற்கையின் மாறுபாட்டால் நாட்டின் ஒரு பகுதியில் நல்ல மழை பெய்யவில்லை. வளமில்லாக் கார ணத்தால் அவ்வாண்டு வயல்கள் யாவும் விளையாது போயின. தாமே மனமுவந்து வரிகொடுக்கும் உழவர்கள் வரிகொடுக்க இயலவில்லையே எனப் பெரிதும் வருந்தினர். இதனை அரசன் ஏனோ கூர்ந்து கவனியாது விட்டுவிட் டான். வரிவராததை யறிந்து அலுவலர்கள் வரி வசூலிக்க முனைந்தனர். மக்களை அணுகி வரிகேட்டனர். கொடுக்க இயலவில்லை என்றறிந்தும் கொடுமைப் படுத்தி வரிபெற முயன்றனர். எங்ஙனம் வரிகொடுப்பர் மக்கள்? இதற் கிடையில் அந்த ஆண்டும் கழிந்தது. அடுத்த ஆண்டும் வந்தது. அடுத்த ஆண்டிலும் மக்கள்—அப்பகுதியினர்— இயற்கை அருள் பெற்றிலர். மழைவளம் குன்றிவிட்டது. ஆனால் வரித்தொல்லை அதிகமாகிவிட்டது. அலுவலர்கள் கொடுமை அதிகரித்துவிட்டது. மன்னனுக்கோ உண்மை நிலைதெரியாது. தெரிந்தால் வரிகொடுப்பார் முன் வரினும் சூழ்நிலையறிந்து வரியைத் தள்ளுபடி செய்துவிடுவான்.

அரசாங்க அலுவலரோ நிலைமையைச் சரியானபடி எடுத்துணர்த்தாது தாம் நற்பெயர் பெறுவதற்காக மக்களை 'வரி, வரி' என்று கேட்டு வாட்டிப் பிழிகின்றனர்.

இப்படித் தொல்லை மிகப்பெற்ற பகுதியில் வெள்ளைக்குடி என்றதோர் ஊரும் இருந்தது. அவ்வூரினர் அனைவரும் செய்வதறியாது தவித்தனர். அவ்வேளையில் அவ்வூரினர் ஒருவர் அரசனுக்கு இந்நிலையை உணர்த்த முன்வந்தார். குடிமக்களின் குறைகேட்டு முறை வழங்கும் மன்னன் உயர்ந்தவனாக மதிக்கப்படுவான். மன்னன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனும், அத்தகைய மாண்புடையவனே யாவான். எனினும், அலுவலர் சொல்லையே உண்மையென நம்பி யிருந்துவிட்டான். உண்மையை உணர்த்தும் வாய்ப்பும் குடிமக்களுக்கு எளிதாகக் கிடைக்காது போய்விட்டது. நாடாளும் மன்னன் குடிமக்களுக்கு எளிதில் காட்சி வழங்க வேண்டும் என்பது மன்னனுக்குரியதோர் இலக்கணம். காட்சிக் கெளியவனாய்க் கடுஞ்சொல்லன் அல்லாதவனாய் மன்னன் இருந்தால் அவனுக்குத் தனிச் சிறப்பு உண்டு.

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்

என்பது வள்ளுவர் வாய்மொழி. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்தன் காட்சி மக்களுக்கு எளிதில் கிடைக்காதவாறு அலுவலாளர் சூழ்நிலை ஆக்கிவிட்டது. வெள்ளைக்குடியென்னும் அவ்வூரிலிருந்து வேந்தனைக் காணப் புறப்பட்டார் நாகனார் என்ற உழவர் ஒருவர். அவர் தொழிலால் உழவர். அறிவால் புலவர். ஆற்றல்மிக்க உள்ளமுடையவர். உண்மையை அஞ்சாது எடுத்துக்

கூறும் பேராண்மை அவரிட மிருந்தது. புறப்பட்டார். பற்பல இடையூறுகளை யெல்லாம் மனந்தளராது கடந்து சென்றார். மன்னனைக் கண்டார். கடல்மடை திறந்தது போல் வாய்திறந்து முழக்கம் செய்தார். மன்னன் மனத் திற் பதியுமாறு எடுத்துக் கூறினர். புலமை நலத்தால் சொல்ல வேண்டுவன யாவையும் சோர்வின்றித் திறம் படக் கூறினர்.

நளியிரு முந்நீர் ஏணி யாக
வளியிடை வழங்கா வானம் சூடிய
மண்திணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசு முழங்கு தானை மூவர் உள்ளும்
அரசுஎனப் படுவது நினதே பெரும!
அலங்கு கதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்து கவர்பு ஊட்டத்
தோடுகொள் வேலின் தோற்றம் போல
ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடுஎனப் படுவது நினதே அத்தை; ஆங்க
நாடுகெழு செல்வத்துப் பிடுகெழு வேந்தே!

என முதற்கண் அரசனைப் புகழ்ந்தார். முடி கெழு வேந் தர் மூவருள்ளும் சிறந்த ஆட்சியைப் பெற்றிருப்பவன் என்றும், வான் பொய்ப்பினும் தான் பொய்யாத வள மிகுந்த காவிரி நாடு தனிச் சிறப்புடையது என்றும் அவ் வளநாடு அம்மன்னனுக்கே உரியது என்றும் அதனல் அவன் செல்வமும் புகழும் நிரம்பப் பெற்றவன் என்றும் அவனைச் சிறப்பித்தார். அயர்ந்து கிடந்த மன்னவன்

விழிப்புற்ருன். தனது பெருமையையும் வளமையையும் எண்ணிப் பார்த்தான். வந்திருப்பவர் ஏதோ சொல்ல விருப்பதை யுணர்ந்தான். செவிகொடுத்துக் கேட்க விழைந்தான்.

மன்னன் உளமறிந்த புலவர் நாகனுர் (உழவப் புலவர்) மேலும் தொடர்ந்தார் :

நினவ கூறுவல் ; எனவ கேண்மதி !
அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதின் பதன்எளி யோர்ஈண்டு
உறைவேண்டு பொழுதில் பெயல் பெற்றோரே

என்ருர். அரசனிடம் அவனைப் பற்றிய சில செய்திகளைத் தாம் கூற வந்ததாகவும் அதனை அரசன் செவிமடுத்துக் கேட்க வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார். செவி கொடுத்துக் கேட்க முன்வந்ததற்குத் தம் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டார். குடிமக்கள் அரசனைக் காணவிரும்பும்போது காட்சி பெறுவது பெருமகிழ்ச்சி தரும் எனவும், துளிநீர் கிடைக்காதா என்று ஏங்குவோர் பெருமழை பெற்றது போன்ற மகிழ்ச்சி யுண்டாகும் எனவும் எடுத்துக் கூறினுர்.

ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பின் நடுவுநின்ருங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயில் மறைக் கொண்டன்ருே அன்றே வருந்திய
குடி மறைப் பதுவே கூர்வேல் வளவ

என்று கூறி அரசர்கள் உயர்த்திப் பிடிக்கும் வெண் கொற்றக் குடை வெயில் மறைப்பதற்காக அன்று;

குடிமக்களின் துன்பவெயிலைத் துடைத்து நிழல் தரவே யாகும் என உணர்த்தினர். அடுத்துக் கூறுங்கால்,

வெளிற்றுப் பனந்துணியின் வீற்று வீற்றுக் கிடப்பக்
களிற்றுக் கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தருஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே!
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கையல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகல் ஞாலம்
அதுநற்கு அறிந்தனை யாயின், நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின் நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே

என்று போரின் வெற்றிக்குக் காரணம் உழவர் வளம் எனவும், நாட்டில் எவ்வகை இன்னல்வரினும் மக்கள் மன்னனையே பழிக்கத் தொடங்குவர் எனவும், அதனை மன்னவன் நன்கறிய வேண்டும் எனவும் எடுத்துக் காட்டினர். அரசன் அதனை நன்கு அறிந்து அயலார் உரை கேட்டு ஆட்சி நடத்தாது, தானே கவனித்து உழவர்களைக் காப்பாற்றுவானாயின் பகைவரால் வணங்கப் பெறுவான் எனவும் சுட்டினர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய மன்னவனிடமிருந்த வரிகேட்கும் சிறுமையை எடுத்துக் காட்டினர் வெள்ளைக்குடியார். அரசன் உண்மை யுணர்ந்தான். அளவிலா மகிழ்ச்சிகொண்டான்..

நாகனுர்க்கு அறம் வழங்கினுன். அவரது பழஞ்செய்க் கடனைத் தள்ளுபடி செய்தான். அவரைப் போல வருந்திய அவ்வளவு மக்களுக்கும் அவரால் நன்மை கிடைத்தது. நாட்டின் தொல்லே ஒழிந்தது. மன்னவனும் சிறுமை நீங்கி மாண்புற்றுன்.

எவ்வளவு பெருமை வாய்ந்தவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்! நல்லறிவும் ஆற்றலும் கவி புனை யும் திறமையும் கொண்டவன். அவனிடமும் குறை யொன்று வந்ததற்குக் காரணம் வரிகேட்கும் சிறுமை புகுந்ததேயன்ருே? நொதுமலாளர் கூறியதை யவ்வாறே கேட்டு உண்மையறியாது வரிபெறத் துணிந்தது கொடு மையேயன்ருே?

இவ்வாறே பாண்டியன் அறிவுடை நம்பியின் ஆட்சி யிலும் ஒருமுறை நிகழ்ந்து விட்டது. புலவர் பிசிர் ஆந்தையார் அதனை எடுத்துக் கூறியிருக்கின்ருர். அவர் பாடலில் வரி வாங்கும் முறை எப்படியிருக்க வேண்டும் என்பது தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னுட் காகும்
நூறு செறுவாயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவனுகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்

யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே

—புறம் - 184.

என்பது அவர் பாடிய பாடல். "அரசன் நெறியில் நின்று வரிகொள்ள வேண்டும். முறை தவறிவிடக் கூடாது. யானை உண்பதற்கு வயலிலிருந்து நெல்லை அறுத்துப் போட வேண்டுமே ஒழிய யானையை வயலுக்குள் விட்டு விடலாகாது. அவ்வாறு விட்டால் அதன் வாய் பெறும் உணவைவிடக் காலால் அழிவது அதிகமாகும். அரசன் அறிவில் மெலிந்தவனாய் வரிகேட்கும் சிறுமையனாய் வாழ்தல் அவனுக்கும் கேடு நாட்டுக்கும் கேடு" என்பது இப் பாடலின் கருத்தாகும்.

சோழன் நலங்கிள்ளி என்ற மன்னவன் இவற்றை யெல்லாம் நன்குணர்ந்தவன். இயற்கையறிவுடன் செய்யுள் செய்யும் தனியறிவும் படைத்தவன். தான் கருதுவதை உலகுக்கெல்லாம், மற்றைய மன்னர்கட்கெல்லாம் அறிவுறுத்த விரும்பினான். குடிமக்களிடம் வரிகேட்பது அரசனுக்கு, அவன் பெருமைக்கு இழுக்கேயன்றிச் சிறப்பாகாது என்பதை எல்லோரும் அறியும் வண்ணம் எளிய இனிய நடையில் ஆற்றலுடன் உள்ளத்திற் புகுமாறு ஆணித்தரமாக அறைந்துள்ளான். அப்பாடல் தமிழ் உணர்ந்த அனைவரையும் தன்வயப் படுத்தும் மாண்புடைய பாடலாகும். படிப்போரும் கேட்போரும் மான உணர்ச்சி பெற்று நரம்பு முறுக்கேறி நிற்பர். அரசாள்வோர் குடிமக்களைக் காப்பாற்றும் சுமையைத் தாங்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். இன்றேல் — அச் சுமையை எளிதாகத் தாங்கும் திறம் இன்றேல் — ஆட்சி மேடையிலிருந்து இறங்கிவிட வேண்டும். ஆளத்

தெரிந்தவனுக்கு ஆட்சி சுமையாகாது. எளிதாய்க் கன மின்றி நெட்டி போல்—நீரில் மிதக்கும் நெட்டி போல்— இலேசாகவே இருக்கும். இவ்வுண்மையை எடுத்துக் கூறும் பாடலைக் காண்போம்.

முந்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழ விறல் தாயம்
எய்தினம் ஆயின் எய்தினம் சிறப்பு எனக்
குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின் அது சிறந்தன்று மன்னே !
மண்டுஅமர்ப் பரிக்கும் மதனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவன் ஆயின் ஆழ்நீர்
அறுகயம் மருங்கின் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தால் அம்ம! தானே மையற்று
விசும்புற ஓங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே

— புறம் - 75.

இப்பாடலில் காவலனின் கவிநலம் காண வேண்டும். அப்போதுதான் அவனது பெருமை நமக்கு விளங்கும். உயர்ந்த உள்ளம் நமக்குப் புலனாகும். வழிவழி வந்த சொத்து — செல்வம் — அரசாட்சி ஆகியவற்றால் ஒரு பெருமையுமில்லை. அதனைக் கட்டிக் காத்து அன்பு பெருக்கி இன்பமூட்டி வாழத் தெரியாதவன் மதியற்ற வன். மதிப்பற்றவன். அவனை யாரும் மதியார். இக் கருத்தே இப்பாடலின் முன்னுரைக் கருத்தாகும். வயது வந்தோர் இன்றல்ல, என்றுமே இறந்துவிடுகின்றனர்.

கூற்றம் அழைத்துச் செல்ல உயிர் பிரிந்துவிடுகின்றது. இறந்தோரின் மகன் அவர் பெற்ற உரிமைக்கு அவர் இறந்ததனுல் இறந்தபின் தான் உரிமை பெறுகிருன். அவனும் வயது முதிர்கின்ருன். கூற்றத்தின் வாய்க்கு இரையாகிவிடுகின்ருன். அவன்மகன் ஆட்சி பெறுகின்ருன். பின்னர் அவன்மகன் பெறுகின்ருன். இதிலே என்ன சிறப்பு இருக்கின்றது என்று கேட்கிருன் சோழன் நலங்கிள்ளி. ஆம்! புலவன் நலங்கிள்ளி.

எனவே அரசு பெறுதல் பெரிதன்று. சிறப்பன்று. அதனை ஆண்மையுடன் காக்க வேண்டும். "ஐயோ! நான் எப்படியாள்வேன் இப் பேரரசை! எனக்குப் பொருள் மிகுதியும் வேண்டுமே? என்ன செய்வேன்? குடிமக்களே! நீங்கள் எல்லோரும் வரி கொடுங்கள்! வரி கொடுங்கள்! தயவு செய்து வரி கொடுங்கள்! உங்கள் வரியின்றி ஆட்சி ஏது? கெஞ்சிக் கேட்கின்றேன் உதவுங்கள்!" என்றெரு மன்னன் இரக்கலாமா? அவன் மன்னன் எனப்படான். "சிறியோன்" எனத் தக்கவன். ஏன்? "நாம் உரிமைத் தாயம் பெற்ருேம்" எனத்தருக்கி, ஆனுல் ஆண்மையின்றி, மக்களை நோக்கிக் குடிபுரவு (குடிமக்களைப் பாதுகாத்தற்கு வரி) இரப்பானுயின் அவனுல் ஆட்சி நடத்த முடியாது; முடியவே முடியாது. அவனுக்கு ஆட்சி மிக மிகக் கனமாக — இமயம் போல் பாரமுடையதாக — இருக்கும் என்பது நலங்கிள்ளியின் கருத்து. நலங்கிள்ளி இத்தகையோர் நிலைகண்டு இரங்கி, 'ஐயோ பாவம்' என உருகுகின்ருன். அதனை யுணர்த்துவதுதான் "மன்னே" என்ற, சொல்லின் பணி. "சிறியோன் பெறின் அது சிறந்தன்று" என்புழிப் பழமை நோக்கிப் பொருள்கொள்ள வேண்டும். சிறந்தன்று = சிறந்தது = கனமானது என்றுணர்ந்தால் இப்பாடல் பயன்தரும். சிறந்தன்று என்பதில் "அன்"

சாரியை. இது பழைய வழக்கு. "அன்று" என்னும் எதிர்மறையாக இதனைக் கொண்டுவிடக் கூடாது. "ஈ யென இரத்தல் இழிந்தன்று" என்னும் இடத்திலும் இப்படித்தான் கொள்ள வேண்டும்.

ஆட்சியாளன் ஆண்மைமிக்கவன் ஆயின் அவனுக்கு ஆட்சி எளிதாகும். கனமாக இருக்காது. நொய்தாகவே இருக்கும். தண்ணீரில் மிதக்கும் நெட்டி போல் கனமின்றி இருக்கும். அவன் குடை விண்ணளவு சென்று உலகெங்கும் இன்பம்தரும். அவன் பெற்ற அரசுகெழுதிரு என்றென்றும் எல்லோராலும் போற்றப்படும். இவற்றையெல்லாம் எடுத்துக்கூறும் இம் மன்னனின் நுண்மாண்நுழை புலத்தை என்னென்பது? சிறுகுழந்தையும் உணர்ந்து கொள்ளும் வண்ணம் உவமை கூறியிருப்பதும் கோழையும் ஆண்மை கொள்ளும் வண்ணம் உணர்ச்சியூட்டியிருப்பதும் இப்பாடலுக்கும், இக்கவிதையினை யாத்த மன்னனுக்கும் இறவாப் புகழ் தந்துள்ளன.

10. வள்ளல் வாழ்க!

"யாதும் ஊரே யாவருங்கேளிர்" என்பது நம் குறிக்கோள். எந் நாட்டவரும் எம்மரபினரும் நம்மவரே என்ற கொள்கையை உலகம் முழுதும் பரப்பத் துணிந் தவர் பழந்தமிழ்ப் பெரியோர். உயர்ந்தோர் இழிந்தோர் என்ற வேறுபாட்டை அறவே நீக்கி ஒன்றுபடுத்த விரும் பினர். ஆனல் உலகின் இயல்பு வேருக இருந்தது. சிலர் வலியராகவும் பலர் எளியராகவும் இருந்தனர். வலிய ரையும் எளியரையும் எவ்வாறு ஒன்ருக்குவது என்பது எளிதில் இயல்வதாகவில்லை. பொருள் உடையோர் வள முடையோராகவும் அஃதற்ருர் வறுமையுடையராகவும் வேறுபட்டு நின்றனர். உடையோர் இல்லாதவரை அடக் கவும் ஒடுக்கவும் முற்பட்டனர். இல்லாதவர் எவ்வாறே னும் வளம் பெற வேண்டும் என எண்ணி எண்ணிப் பார்த்தனர். பொருள் உடைமையும் பொருள் இன்மை யும் இச்சிக்கலைத் தீர்த்துவைக்க முடியவில்லை. அறிவுடை மையும் பண்புடைமையும் ஒன்று கூட்டி முடிவொன்று செய்தனர்.

"ஈயென இரத்தல் இழிந்தன்று" என்று கூறினர். இல்லாதவன் தனக்கு ஒன்றும் இல்லையே என்றெண்ணி மற்றவனிடம் சென்று "ஈ" என்று இரத்தல் (யாசித்தல்) இழிவுடையதாகும். அவன் இல்லாமையால் வாடுவது இழிவேயெனினும் அதற்காக இரத்தல் மிகவும் இழிந்தது;

கொடியது; இன்னாதது. இவ்வாறு கூறி இரப்புத் தொழிலைத் தடுத்துநிறுத்தினர். இரப்பதும் ஒரு தொழிலா எனக் கடிந்து கூறினர். இல்லாதவனுக்கு இவ்வாறு கொள்கை வகுத்துக் கொடுத்துவிட்டு உடையாரை நோக்கி வேறு கூறினர். உடையார் அனைவரும் இல்லா தாருக்குத் தாமே முன்வந்து கொடுக்க வேண்டும். கொடுத்தல் சிறந்தது. அஃது உடையார் கடமையாகும். "கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று" என்பதை வற்புறுத்தினர். இல்லாதவர் இரப்பது தவறு. உடை யவர் கொடாமையும் தவறு. எனவே இல்லாதவர் கண் கொண்டு நோக்கும் இடத்து அவர்கள் மானம் உடைய ராய் வாழ வேண்டும் எனவும், பொருள் பெற்ற செல்வர் கண்கொண்டு நோக்கும் இடத்து அவர்கள் இல்லையென் னாது கொடுக்கும் கடமையுடையராய் வாழ வேண்டும் எனவும் வற்புறுத்தினர்.

இல்லாத ஒருவனைச் செல்வன் ஒருவன் காணநேரின் அவன் கேட்குமுன்னே தானாகவே முன்வந்து கொடுக்க வேண்டும். "ஐயோ! இவன் வறியனாய் வாடுகின்றனனே! இவன் தன்மானம் விட்டு எவ்வாறு பிறரை அண்மி வாய் திறந்து, 'ஈ' யெனக் கேட்பான்? இவனும் என்னைப் போன்ற மனிதன்தானே? யானே சென்று வலிந்து முன்னின்று உதவ வேண்டாமா?" என எண்ணுகின்றது பண்புடைய செல்வன் உள்ளம். இது மிக உயர்ந்த பண்பு. இந்நிலையில் வறியவனும் பண்புடையனாயின் என்ன எண் ணுவான்? "எனக்குள்ளது போதும். என் முயற்சியால் பெற்ற பொருளே எனக்குரியது. பிறர் உழைப்பால் பெறும் பொருள் எனக்கு வேண்டாததொன்று. எனக்கு வேண்டியதை யானே உழைத்துப் பெற வேண்டும். யாரே னும் என் நிலைகண்டு இரங்கி முன்வந்து உதவினும்

என் நிலைக்குச் சிறப்பன்று என யான் மறுத்துவிட வேண்டும். பண்புடனும் பணிவுடனும் மறுத்துவிட வேண்டும்" என்றுதான் எண்ணுவான். இவ்விருபாலார் மனநிலைகளும் நன்கு விளங்கினுல்தான்,

ஈயென இரத்தல் இழிந்தன்று ; அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று.
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று ; அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று

— புறம் - 204.

என்ற அடிகளின் பொருளைப் போற்ற முடியும்.

'ஏற்பது இகழ்ச்சி,' 'ஐயம் இட்டுண்' என்ற இரண்டு முரண்பட்ட கருத்துக்களையும் பெரியோர் கூறியதன் உண்மைக் கொள்கை எளிதில் புலனுகாது. வாழ்வில் உயர்ந்தோர், வ்ளம் பெருகியோர் தாழ்ந்து உதவ வேண்டும். வளம் குன்றியோர் உயர்ந்து நோக்க வேண்டும்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு

என்ற பொய்யாமொழியின் உண்மையினை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போது வேற்றுமை இல்லையாகும். ஒற்றுமை உயர்ந்தோங்கும். இரவு, இரவச்சம் என்ற இரண்டு அதிகாரங்களையும் வள்ளுவர் அடுத்தடுத்து வைத்துள்ளதன் நுணுக்கத்தை உணர வேண்டும்.

இந்த நுணுக்கத்தை உணர்ந்தவர் எல்லோரும் ஈகையை விரும்பி மகிழ்ந்தனர். வள்ளலாய் விளங்கினர். பெருஞ்செல்வராய் இல்லாத காலத்தும் இருப்பதை வாரி

வழங்கினர். செல்வம் என்பதற்கே அவர்கள் கொடையைத்தான் பொருளாகக் கொண்டனர். செல்வத்துப் பயன் தான் மட்டும் துய்ப்பது அன்று. அஃது தவறு. அம்மம்ம! பெருங்கொடுமையுமாகும். மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கிரர் என்ற பெரியார் இஃதுணர்ந்து கூசாது எடுத்துரைத்தார். காரணத்தோடு உணர்த்திச் சென்ருர்.

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
ஒண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.

— புறம் - 189

உலகமெல்லாம் தன் ஒரு குடைக் கீழ்வைத்து ஆளும் மன்னர் மன்னனும் இரவு பகல் அறுபது நாழிகையும் உணவுக்காக அல்லற்பட்டு வேட்டையாடித் திரிகின்ற ஏழை வேடுவனும் — இருவரும் மனிதரே. இருவரும் உண்பதுவும் உடுப்பதுவும் ஒரு சிறிய அளவேயாகும். இவன் உண்பதும் அவன் உண்பதும் ஏறத்தாழ ஓரளவே. உண்பது நாழி, அதுபோல உடுப்பவையும் இரண்டே. இதனை எண்ணிப் பார்த்தால் மலைபோலக் குவிந்து கிடக்கும் உலகு நிறைந்த செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்கும் பண்பு தானுகவே யுண்டாகும் அல்லவா? இதனை நினைந்து தான் நக்கிரனுர் இப்பாடலைக் கலங்கரை விளக்கமாக அமைத்துச் சென்றிருக்கின்ருர்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

என்ற திருக்குறளும் அவ்வாறு எழுந்ததுதான்.

செல்வத்துப் பயனே ஈதல்; ஈதல் ஒன்றுதான். எனவே ஈதல் பெருஞ் சிறப்புடையது. யாருக்கு ஈய வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கின்றனர் நம் முன்னோர். "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என வரையறுத்துச் சென்றனர் அல்லரோ வள்ளுவர்? வறியாரும் மானமுடையராயின் இரக்க முற்படார். எனவே குறிப்பறிந்து கொடுக்கும் கொள்கை மலர வேண்டும். 'இலன்' என்னும் துன்பச் சொல்லைக் கேட்கு முன்னரே சென்று சென்று வழங்க வேண்டும். செல்வத்தின் பயனை இப்படித்தானே பெற முடியும்?

"ஐயோ! என் செல்வமெல்லாம் நிலையாது என்கின்றனரே! என்ன செய்வேன்? எங்கே வைத்துப் பாதுகாப்பேன்?" என்று அறிவு கலங்கி மயங்கி வருந்துவோர்க்குச் செல்வத்துப் பயன் ஈகை என்றால் விளங்காது; விளங்கவே விளங்காது. ஏன்? அவர்கள் கருத்தெல்லாம் செல்வத்தைக் கொடுக்க வேண்டும் என்பதன்று; காப்பாற்ற வேண்டும் என்பது. அத்தகையோரின் உளக்கூறுபாட்டையும் (*Psychology*) உணர்ந்து வள்ளுவர் அவர்களுக்கேற்பக் கூறுவது அவர்தம் நுண்மாண் நுழை புலத்துக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும். அவர்களை வள்ளுவர், கொடுங்கள் என்று அணுகுவாரா? "சேர்த்து வையுங்கள்! திரட்டி வையுங்கள். அழியாது காப்பாற்றி வையுங்கள்!" என்றே அவர்களுக்கேற்பக் கூறுகிறார். அப்போது அவர்கள் ஆர்வத்துடன் கேட்பார்கள். "எங்கே

சேர்த்து வைப்பது? எவ்விடம் சேமமுடையது?" என்று கேட்பர். நல்ல இடம் காட்டுவதாக வள்ளுவர் அவர்களை வழிக்குக் கொண்டு வருகின்ருர். அவர் கூறும் சேம நிலையம் எது?

அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி

என்பதுவே வள்ளுவர் கூறும் பாதுகாப்புநிலையம்.

" நல்லாறு எனினும் கொளல் தீது மேல் உலகம் இல் லெனினும் ஈதலே நன்று" என்று துணிந்து கூறும் செந் நாப்புலவரின் திறமையை வியவாதார் யார்? உலகப் புலவர் என்ற பெருமை இவரினும் வேறு எவர்க்கு உரித்தாகும்?

இப்படியாகக் "கொடுக்க வேண்டும் கொடுக்க வேண் டும்" என்ற ஆணை செல்வருக்கே உரியதாகும் என்பதனை யும், "கொள்ள வேண்டாம் கொள்ள வேண்டாம்" என்ற பாடம் வறியார்க்கே உரியதாகும் என்பதனையும் மறந்து விடக் கூடாது. கொடுக்கின்றவர் இருக்கும்போது " நமக் கென்ன குறை?" என்று சோம்பி மடிந்துவிடக் கூடாது. அதே சமயத்தில் ஒரே இடத்தில் பொருள் குவிந்து மண்டி விடவும் கூடாது. இவ்வுயர்ந்த கொள்கையை உணர்ந் தால் உலகில் ஈகையிருக்கும்; இரவு மிகாது. உள்ளமிருக் கும்; ஆற்றல் அழியாது. குணம் மிகும்; குற்றம் குறை யும். பரிசிலரும் தாம் பெற்றவற்றைத் தமக்கென வைத் துக் கொள்ளாது வாரி வாரி வழங்கி மீட்டும் இரவலரான வரலாறு நம் நாட்டின் தனிச் சிறப்பாகும்.

இதனை உணர்ந்துதான் உலகம் என்றென்றும் வள்ளல்களைப் போற்றி வந்துள்ளது. புகழ் என்பது

கொடையினுல் வருவது என்பதையும் உலகு நன்குணர்ந் துள்ளது. "ஈதல் இசைபட வாழ்தல்" என்று தெய்வப் புலவர் உணர்த்தியதும் இதனையே எடுத்துக் காட்டுவ தாகும். "இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்" என்பதும் அவர்தம் நல்லுரையே யாகும்.

கொடைவளம் படைத்த குரிசில்கள் தமிழகத்தே எவ்வளவோ பேர் இருந்துள்ளனர். எண்ணற்ற வள்ளல் களைப் படைத்துப் புகழ்பெற்றது நந்தமிழ் நாடு. எத்துணை எத்துணை வகையால் அவ்வள்ளல்கள் சிறப்புற்றுக் கொடையளித்தனர் என்பதை அறிந்து மகிழ்வதே தனிப் பெருஞ்சுவையாகும். ஆறுனது வெள்ளப்பெருக்கில் நீர் தந்துதவுதல் மட்டுமன்றி வறண்ட கோடையிலும் ஊற் ருல் வளம் சுரக்கும். அஃதே போல் வள்ளல்கள் தம்மகத்து வளம் சுருங்கிய காலத்தும் இல்லையென்னது எவ்வாறே னும் ஈவர். இயன்றது எதுவாயினும்—உயிரேயாயினும்— தயங்காது ஈவர். எண்ணிப் பார்த்தும் அளந்து பார்த் தும் ஈயும் அளவு தயங்கமாட்டார். நாளை பார்ப்போம் என்று தவணை சொல்லார். தலை கொடுக்க முன்வந்த குமணன் புகழை யார்தாம் அறியார்? நல்ல குடிப் பிறந் தவர்கள் மிகவும் நல்கூர்ந்து விடுவாராயினும் இசைந்து இல்லை என மாட்டார். கேட்குமுன்னரே குறிப்பறிந்து கொடுத்துக் கொடுத்துப் பயின்றுவிட்ட காரணத்தால் தானே முல்லைக்கொடிக்குத் தேர் வழங்கினுன் பாரி.

> பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை
> நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
> கறங்கு மணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
> பரந்து ஓங்கு சிறப்பின் பாரி

— புறம் - 200.

முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே.

— புறம் - 110.

பறம்பு பாடின ரதுவே, அறம்பூண்டு
பாரியும் பரிசிலர் இரப்பின்
வாரேன் என்னுன் அவர்வரை யன்னே.

— புறம் - 108.

இவ்வாறெல்லாம் புகழப்படும் கொடைவள்ளல் பாரி எண்ணிப்பார்த்தா ஈந்தான் ? பாத்திரம் அறிந்தா கொடுத்தான்? முறையின்றியும் தகுதி பாராதும் கொடுத்தனன். அறிவு மறந்து, தன்னை மறந்து, உணர்ச்சி மிகுந்து கொடுத்துவிட்டான். பகுத்தறிவுக்குப் பொருந்தாத வகையிலும் எல்லை கடந்து கொடுத்தான். படைமடம் படாது கொடைமடம் பட்டனன் பாரி. இதுவே அவனது தனிச்சிறப்பு.

பேகன் என்ருெரு வள்ளல். அவன் வரலாற்றைக் காணின் அவன் தன் குடும்ப வாழ்வையே புறக்கணித்து வாழ்ந்து தவறுடையவனுய்ப் பின்னர்த் திருந்தினுன் என்பதறியலாம். அத்தகு பெரியோன் கொடை வளத்தை எப்படிக் கற்றனன் ? கானமயிலுக்குப் போர்வை வழங்கி மகிழ்ந்தான் பேகன். மயில் அவனிடம் போர்வை கேட்டதா ? அதற்குப் போர்வைதான் எற்றுக்கு ? வண்ண மழைமேகம் கண்டு மகிழ்ந்தாடும் மயில் குளிரால் வருந்துவதாகப் பேகன் கண்ணுக்குத் தோன்றியது. சற்றும்

தாழவில்லை. சிந்திக்கவில்லை. சிந்திக்க நேரம் ஏது? தன்னை மறந்தான், தன் குளிரை மறந்தான். தன்மீது போர்த்துக்கொண் டிருந்த போர்வையை எடுத்து மயிலுக்கு வீசி மன மகிழ்ந்தான். இவனும் கொடைமடம் உடையவன் என்பர் புலவர்.

அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே.

— புறம் - 142.

உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை ஆயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர்,
வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே.

— புறம் - 141.

இவ்வாறு புகழ்பெற்று விளங்கிய பேகனின் கொடை நலத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் புலனாகும் வள்ளல்களை எவ்வளவு புகழினும் தகும் என்பது.

ஆய் அண்டிரன் என்பான் ஈகை புரிந்து புகழ் கொண்ட மற்றொருவன். அவனைப் பற்றிப் புலவர் ஒருவர்

கூறுகின்ருர். அவன் அறம் செய்தபோது கைம்மாறு கருதாது செய்து வந்தான் என்பதை அவர் கூற்ருல் அறிகின்ருேம்.

> இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
> அறவிலை வணிகன் ஆய்அலன்.
>
> —புறம் - 134.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர் தம் இவ்வடிகள் உலகுள்ளளவும் 'ஆயின்' புகழைப் பறை சாற்றி நிற்கும். யானை யானையாக வழங்கினவன் ஆய் என்பர்.

உறந்தைப்பதியினும் வஞ்சிமா நகரினும் மதுரை மூதூரினும் மிக்க வளத்தையெல்லாம் நல்குவர் வள்ளல்கள் என்பதனைப் பத்துப்பாட்டு எடுத்துக்காட்டுகின்றது. ஆற்றுப்படை யென்ருெரு இலக்கிய மரபு தோன்றியதே வள்ளல் புகழ் பாடுவதற்காகும் என்பதை நாம் இங்கே நினைவு கூர்தல் வேண்டும். வண்மையிற் சிறந்தார் அனைவரும் வீரத்தாலும் சிறந்திருந்தனர் என்பதையும் அவ்வீரமாகிய உறுதியின்றேல் வழங்கும் ஆற்றல் கைவரப் பெருது என்பதையும் உணர வேண்டும்.

வள்ளல்களாய் விளங்கியோரைப் புலவர்களும் பரிசிலர்களும் பாடியதாக எத்துணையோ கண்டோம். இது இயற்கை. ஆனுல் வள்ளல் ஒருவனை அவனினும் ஆற்றலால் உயர்ந்திருந்த மன்னன் போற்றிப்பாடுவது அரிது. புதுமையினும் புதுமைதான். ஆனுல் முற்றிலும் உண்மை.

சிறுகுடி என்பதோர் சிற்றூருக்குத் தலைவனுய் ஒருவன் வாழ்ந்து வந்தனன். அவன் பெயர் பண்ணன். சிறுகுடி கிழான் பண்ணன் என்பர் அவனை. அவனது நெல்லித்

தோட்டமும் தீஞ்சுவை நீர் அளிக்கும் கிணறும் இலக்கியத்தில் இடம் பெற்று இறவாத் தன்மையடைந்துள்ளன எனின் பண்ணனது புகழை இயம்புதல் எளிதாமோ? மதுரை அளக்கர் ஞாழலார் மகனூர் மள்ளனூர் என்ற புலவர் இப்பண்ணனைப் பற்றிப் பாடிய பாடலில் ஓரிரு அடிகளை மட்டும் இங்குச் சுட்டுதல் இயைபுடைத்து.

> இடுக்கண் இரியல் போக உடைய
> கொடுத்தோன் ! எந்தை ! கொடைமேந் தோன்றல்
>
> — புறம் - 388.

என்று அப்புலவர் பண்ணனின் வண்மையை எடுத்துக் காட்டி அவனைப் பாடாதும் புகழாதும் இருத்தல் தம்மால் இயலாததொன்று என்றும் கூறியுள்ளனரே.

இத்தகு புகழ்வாய்ந்த இப்பண்ணன் அரசாலும் ஆட்சியாலும் மிகப் பெரியன் எனக் கொள்ளுதற்கில்லை. இவன் காலத்தில் இவனினும் மிக்க அரசுடையார் பலர் இருந்திருக்கின்றனர். இவன் குறுநில மன்னரிலும் சிறு நிலப்பரப்பினை யுடையவனே. எனினும், முடியுடை மூவேந்தரினும் கொடை வளம் மிக்கவன் என அறிகின்றோம். இவனது இயற்பெயரை மறந்து சிறப்புப் பெயராலேயே இவனை வழங்கலாயினர். பண்ணன் என்பது இவனது இயற்பெயர். இவன் பெற்ற சிறப்புப் பெயர் யாது தெரியுமோ? ‘பசிப்பிணி மருத்துவன்’ — பசியாகிய நோயைப் போக்கும் மருந்தை யளித்து மகிழும் வள்ளல் என்பதேயாகும்.

இவனது இப்பெரும் புகழைப் புலவரே யன்றி இவனினும் மிக்க ஆற்றலும் அரசும் உடைய சோழ மன்னனும் போற்றியிருக்கின்றான். அச்சோழ மன்னன் பெயர்

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் என்ப தாகும். இச்சோழன், தானும் பேராற்றலும் பெருவள மும் உடையன் எனினும் பண்ணனது பண்பு கண்டு அவ னைப் பாராட்டிப் புகழ்கின்றான். அவன் புகழும் முறை இரண்டு பெரிய உண்மைகளை நமக்கு எடுத்துக் காட்டு கின்றது. ஒன்று, அவன் கவிதை வளம் உடையன் என்பது. இரண்டு, அவன் பண்பு சிறந்து வழங்குபவன் என்பது.

அவன் பாடியுள்ள பாடல் இப்பேருண்மைகளைத் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது.

யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய !
பாணர் காண்கிவன் கடும்பினது இடும்பை
யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன
ஊண்ஒலி அரவம் தானும் கேட்கும்
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே.

— புறம் - 173.

பண்ணனின் சிறப்பறிந்த மன்னர் மன்னனின் உணர்ச்சி பொங்குகின்றது. ஊற்றெனச் சுரக்கின்றது. கவிதை பிறக் கின்றது. மற்றவையெல்லாம் பிறகு பார்த்துக்கொள் வோம். முதலிலே தோன்றுவது பண்ணன் நெடுங்காலம்

வாழ வேண்டுமே என்ற உணர்வுதான். எவ்வாறு நெடுங் காலம் வாழ்வான்? அவனும் மனிதன்தானே! கூற்றுவனுக்கு இலக்காக ஒருநாள் மடிய வேண்டியவன்தானே! கூற்றுவனை வேண்டுகின்றான் கொற்றவன் குளமுற்றத்துத்துஞ்சிய குரிசில். தனது ஆயுளையும் எடுத்துக் கொடுத்துப் பண்ணனை நெடுநாள் வாழவைக்குமாறு வேண்டுகின்றான். "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!" எவ்வளவு பெரிய நல்லுள்ளம்! செல்வ வாழ்விற் புரளும் மன்னர் மன்னன் இதனைச் செப்புகின்றனன். அடுத்த வேளைக்கு என் செய்வேன் என ஏங்கும் ஏழை ஒருவன் இதனைக் கூறவில்லை. வாழ்வை வெறுத்தொதுக்கும் வளமிலான் கூறுவது அன்று ஈது. பண்ணனின் பண்புக்கேற்றபடி பாராட்டும் புலமையைக் காண்கின்றோம் சோழ வேந்தனிடம். காவலன்பால் கவிதை வளம் சிறந்து நிற்பது கண்டு வியப்படைகின்றோம். புள் இமிழும் அரவத்தையும் முட்டை எடுத்துச் செல்லும் எறும்பின் செயலையும் உவமை காட்டி எவ்வளவு அழகாகக் கவிபாடிக் கொடுத்துவிட்டான் காவலன். தன்னையும் ஓர் இரவலனாக வைத்து மதித்தால்தான் வள்ளல் பண்ணனது பெருமையை உணர்த்தக்கூடும் என எண்ணிவிட்டனன் மன்னன். தன்னிலைமறந்து தன்னை எளியனாக வைத்து நோக்குகின்றான். அந்த நோக்கிற்குப் பண்ணன் வெறும் பண்ணனாகவோ வள்ளலாகவோ தோன்றிலன். 'பசிப்பிணி மருத்துவன்' ஆகக் காட்சியளிக்கின்றான். 'பசிப்பிணி மருத்துவன்' என்ற சொற்றொடர்தான் எவ்வளவு ஆழம்வாய்ந்து சிறந்து விளங்குகின்றது! எளிதாகவும் பொருள்உணர்த்துகின்றது! இனிதாகக் காதில் நுழைந்து இன்பத்தேன் நிறைக்கின்றது! இவ்வளவும் மன்னவனின் கவிதையுள்ளத்தின் மாட்சி யென்றால் முற்றிலும் உண்மையாகும்.

இதனினும் சிறப்பாக யார்தாம் பண்ணனின் இயற்கையை உள்ளக்கிழியில் உருவாக்க வல்லவர் ?

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் புலமுற்றிய சிறப்புடைய புலவனுய் என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். தன் ஆயுளையும் வள்ளல் பண்ணனுக்கு வழங்க முன்வந்த அவனுக்கும் இறப்புண்டோ ?

11. மனைவியை இழந்தேன் !

'இல்லறமல்லது நல்லறமன்று' என்றனர் ஔவை யார். வாழ்க்கை வகைகளை நன்கு ஆராய்ந்த பெரியோர் வாழ்க்கையின்கண் மேற்கொள்ளத்தக்க அறத்தினைப் பொதுவாக இரு கூறுபடுத்திப் பேசுவர். இல்லறம் துறவறம் என்ற அவ்விருவகையறமும் எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிவன. பொது அறம் கூறும் திருக்குறள் இல்லறம் துறவறம் இரண்டையுமே அறத்துப்பாலில் அறமாகக் கூறியுள்ளது. அத்திருக்குறள் யாத்த வள்ளுவரின் உள்ளத்தைக் கூர்ந்து பார்ப்போமாயின், அவர் இல்லறத்தையே சிறப்பாக விரும்பிக் கூறினர் என்பது புலனாகும்.

இல்லறம் கொள்ளும் இல்வாழ்வான்தான் வாழ்க்கையின் மற்றைப் பிரிவுகளைச் சார்ந்த மக்களுக்கெல்லாம் துணையாகின்றான். இல்லறம் பேணுபவனே அவரவர் நெறிநின்று பயனுற வாழ்வதற்குப் பெரிதும் துணையாவான். இல்லறத்தின் இறுதிப்பயன் 'வீடு' என்பது உண்மையாயின், துறவறம் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாதது அன்று. துறவற வாழ்வு உலகியல் இன்பங்களை வெறுத்து உடல் நலம் சிறிதும் கருதாது வாட்டி விரதங் காத்துக்கொள்வது ஆகலின் துன்பம் முதிர்ந்தது. அவ்வாறு துன்பங்களையெல்லாம் ஏற்றுக்

கொண்டு இறுதியில் அடையப்போவது யாது? வீடுபேறு தான்! அதனை இல்லறத்திநின்றும் பெற்றுக்கொள்ளவும் இயலுமே! அவ்வாறாயின் இன்ப நுகர்ச்சிக்கு உரிய இல் வாழ்வை விட்டு விட்டுக் கொன்னே துறவறம் மேற் கொண்டு துன்பப்படுவானேன்! பருத்திச் செடி, ஆடை ஆடையாய்ப் பயன் தருமானால் பருத்திக் காயையும் விதையையும் பற்றிய கவலை வேண்டியதில்லையே.

மேலும், இல்வாழ்வான் செய்யும் அளவிற்குத் துற வறத்தான் ஒருவன் உலகுக்கு நேரிடையாக நன்மை செய்ய முடியாது. துறவி தன்னைப்பற்றிய துன்பங்களைத் தாங்கும் அவ்வளவில்தான் நோன்மையுடையவன் ஆகின்றான். ஆனால் இல்லறத்தானோ தன் துன்பம், தன் குடும்பச் சுமை, மற்றவர்களின் இன்னல் ஆகிய அனைத்தையும் தாங்கும் ஆற்றல் பெற்றுள்ளான். அதனால் பொறுமை என்னும் அளவுகோல் கொண்டு நோக்கினும் இல்லறத்தான் சிறப்பு மிக்கவனாகப் பொறுமையிற் பெரியனாகத் தோன்றுகின்றனன். அழியாப் பெருஞ்செல்வமாகிய வீட்டின்பத்தை அடைய முயல்வார் பல்வகையினருள்ளும் இல்லறத்தானே தலையாய சிறப்புடையவன் என்பதும் அறிஞர் ஒப்புக்கொண்ட கொள்கையாகும்.

> அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
> போஒய்ப் பெறுவது எவன்?
>
> இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
> முயல்வாருள் எல்லாம் தலை.
>
> ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
> நோற்பாரின் நோன்மை யுடைத்து.
>
> அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

— குறள் 46 - 50.

இக்குறட்பாக்கள் கூறுவனவும் இல்லறத்தின் இணையற்ற சிறப்பேயன்றோ ?

இல்லறம் என்பது யாது ? ஒத்த தலைவனும் தலைவியும் ஒருவர்க்கொருவர் துணையாய் நின்று அறவழியிற் பொருளீட்டி அறம் செய்து இன்பம் பெறும் வாழ்வேயாகும். வெறும் இன்பம் மட்டுமே இல்வாழ்வின் குறிக்கோள் அன்று. அவ்வாறாயின் அதனை 'இல்லின்பம்' என்றே குறித்திருப்பர். இல்லறம் என்று பெயர் வழங்கியிரார். அறம் இன்றி இல்வாழ்வு இல்லை. இல்வாழ்க்கையின்றி அறம் சிறப்பதில்லை. இல்வாழ்வின் பயன் இன்பமும் அறமும் எனக் கூறப்படினும் அறமே தலையாய பயன் ஆகும். ஒருவன் இல்வாழ்வு மதிக்கப்படுவது அவனது இன்பத்தைக்கொண்டு அன்று; அவன் விளைத்த அறத்தைக்கொண்டேயாகும் என்பர்.

கோவலனைப் பிரிந்து வாடிய கண்ணகி மற்றெவற்றையும் குறித்து அதிகம் கவலை கொண்டிலள். அறம் செய்ய இயலாத நிலையினை எண்ணியே மிகவும் வருந்தினள். அதனை அவள் மதுரையில் தன் கணவனிடம் சாற்றுவதாக இளங்கோவடிகள் காப்பியம் செய்துள்ளார்.

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

— சிலப். கொலைக்களக் காதை . 71 - 73.

என்று கண்ணகி தன்னைப் பற்றிக் கணவனிடம் சொல்லிக் கொள்ளுகின்றாள்.

எனவே, அறமாகிய பயனை உருவாக்குவது இல்லறம் என்பது போதரும். அந்த இல்லறத்துக்குப் பண்பாக விளங்குவது அன்பு. அன்பு இன்றேல் இல்வாழ்க்கையில்லை. பொதுவாக வாழ்க்கையே அன்பின்றி இல்லை எனலாம். அன்பைத் தன் உயிர்ப்பண்பாகக் கொண்டுள்ள இல் வாழ்க்கையில் தலைவன் தலைவியர் இடையே இருந்து வரும் பிரிக்கமுடியாத தொடர்பாலும் உறவாலும் இதனை அறிந்துகொள்ளலாம்.

சீதை இராவணனுற் சிறைப்படுத்தப்பட்டாள். தனிமையாய் அசோகவனத்தில் வாடுகின்றபொழுதும் தன் கணவன் இராமன் நலத்தை எண்ணுகின்றனளே ஒழியத் தன்னைப் பற்றியோ தன்னலம் பற்றியோ எண்ணவில்லை. இதுதான் கம்பன் — தமிழ்க் கம்பன் — படைத்துக் கொடுத்த சீதையின் தனிச் சிறப்பு. "அருந்தும் மெல்லடகு ஆர் இட அருந்தும் ?" என்றும், " விருந்து வந்தபோது என்னுறுமோ ?" என்றும் தன் கணவனைப் பற்றியே எண்ணி நைகின்றாள். இதுதான் அன்பு. தலையாய அன்பு. " யான் வனம் சென்று மீள்வேன். நீ இங்கிரு. வனம் கொடிய பாலையாய்ச் சுடும்" என்று அன்புப் பெருக்கினல் இராமன் கூறுகின்றான். உடனே சீதை கேட்கின்றாள் " நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு ?" என்று. இதுவும் அன்பின் விளைவுதானே !

மாதவியின் உறவை விலக்கி வந்த கோவலன் கண்ணகியிடம் வந்து சொல்வதையும் கண்ணகி அதற்குக் கூறிய மறுமொழியையும் பார்மின்! அன்பின் ஆற்றல் நன்கு புலனுகும்.

சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
இலம் பாடு நாணுத்தரும்

என்று அன்பால் கோவலன் கூறுகின்றான். கண்ணகியும் தன் வருத்தமும் துன்பமும் கருதாமல், 'நலங்கேழ் முறுவல் நகைமுகம்' காட்டுகின்றாள். தன்னிடம் இருக்கும் சிலம்பை எடுத்துக்கொள்ளுமாறும் சொல்கின்றாள். இவையெல்லாம் இல்வாழ்க்கைக்கு அன்பு எத்துணை இன்றியமையாத பண்பு என்பதை அறிவிக்கின்றன. அன்பு இல்லாத வழி இல்லறம் இனிது நடவாது.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

— குறள்.45.

என்பதால் இல்வாழ்க்கையின் பண்பு அன்பு என்பதும் பயன் அறம் என்பதும் சுருங்கச் சொல்லி விளக்கப்பட்டுள்ளன. "இல்லாட்குங் கணவற்கும் நெஞ்சு ஒன்றாகா வழி இல்லறங் கடைபோகாமையின் அன்புடைமை பண்பாயிற்று. அறன் உடைமை பயன் ஆயிற்று" என்று இதனை மேலும் விளக்குகின்றார் உரையாசிரியர் பரிமேலழகர்.

ஆண்மானும் பெண்மானும் பாலைவனத்தின் வழியே செல்லுகின்றன. நீர்வேட்கை மிகுதியால் வருந்துகின்றன. தண்ணீர் கிடைப்பது எளிதாக இல்லை. வெகுதூரம் தேடிச் செல்கின்றன. இறுதியில் ஓரிடத்துச் சிறிது நீர் தேங்கி யிருத்தலை அவை காண்கின்றன. இரண்டும் பருகுவதற்கு அந்நீர் போதாது. ஆண்மான் பருகாவிட்டால் பெண்மான் பருகுமோ? ஆண்மான் என்ன செய்யும்?

தான் நீரைப் பருகாமல் தன் பெண்மானைப் பருகச் செய்ய வேண்டும். எனவே ஒரு நுட்பமான முடிவைக் கண்டு பிடித்தது. தான் வாய்வைத்தும், பருகாமல், பருகுவது போல் நடித்தது. பெண்மான் உண்மையறியாது மகிழ் வுடன் பருகியது. வேட்கை தீர்ந்து உரம் பெற்றது. அது கண்டு ஆண்மான் மகிழ்ந்தது. இவ்வாறு ஒன்றை யொன்று பற்றிக் கொண்டுள்ள அன்பின் சிறப்பை என் னென்பது! இத்தகைய அன்பு இருந்தால்தான் இல் வாழ்க்கையாகிய வண்டி இயங்க முடியும்.

இல்வாழ்க்கையில் கணவனுக்குத் துணை செய்வதே மனைவியின் குறிக்கோள். அதனுல்தான் இல்லத் தலைவி யாகிய இல்லாளை, 'வாழ்க்கைத் துணை' என்கின்ருர் வள்ளுவர். அவ்வாழ்க்கைத் துணை நன்கு அமைந்தால் ஒழிய இல்வாழ்வு சிறவாது. நல்ல வாழ்க்கைத் துணையை அடைவது பெறுதற்கரிய பேறுகளில் ஒன்ருகும். இல்லாள் கண் மனைமாட்சி — நற்குண நற்செய்கைகள் இன்றேல் வீடு எவ்வளவு சிறப்பாக இருப்பினும் பயனில்லை.

வளம் நிறைந்த மன்னனுயினும் வளமேதுமில்லா வறியனுயினும் இல்வாழ்க்கைத் துணையாக நல்ல மனைவி யைப் பெறுதல் இன்றியமையாதது. இல்லற வாழ்வில் தனக்குத் துணையாக நின்று தாங்கும் மனையாளை இழந்து விடின் அதன் பின்னர் வாழ்வு வாழ்வாகாது. ஒருவனும் ஒருத்தியும் பிணைந்து பேணும் வாழ்வில் மனைவியை இழந் தும் கணவன் வாழ முடியுமோ? மனைவியை இழந்தவன் படும் வேதனையை எப்படிச் சொல்வது?

தாயோடு அறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்வு

உற்று ருடன்போம் உடன்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்ருலி யோடெவையும் போம்

என்ற பிற்காலப் பாடலும் மனைவி இறப்பின் எல்லா நலமும் போய்விடும் என்பதை யுணர்த்துகின்றது.

சேரமன்னன் ஒருவன் இருந்தான். சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்துவந்தான். அவன்புகழ் எங்கும் பரவியது. அவனது பெற்ருேர் அவனுக்கிட்ட இயற்பெயரை மக்கள் மறந்தனர். சேரமான், மாக்கோதை என்றெல்லாம் அவனைச் சிறப்பாகப் பொதுப்பெயராலேயே அழைத்துவந்தனர். அவன் பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்து இறுதியில் துஞ்சியபோது (இறந்தபோது) கோட்டம்பலம் என்னும் இடத்தில் இறந்த காரணத்தால் அவனைப் பிற்காலத்தில் சேரமான் கோட்டம்பலம் துஞ்சிய மாக்கோதை என்று குறிப்பிட்டனர்.

அம்மன்னவன் நல்ல நாட்டுவளம் மட்டுமன்றி வீட்டு வளமும் பெற்றிருந்தான் என்பது தெரிகின்றது. அவன் மனைவி பெருங்கோப்பெண்டு — அவள் இயற்பெயரும் அறிகிலோம் — மனை நலம் வாய்ந்தவள். கணவன் கருத்தறிந்து பெண்மை நலம் நிறைந்து சிறந்து விளங்கியவள்.

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்அமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணு வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு

என்று புகழேந்திப் புலவர் தமயந்தியைச் சிறப்பித்துப் பாடியுள்ளவாறு திறமெல்லாம் வாய்ந்து விளங்கினுள்

அப்பெருங்கோப்பெண்டு. அவளைத் தன் துணைவியாகப் பெற்றதை எண்ணி எண்ணிப் பெருமை கொண்டான் அவள் கணவன் சேரமான். அவள் நலத்தால் தன்னைக் காத்துக்கொண்டாள். தற்கொண்ட கணவனைக் காத்துக் கொண்டாள். அதற்குமேல் குடும்பப் புகழையும் உயிர் போலப் பேணி மகிழ்வித்தாள். தன் கணவன் ஏறுபோற் பீடு நடைபோட்டு நடக்கும் வண்ணம் புகழ் சிறந்து விளங்கினாள். அந்தோ! ஒரு நாள் அவள் இறந்து விட்டாள். அன்பின் திறமறியாக் கூற்றம் அவளைத் தன் கணவனிடமிருந்து பிரித்துப் பறித்துக்கொண்டது.

என் செய்வான் மன்னன்? ஏங்கிக் கதறுகின்றான். துடிக்கின்றான். கலங்காத தறுகண்மையுடைய காவலன் கண்ணீர் வடித்துக் கதறுகின்றான். "என்னுயிர் அனையாள் நீங்கிவிட்டனளே! என் செய்வேன்? பட்டு மெத்தை மேலும் பஞ்சணை மேலும் வளர்த்திய அவள் உடலை இன்று விறகு அடுக்கிய நெருப்புப் படுக்கையிற் கிடத்திவிட்டேனே? அவள் இறந்தும் யான் வாழ்வதா? இன்னும் என் உயிர் நீங்கிலதே! என்னுடல் அவளுடலுடன் சேர்ந்து ஒன்றாய் எரியவில்லையே? என் துயரம் வானத்தினும் கடலினும் பெரிதேயாயினும் என்னை அவளுடன் கொண்டு சேர்க்கும் திறம் உடையதாயில்லையே! இன்னும் யான் வாழ்வதா? இது எனக்கு ஏற்ற பண்பாகுமா?" என்று புலம்பினான். அவனது பொங்கி எழும் துன்பத்திலே பிறந்தது பொன்னான கவிதையொன்று :

பாங்குப் பெரிதாயினும் நோய் அளவு எனைத்தே
உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையின்
கள்ளி போகிய களரியம் பறந்தலை

வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து
ஒள்ளழல் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை !
இன்னும் வாழ்வல் ! என்னிதன் பண்பே ?

— புறம்-245.

சேரமான் மனைவியை இழந்தான் ! வருந்தி வருந்தித் துடித்தான். உடன் இறக்க முடியவில்லையே என்று ஏங்கி ஏங்கி நைந்தான். அவனும் பின்னொரு நாள் இறந்திருப்பான். ஆனால் அவன் துன்பத்திலே தோன்றிய சோகக் கவிதை என்றும் இறவாது நின்று புகழ் தருகின்றது. காவலனின் கவிதையாற்றலுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது. இச்சேரமான் வாழ்விலிருந்து நாம் அறியத் தகுவன எவ்வளவோ உள. மனைவாழ்க்கையின் சிறப்பும் பொறுப்பும் மன்னனுக்கும் உண்டு. மன்னனாயினும் மனிதவுள்ளம் உடையனாய் இருத்தல் சிறப்பினும் சிறப்பாகும். உலகில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் இப்படி இணைந்து அன்புவாழ்வு வாழ்ந்தால் உலகத்துக்குத் துன்பம் வராது. அன்பு பொங்கும் ! அறம் பெருகும். வேற்றுமை சாயும். ஒற்றுமை ஓங்கும்.

உணர்ச்சிதான் வாழ்வு ! உணர்ச்சிதான் கவிதை ! ஆம் ! கவிதைதான் வாழ்வு ! வாழ்வே கவிதை ! கவிதையுலகம் என்றும் அழியாது நின்று இன்பம் தருவதாகும். இக்கவிதை இன்பத்துக்கு இணை வேறு எந்த இன்பமும் இல்லை. இஃதே அறிஞர் முடிபாகும். நம் தமிழின் பெருமை யெல்லாம் கவிதைப் பெருமையாகும். தமிழிற் போல் வகைவகையாக யாக்கப்பட்டுள்ள கவிதைகள்வேறு எங்கே யுண்டு ? எம்மொழியில் உள்ளன ? இனிமையும் எளிமையும் பொருண்மையும் நிறைந்த இக் கவிதைகளைப்

பெற்ற நம் தமிழைப் பற்றிப் பாரதியார் பாடிய பாடலை உணர்ந்துபார்த்து உயர்வோமாக!

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்.
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

— பாரதியார்.

முற்றும்